விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டும்

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 30 வியாழக்கிழமை (16.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 332

- பேரவையில் உள்ள அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதை பேரவை தடுக்காது.
- உறுப்பினர்கள் சுயமாக தேர்தலில் போட்டியிடும் சுதந்திரத்தில் பேரவை தலையிடாது.
- தேர்தல் அரசியலில் பேரவை ஈடுபடாது.
- பேரவை தனது கொள்கையை உறுதியோடு முன்னெடுக்கும்.
- தேர்தலில் மக்கள் வழங்கும் தீர்ப்பை பேரவை மதிப்போடு ஏற்கும்.

# தமிழ் மக்கள் பேரவையின் நிலைப்பாடு இதுவே

தமிழ் மக்கள் பேரவை தொடர்பில் கடந்த சில தினங்களாக ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் வெளிவந்த முன்னுக்குபின் முரணான செய்திகள் தொடர்பில் தமிழ் மக்கள் பேரவையின் நிலைப்பாட்டை பேரவையின் ஏற்பாட்டுக் குழு திட்டவட்டமாக தெளிவுபடுத்தியுள்ளதாக பேரவை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் மக்கள் பேரவையின் செயற்பாட்டை குழப்பும் வகையில் சில ஊடகங்கள் செய்திகளை திரிபுபடுத்தி வெளியிட்டுவரும் நிலையில்,

தமிழ் மக்கள் பேரவையின் நிலைப்பாட்டை உறுதி செய்யும் பொருட்டு; பேரவையின் ஏற்பாட்டுக் குழுகூடி, பேரவையின் நிலைப்பாட்டை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதெனவும் இதற்காக தமிழ் மக்கள் பேரவையை மிக விரைவில் கூட்டுவதெனவும் முடிவுசெய்துள்ளது.

தமிழ் மக்கள் பேரவையின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்திய ஏற்பாட்டுக்குழுவானது,

தமிழ் மக்கள் பேரவையில் இடம்பெறும் அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதையோ அன்றி அவை தமக்குள் தேர்தல் கூட்டுச் சேர்வதையோ 23☛

## சுனாமி என ஏற்பட்ட வதந்தியால்
# ஏக்கமடைந்த சிறுமி பரிதாபகரமாக பலி!

(கரணவாய்)

சுனாமி வதந்தியினால் ஏக்கமடைந்த சிறுமி ஒருவர் மரணமடைந்த சம்பவம் வடமராட்சி புலோலி மாலாவத்தை எனுமிடத்தில் நேற்று புதன்கிழமை நண்பகல் இடம்பெற்றுள்ளது.

சுனாமி ஏற்படப்போவதாக ஏற்பட்ட வதந்தியினால் வடமராட்சியின் கரையோரத்தில் உள்ள பாடசாலைகள் நேற்று நண்பகலுடன் மூடப்பட்டது.


இதனையடுத்து பாடசாலையில் இருந்து வீடு திரும்பிய 23☛

## காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில்
# இராணுவத் தளபதியை நீதிமன்றில் ஆஜராகுமாறு இளஞ்செழியன் உத்தரவு



(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் 1996ஆம் ஆண்டு இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நாட்டின் இராணுவ தளபதியை மன்றில் முன்னிலையாகுமாறு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட் 24☛



# புத்தரை பச்சை குத்திய பெண்ணுக்கு அரசால் நட்டஈடு

(கொழும்பு)

புத்த பகவானின் உருவத்தை பச்சை குத்திய பிரித்தானிய பெண் ஒருவரை கைது செய்து தடுத்து வைத்தமையால் அவருக்கு அரசாங்கத்தால் நட்டாடு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தால் பொலிஸாரினால் அவரின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதன் காரண 24☛

# கஜேந்திரகுமார் - சுரேஷ் தேர்தல் கூட்டு பொதுச் சின்னத்தில் போட்டியிட முடிவு
## தேர்தல்கள் ஆணையாளரையும் சந்தித்தனர்



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈழமக்கள் புரட்சிகர முன்னணியும் (ஈ.பி.ஆர்.எல்.எவ்) கூட்டுச்சேர்ந்து பொது அணியாக தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளன.

இது தொடர்பில் இரு தலைவர்களும் நேற் 23☛



# வாள்வெட்டு தொடர்பில் கைதுகள் எதுவுமில்லை
## சோதனை, பாதுகாப்பு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தலைதூக்கியுள்ள வாள்வெட்டு சம்பவங்கள் தொடர்பில் நேற்றைய தினம் பொலிஸார் எவரையும் கைது செய்யவில்லை. எனினும் சோதனை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிந்தது.

மேலும் வீதிகளில் 23☛


# யாழ்ப்பாண கோட்டை பகுதியை இராணுவத்துக்கு கொடுங்கள்
## ஜனாதிபதிக்கு ஆளுநர் கடிதம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் பகுதியில் தனியார் காணிகளில் உள்ள இராணுவத்தினரை யாழ்.கோட்டைக்குள் அனுப்பிவிட்டு தனியாரிடம் அவர்களது காணிகளை கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால 24☛

# பரீட்சைகள் திணைக்கள பதில் ஆணையாளராக சனத் பூஜித நியமனம்



(கொழும்பு)

பதில் பரீட்சைகள் ஆணையாளராக பீ.சனத் பூஜித 24☛

## சித்திரவதைக்கு விசாரணை வேண்டும்
# பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை

(லண்டன்)

இலங்கையில் சித்திரவதைகள் இடம்பெறுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழர்களுக்கான அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் 24☛



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிழக்கு மாகாணத்தில் சுனாமி என வதந்தி

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, சாய்ந்தமருது, கல்முனை, மட்டக்களப்பு உள்ளிட்ட சில பிரதேசங்களில் சுனாமி ஏற்படுவதாக வதந்தி பரவியதையடுத்து அங்கு வசிக்கும் மக்கள் பீதியடைந்துள்ள நிலையில் சற்று அமைதியற்ற சூழல் தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று பனிமூட்டம் அதிகமாக காணப்பட்டதுடன், சில பிரதேசங்களில் உள்ள கிணறுகளில் நீர் மட்டம் குறைந்திருந்ததாகவும், கடல் சற்று தாழ்ந்துள்ளதாகவும் அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டதுடன் கரையோரப் பகுதிகளில் இருந்து பெருமளவு குடும்பத்தினர் வெளியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அங்கு வசிக்கும் மக்கள் சற்று பதற்றமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமி ஏற்படுவதாக வதந்தி பரவியதையடுத்து பாடசாலைகளுக்கு சென்ற பெற்றோர், தமது பிள்ளைகளை அழைத்துச் சென்றதாகவும், இதனால் பல பாடசாலைகள் மற்றும் அலுவலகங்களும் இயங்கவில்லை.

எவ்வாறாயினும் எந்தவொரு இயற்கை அனர்த்தமும் ஏற்படுவதற்கான சாத்தியங்களும் இல்லை என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மக்கள் வீணாக பீதியடைய தேவையில்லை என்றும், சுனாமி ஏற்படுவதாக பரவும் செய்தி வெறும் வதந்தி என்றும் அந்த நிலையம் கூறியுள்ளது. (ம)

## இலங்கை தொடர்பான ஜெனிவா அறிக்கை வெள்ளி

இலங்கை தொடர்பிலான ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை இம்மாதம் 17ஆம் திகதியில் முன்வைக்கப்படவுள்ளதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டிய அம்சங்கள் பிரேரணையாக அறிவிக்கப்படவுள்ளதாகவும தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## மரண அறிவித்தல்கள்

### வைரவன் நவரத்தினம்

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய ஊழியர்)



வாகீஸ்வரி கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், குமரகோட்டம் கோண்டாவில் வடக்கு கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட வைரவன் நவரத்தினம் 15.11.2017 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவன்-சீதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தங்கச்சியின் அன்புக் கணவரும், வனராஜசிங்கம், தர்மகுலசிங்கம் (பல்கலைக்கழக ஓய்வுபெற்ற ஊழியர்), இரத்தினசிங்கம் (பிரான்ஸ்), ஜெயராணி, அருந்தவராணி, வசந்தராணி, வரதராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கமலாம்பிகை, சகுந்தலாதேவி, சாவித்திரி, நித்தியானந்தன், அருமைத்துரை, சிவலிங்கராசா, மகேந்திரராசா ஆகியோரின் மாமனாரும் பேரப்பிள்ளைகளின் பேரனும் பூட்டப்பிள்ளைகளின் பூட்டனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16.11.2017) இன்று பிற்பகல் 01 மணியளவில் குமரகோட்டம், கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம்,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்

தகவல்:-
குடும்பத்தினர்

(1363)

### இளையப்பு சதாசிவம்



யாழ்.பனிக்கர்வளவு திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையப்பு சதாசிவம் அவர்கள் பிரதான வீதி, திருகோணமலையில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையப்பு-வள்ளியம்மா தம்பதிகளின் அன்பு மகனும், அமரர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காசிப்பிள்ளை-துரையம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜயந்தி (France), ஜனாதினி (Canada), தர்ஷினி (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சதீஸ்வரன், சேகரன், கிருஷ்ணமோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுரேன், சஜனி, இஷா, ஷான், கபிஷன், அபிஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.11.2017 ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கடற்கரை இந்து மயான்த்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருகோணமலை

தகவல்:-S.R.துரை

(1361)


"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"



ப்ரத்யங்கிரா சக்திபீடம்

ஸ்ரீ மஹா கால பைரவர்

ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிராதேவி தேவஸ்தானம்

வட்டுக்கோட்டை ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிராதேவி தேவஸ்தானத்தில் பிரதி அமாவாசை தோறும் நடைபெறும்

மஹா நிகும்பலா ஹோமம் (மிளகாய் வற்றல் யாகம்)

நாளை 17.11.2017 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

இவ் யாகம் துர்சக்திகளை நிர்மூலமாக்கி சகல தடைகள்ளயும் நீக்கி வெற்றி தரும்... மிகப்பெரிய வழிபாடு ஆகும்.

மஹா நிகும்பலா ஹோமமானது திருமண தோஷம், ஆயுள்தோஷம், நாகதோஷம், சனி தோஷம் போன்ற அனைத்திற்குமுரிய விஷேடமான சாந்திப் பரிகாரமாகும்.

அனைத்து அடியவர்களும் மிளகாய் வற்றலை கொண்டு வந்து தங்கள் கைகளாலேயே யாகத்தினிலிட்டு அம்பாளின் ஆசிகளைப் பெறுக.

ப்ரத்யங்கிரா சக்தி பீடம்

T:P:-021 225 2020
0764730091

தெல்லிப்பளை வீதி,
வட்டுக்கோட்டை.
(சங்கரத்தை சந்தி அருகாமை)


(1330)


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### பரமாநந்தம் நித்தியானந்தகுமார்

பிறப்பு
26 - 07 - 1951



இறப்பு
27 - 11 - 2016

ஓடி உருண்டது உமைப்பிரிந்து ஓராண்டு
வாடி வதங்குகின்றேன் உமைப்பிரிந்து எண்ணி நிதம்
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எந் நெஞ்சமதில் உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்

யோன் ராச வீதி,
அச்சுவேலி மேற்கு,
அச்சுவேலி

என்றும் நினைவுடன்
மனைவி, நித்தியானந்தகுமார்
யோகாம்பிகை-0765388972

(#-1339)

# போர்க்குற்றங்கள் குறித்து சீனாவுக்கு கவலையில்லை!

## அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு இலங்கைக்கு உறுதியளிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வழங்கும் நிதி உதவிகள் தொடர்பாக, பின்னிணைப்புகள் எவற்றையும் சீனா கொண்டிருக்காது என்றும் மனித உரிமைகள் விசாரணைகளையோ அல்லது போர்க்காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களையோ, முன் நிபந்தனைகளாகச் சேர்க்காது எனவும் சீன வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு உறுதியளித்துள்ளது.

கலாசார, ஊடக பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், சீனாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை குழுவினரிடம் சீன வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஆசிய விவகாரங்கள் திணைக்கள, தெற்காசியப் பிரிவின் செயலாளர் ஸாங்சொங், இத்தகவல்களை வெளியிட்டார்.

இரு நாடுகளுக்குமிடையிலான தொடர்புகள், பல நூற்றாண்டுகள் நீண்டுள்ள கலாசார, வர்த்தக, சமயத் தொடர்புகளை அடிப்படையாகவே கொண்டிருக்கும். எந்த நாட்டுக்கும் வழங்கும் அபிவிருத்தி, தொழில்நுட்ப உதவிகளும், அரசியல் அல்லது தனிநபர்கள் என்ற அடிப்படையில் வழங்கப்படுவதில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில், இலங்கையில் பல பில்லியன் டொலர்கள் பெறுமதியிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைச் சீனா முன்னெடுத்த போதிலும், அவர் மீது விசேடமான விருப்பேதும் கிடையாது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையிலான இந்த அரசாங்கத்துடன், நெருக்கமானதும் சிநேகபூர்வமானதுமான உறவை, சீன அரசாங்கமும் சீனத் தலைவர்களும் பேணுகின்றனர். இந்து சமுத்திரத்தில், இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் மிக்க அமைவிடம் குறித்து நாம் அறிவோம். அதனால்தான், தெற்காசியப் பிராந்தியத்தின் பிரதான பங்காளராக, தனது காலில் இலங்கை நிற்பதற்குத் தேவையான எந்த விதமான உதவிகளையும் நாம் வழங்குகிறோம். உதாரணமாக, கொழும்புத் துறைமுகம் தற்போது, 2 மில்லியனுக்கும் மேற்பட்ட கொள்கலன்களைக் கையாள்கிறது. இது 6 மில்லியன்களாக மிக இலகுவாக அதிகரிக்கப்பட முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# அரச வேலைவாய்ப்பு வழங்காவிட்டால் உள்ளூராட்சி தேர்தலை புறக்கணிப்போம்

## வடக்கு மாகாண பட்டதாரிகள் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

நாட்டிலுள்ள அனைத்து பட்டதாரிகளுக்கும் தேர்தலுக்கு முன்னர் அரச வேலை வாய்ப்புக்களை வழங்காவிட்டால் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தாம் புறக்கணிக்கப் போவதாக வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் எச்சரித்துள்ளனர்.

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் அரச வேலை வாய்ப்பை வழங்க வலியுறுத்தி நேற்று புதன்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தின் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்றை மேற்கொண்டிருந்தனர். இப் போராட்டத்தின் போதே அவர்கள் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தனர்.

வடக்கு மாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகள் சுமார் 3 ஆயிரத்திற்கும் அதிக மானவர்கள் காணப்படுகின்றார்கள். இவர்களுக்கு அரச வேலைவாய்ப்பை வலியுறுத்தி வடக்கு மாகாண பட்டதாரிகள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.

இப்போராட்டமானது மூன்று மாதங்களுக்கும் மேலாக 143 நாட்கள்வரை நீடித்திருந்தது. இதனையடுத்து பயிற்சி அடிப்படையில் அபிவிருத்தி உதவியாளராக இவ் வருடத்திற்குள் நியமிப்பதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை அவ்வாறான எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இதனாலேயே நாம் தற்போது மீண்டும் போராட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் நாட்டில் விரைவில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலுக்கு முன்னர் எமக்கான அரச வேலைவாய்ப்பானது வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படாவிட்டால் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலை வடமாகாண பட்டதாரிகளாகிய நாம் அனைவரும் புறக்கணிப்போம் என தெரிவித்தனர்.

இதேவேளை யாழ். மாவட்ட செயலகத்தின் முன்னால் இடம்பெற்ற இப் போராட்டத்தை தொடர்ந்து பேரணியாக வட மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு சென்று ஆளுநரிடமும் தமது கோரிக்கை தொடர்பான மகஜரினை கையளித்திருந்தனர். (இ-4)

# மகிந்த அணியினரின் கூட்டத்தில் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்பையும் இணைத்து களமிறக்குவதற்கான தீவிர முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த திடீரென கலந்து கொண்டு சமரச முயற்சிகளை முன்னெடுத்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டு எதிரணியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் கூட்டு எதிரணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதில் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த கலந்துகொண்டு எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மைத்திரி மற்றும் மகிந்த தரப்புக்கள் இணைந்து போட்டியிடுவதற்கான தேவை குறித்து வலியுறுத்தினார். எனினும் நேற்று முன்தினம் அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவினால் முன்னெடுக்கப்பட்ட இந்த சமரச முயற்சி வெற்றி பெறவில்லை. (இ-7)

# கொழும்பில் இன்ரபோல் அதிகாரிகளின் கருத்தரங்கு

## பொலிஸ்மா அதிபர் பூஜித தகவல்

(கொழும்பு)

அனைத்துலக பொலிஸ் (இன்ரபோல்) புலனாய்வு அதிகாரிகளுக்கான கருத்தரங்கு ஒன்று அடுத்தவாரம் கொழும்பில் நடைபெறவுள்ளது என பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர்,

"இலங்கையின் பாதுகாப்பு முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஐ.நா, அனைத்துலக பொலிஸ் மற்றும் பாதுகாப்பு அமைப்புகள் இதனை அங்கீகரித்துள்ளன.

இலங்கையில் தீவிரவாதம், வகுப்புவாதம், ஐ.எஸ், மற்றும் பிரிவினைவாதம் உள்ளிட்ட எந்தவொரு அடிப்படைவாதமும் இல்லை என்பதை, அனைத்துலக பொலிஸ் அனைத்துலக அமைப்புகளும் ஏற்றுக் கொண்டுள்ளன.

அதனால் அவர்கள் பாதுகாப்புக் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகளை நடத்துவதற்கு இலங்கையைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளனர்.

அண்மையில் அனைத்துலக பொலிஸின் ஒழுங்கமைப்பில் பல முக்கியமான பாதுகாப்பு கருத்தரங்குகள் இலங்கையில் நடத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இன்னும் பல கருத்தரங்குகள் நடக்கவுள்ளன.

தெற்கு மற்றும் தென் கிழக்காசிய நாடுகளில் மனித கடத்தலுக்கு எதிரான கருத்தரங்கு நேற்று ஆரம்பமானது.

இதுபோல, அனைத்துலக பொலிஸின் புலனாய்வு அதிகாரிகளுக்கான கருத்தரங்கு ஒன்று அடுத்தவாரம் கொழும்பில் நடைபெறவுள்ளது.'

அனைத்துலக அளவிலான மோசமான போதைப் பொருள் மற்றும் மனித கடத்தல், இணையக் குற்றங்கள் இலங்கையில் அண்மைக்காலங்களில் பதிவாகவில்லை" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# தசநாயக்கவை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றவும்

(கொழும்பு)

முன்னாள் கடற்படை பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்கவை வெலிசெர கடற்படை வைத்தியசாலையில் இருந்து சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - கோட்டை நீதவான் நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (இ-7)

# பரீட்சைகள் ஆணையாளர் கல்வியமைச்சுக்கு மாற்றம்

(கொழும்பு)

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டப்ளியூ.எம்.ஜே.புஷ்ப குமார உடன் அமுலுக்கு வரும் வகையில் கல்வியமைச்சுப் பணிகளின் பொருட்டு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கல்வியமைச்சு இந்த தகவலை வெளியிட்டுள்ளது. பரீட்சை வினாத்தாள் ஒன்று வெளியான சம்பவம் தொடர்பான விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கிலேயே இந்த பதவி மாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மலேரியாவை ஏற்படுத்தும் நுளம்புகள் வடக்கில் மட்டும் பரவியது எப்படி?

## நாடாளுமன்றத்தில் டக்ளஸ் கேள்வி



(கொழும்பு)

2016 ஆம் ஆண்டு மலேரியா அற்ற நாடாக இலங்கையை உலக சுகாதார நிறுவனம் அறிவித்து சான்றிதழையும் வழங்கியுள்ளது. ஆனால், மலேரியா நோயைப் பரப்பக் கூடிய நுளம்புகள் மன்னார் பேசாலைப் பகுதியில் கடந்த வருடம் இறுதியில் இனங்காணப்பட்டிருந்ததாகவும், இந்த நுளம்புகள் தற்போது மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் காணப்படுவதாகவும் கூறப்படும் நிலையில், வவுனியாவில் நகர மத்தியிலும், யாழ்ப்பாணத்தில் புகையிரத நிலையத்தை அண்டியதாகவும் இந்நுளம்பு இனம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் தெரிய வருகின்றதே என்று ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, சுகாதார அமைச்சரிடம் ராஜித சேனாரட்னவிடம் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கேள்வி எழுப்பி உரையாற்றிய டக்ளஸ் தேவானந்தா, இலங்கையை மலேரியா அற்ற நாடாகப் பிரகடனப்படுத்தியுள்ள உலக சுகாதார நிறுவனம், கடந்த 2016ஆம் ஆண்டு அதற்கான உத்தியோகபூர்வ சான்றிதழை எமது சுகாதார அமைச்சர் மருத்துவக் கலாநிதி ராஜித சேனாரட்னவிடம் வழங்கியிருந்தது. இந்நிலையில், இந்தியாவில் மிக அதிகளவில் காணப்படுகின்ற "அனோபிலிஸ் ஸ்ரிபன்சி" என்ற நுளம்பு இனமே வடக்கில் காணப்படுவதாக தெரிய வருகின்றது.

எனவே மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் காணப்படுகின்ற மேற்படி நுளம்பு இனம் உரிய முறையில் இனங்காணப்பட்டுள்ளதா? இத்தகைய நுளம்பு இனத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இது வரையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? மேற்படி நுளம்பு இனத்தின் பரவலாக்கங்கள் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் தவிர்ந்த வேறு மாவட்டங்களில் காணப்படுகின்றனவா? என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவிடம் கேள்வி எழுப்பியதுடன், இக் கேள்விகளுக்கான விளக்கங்களையும், எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகளையும் விரைவாக எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (இ-7)

# இந்தியாவின் அசுர பலத்தை சமாளிக்குமா இலங்கை?

## இன்று கொல்கத்தாவில் முதல் பலப்பரீட்சை

இலங்கை - இந்திய அணிகள் மோதும் முதல் டெஸ்ட் இன்று கொல்கத்தாவில் ஆரம்பமாகிறது. அசுர பலத்தில் உள்ள இந்திய அணியை சந்திக்க இலங்கை வீரர்கள் சிரத்தைபட வேண்டியிருக்கும்.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இத தொடரின் முதல் போட்டி இன்று கொல்கத்தாவின் ஈடன் கார்டன்ஸில் ஆரம்பமாகிறது.

**காத்திருக்கும் புஜாரா**

வழக்கம்போல, 'மாரத்தான்' ஆட்டத்தை வெளிப்படுத்த புஜாரா காத்திருக்கிறார். சமீபத்திய ரஞ்சி கிண்ணத்திலும் ஒரு இரட்டை சதம் (எதிர்- ஜார்க்கண்ட்), ஒரு சதம் (எதிர்- குஜராத்) அடித்து சுப்பர் போர்மில் உள்ளார். பங்களாதேஸுக்கு எதிராக கடந்த பெப்ரவரியில் நடந்த டெஸ்டில் (இடம்- ஹைதராபாத்) அணித் தலைவர் ஹோலி இரட்டை சதம் கடந்தார். இதன் பின், நடந்த அவுஸ்திரேலியா, இலங்கை அணிகளுக்கு எதிரான தொடரில் ஒரு அரை சதம் கூட எட்டவில்லை. இதில் இன்று மாற்றம் தர வேண்டிய பொறுப்பு ஹோலிக்கு உள்ளது.

**பலம் இல்லை**


இலங்கை அணியை பொறுத்தவரை இந்திய மண்ணில் ஒரு டெஸ்டில் கூட வென்றது கிடையாது. சமீபத்தில், சொந்த மண்ணில் டெஸ்ட் (3-0), ஒரு நாள் (5-0), 'ரி20' (1-0) தொடரை இந்தியாவிடம் இழந்தது. இப்படி மாறி மாறி சொதப்பியதால் இலங்கை பதிலடி தர எண்ணலாம். இதற்கு ஏற்ப அணியிடம 'பலம்' இல்லை. சமரவிக்ரம, டிக்வெல என இளம் வீரர்களைத்தான் அதிகம் நம்ப வேண்டும். அனுபவம் என பார்த்தால் மத்யூஸ் மட்டும்தான் உள்ளார். 'சகலதுறை வீரரான இவரும் இத்தொடரில் பந்துவீச வாய்ப்பு இல்லாதது அணிக்கு பின்னடைவு தான்.

இருப்பினும், கடந்த பாகிஸ்தான் டெஸ்ட் தொடரை (2-0) வென்ற நம்பிக்கையுடன் உள்ளது. இத்தொடரின் டுபாய் டெஸ்டில் 196 ஓட்டங்கள் எடுத்த ஆரம்ப வீரர் கருணாரத்ன மீண்டும் அசத்தலாம். அணித் தலைவர் சண்டிமல் இந்திய மண்ணில் முதல் முறையாக டெஸ்ட் அணியை வழிநடத்துகிறார். இதில் எப்படி செயல்பாடு இருக்கும் என பொறுத்திருந்து பார்ப்போம்.

**கைகொடுப்பாரா ஹெரத்**

பயிற்சி போட்டியில், இந்திய 'லைவின்' அணியின் 10 விக்கெட்டுக்களை கைப்பற்ற திணறியதால் பந்துவீச்சு பலவீனமாகவே காணப்படுகிறது. 'சுழல்' பந்துவீச்சில் ஹெரத் மட்டும்தான் அணியை தோளில் சுமக்க வேண்டும். கடந்த பாகிஸ்தான் தொடரில் (2 டெஸ்ட் 11, 5 விக்.,) ஜொலித்த இவர் மீண்டும் கைகொடுக்கலாம். டில்ருவன் பெரேரா இடம்பெற்றால், 'சைனாமேன்' பந்துவீச்சாளர் சான்டகன் வாய்ப்பு பெறுவது கடினம்தான். 'வேகத்தில்' லக்மல் விக்கெட் வீழ்த்த போராடத்தான் வேண்டும்.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.கோபாலரட்ணம் காலமானார்



(மட்டக்களப்பு)

சிரேஷ்ட பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலரட்ணம் நேற்று மட்டக்களப்பில் காலமானார். அவருக்கு வயது 87.

இலங்கையின் ஊடக வரலாற்றில் பல நெருக்கடியான காலகட்டங்களில் தனது எழுத்துக்களின் ஊடாக உண்மைகளை வெளிக்கொண்டுவந்த ஊடகப் போராளி எஸ்.எம்.ஜி என்று தமிழ் பத்திரிகை உலகில் அறிமுகமான மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம் 1950களில் வீரகேசரியில் இணைந்து தனது பத்திரிகை தொழிலை ஆரம்பித்த அவர்,


பின்னர் 1956களில் ஈழநாடு பத்திரிகையில் இணைந்து அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியராக நீண்டகாலம் பணியாற்றினார்.

தொடர்ந்து ஈழமுரசு பத்திரிகையின் ஆசிரியராக இருந்தபோது இந்திய இராணுவத்தால் சிறை வைக்கப்பட்டார். "ஈழமண்ணில் ஓர் இந்திய சிறை" என்ற நூலின் ஊடாக அந்த சிறை அனுபவங்களை தொடராக எழுதினார். அதனை கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் வெளியிட்டிருந்தது.

மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த தினக் கதிர் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் ஆலோசகராகவும அவர் கடமையாற்றினார்.

2000ஆம் ஆண்டின் பின்னர் மட்டக்களப்பில் தங்கியிருந்த அவர் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் ஆலோசகராக இருந்து அச்சங்கத்தை வழிநடத்தினார்.

நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும் தொடர்ந்து எழுதிக்கொண்டிருந்த எஸ்.எம். கோபாலரத்தினம் அவர்களின் இறுதிக் கிரியைகள் நேற்றைய தினம் மட்டக்களப்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. (ம-4)




# உலகக் கிண்ணத் தொடரிலிருந்து இத்தாலி 'அவுட்'

## சோகத்தில் நட்சத்திர வீரர் புபானும் விடைபெற்றார்



நான்கு முறை உலகச் சம்பியனான இத்தாலி அணி, உலக கிண்ண கால்பந்து தொடருக்கு தகுதி பெறும் வாய்ப்பை பரிதாபமாக இழந்தது. இந்த சோகத்தில் கோல் காப்பாளரும் அணித் தலைவருமான புபான் ஓய்வை அறிவித்தார்.

ரஷ்யாவில் அடுத்த ஆண்டு (ஜூன் 14- ஜூலை 15) உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது. பிரேசில், ஜப்பான் உள்ளிட்ட அணிகள் பிரதான சுற்றுக்கு முன்னேறி விட்டன. மற்றைய அணிகள் தகுதிச்சுற்றில் விளையாடி வருகின்றன.

ஐரோப்பிய அணிகளுக்கான 2ஆவது தகுதிச்சுற்றுப்போட்டியில் சுவிட்ஸர்லாந்து, குரோஷியா, இத்தாலி உள்ளிட்ட 8 அணிகள் மோதின. இதில் சொந்த மற்றும் அந்நிய மண் என்ற அடிப்படையில் அணிகள் பங்கேற்றன. ஸ்டோக்ஹோமில் நடந்த முதல் சுற்றுப்போட்டியில் இத்தாலி 0-1 என சுவீடனிடம் வீழ்ந்தது.

**இக்கட்டான நிலை**

மிலனில் நடந்த 2ஆவது போட்டியில் அதிக கோல் வித்தியாசத்தில் வென்றால் மட்டுமே, உலக கிண்ணத் தொடரில் இடம்பெற முடியும் என்ற இக்கட்டான நிலையில் இத்தாலி களமிறங்கியது. நான்கு முறை சம்பியன் பட்டம் (1934,38, 82, 2006) வென்ற அணி என்பதால், உள்ளூர் ரசிகர்களும் சான் சிரோ மைதானத்தை நோக்கி படையெடுத்தனர். மொத்தம் 76 ஆயிரம் ரசிகர்கள் குவிந்ததால், எதிர்பார்ப்பு எகிறியது. இரு அணி வீரர்களும் கோல் அடிக்கத் திணறினர். முரட்டு ஆட்டத்தில் இறங்கியதால் இத்தாலி சார்பில் 4, சுவீடன் சார்பில் 5 வீரர்கள் மஞ்சள் அட்டை பெற்றனர். கடைசி வரை இரு அணியினரின் கோல் முயற்சிக்கும் பலன் கிடைக்கவில்லை. முடிவில், போட்டி கோல் எதுவுமின்றி சமநிலையானது.

**60 ஆண்டுக்குப்பின்...**

இதனால், சுவீடன் அணி முதல் போட்டியில் வென்றதன் (1-0) அடிப்படையில் பிரதான சுற்றுக்குள் நுழைந்தது. இத்தாலி அணி 60 ஆண்டுக்குப்பின் உலக கிண்ணத்துக்கு முன்னேற முடியாத அதிர்ச்சியில் ரசிகர்கள் உறைந்தனர். கடைசியாக 1958 இல் சுவீடனில் நடந்த உலக கிண்ணத் தொடருக்கு தகுதி பெறாமல் இருந்தது. ஒட்டுமொத்த உலக கிண்ண அரங்கில், மூன்றாவது முறையாக (1930, 1958, 2018) இத்தாலி வீரர்களின் பங்களிப்பை ரசிகர்களால் காண முடியாமல் போனது.

**ரசிகர்களிடம் மன்னிப்பு**

இத்தாலி அணியின் அனுபவ கோல்காப்பாளர் புபான், (வயது-39) உலக கிண்ணத்தில் விளையாட முடியாத ஏமாற்றத்தில், சர்வதேச கால்பந்து அரங்கிலிருந்து ஓய்வுபெற்றார். தேசிய அணிக்காக கடந்த 20 ஆண்டாக (175 போட்டி ) விளையாடி வந்த இவர், கண்ணீர் மல்க ஓய்வு பெற்றார். தொடர்ந்து 6 உலக கிண்ண போட்டிகளில் (1998, 2002, 06, 10, 14) களமிறங்கிய முதல் வீரர் என்ற சாதனையை எட்ட தவறினார்.

இது குறித்து புபான் கூறுகையில், " உலக கிண்ணத் தொடருக்கு முன்னேற முடியாமல் போனதற்கு மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். இப்போட்டி எனக்கு கடைசியாக அமைந்தது வருத்தமாக உள்ளது. தோல்விக்கு பயிற்சியாளர் கியான் பியரோவை மட்டும் குறை சொல்லக்கூடாது. வீரர்கள் அனைவரும் பொறுப்பேற்க வேண்டும். இது வரை எனக்கு ஆதரவு தந்த அனைவருக்கும் நன்றி. இத்தாலி அணி சரிவிலிருந்து விரைவில் மீண்டு வரும். சிறப்பான எதிர்காலம் அணிக்கு காத்திருக்கிறது," என்றார்.

டானியல் டி ரோசி, அன்ட்ரியா பர்சாக்ளி, சிலானி ஆகிய இத்தாலி வீரர்களும் ஓய்வு பெற்றனர்.

**என்ன காரணம்?**

இத்தாலி அணியின் தலைமை பயிற்சியாளராக கியான் பியரோ வென்ச்சுரா நியமிக்கப்பட்டதுதான் வீழ்ச்சிக்கு வித்திட்டது. இவர் தனக்கு வேண்டிய முன்கள வீரர்களான சிரோ, அன்ட்ரியா பெலோட்டிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். இதனால் திறமைவாய்ந்த லோரன்சோ இன்சைனி, ஸ்ரீபன் எல் ஷாரராவி போன்றோர் 'பெஞ்ச்சில்' உட்கார வைக்கப்பட்டனர். சீனியர் வீரர்களான புபான் (வயது-39), சிலானி (வயது-33), அன்ட்ரியா பர்சாக்ளியை அதிகம் சார்ந்திருந்தார். இவர்கள், கடந்த சில ஆண்டுகளாக கைகொடுக்க தவறிய போதும், இளம் வீரர்களை களமிறக்க முயற்சி எடுக்கவில்லை. இதன் காரணமாக இத்தாலி உலக கிண்ண வாய்ப்பை இழக்க நேரிட்டது.

வென்ச்சுரா கூறுகையில், "தோல்விக்கு மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு வீரரின் செயற்பாட்டிற்கும் மதிப்பு அளிக்கிறேன்," என்றார்.

# வாள்வெட்டு தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது

## - ஆளுநர் ரெஜினோல்ட் கூரே

யாழ் குடாநாட்டில் இடம்பெறும் வாள் வெட்டு சம்பவங்கள் தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது என வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

அவ்வாறான சம்பவம் இடம்பெற்றிருந்தால் பொலிஸ்மா அதிபரிடம் அது தொடர்பில் பேசுவதாகவும் தெரிவித்தார்.

நேற்று ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, குடாநாட்டில் தற்போது அதிகரித்து வரும் வாள்வெட்டு சம்பவங்கள் தொடர்பாக அதை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரிடம் ஏதாவது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதா? என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு தரப்பினர் பொலிஸார் நல்லவர்கள் என்றும் அவர்களின் சேவைகளை பாராட்டியும் கதைக்கிறார்கள், மற்றைய தரப்பினர், அவர்களது குறைகளை மட்டும் தெரிவிக்கிறார்கள். இது தெற்கிலும் நடக்கிறது. இவ்வாறான சம்பவங்களுக்கு நாம் எதுவும் செய்ய முடியாது.

இங்குள்ள பொலிஸ் அதிகாரியிடம் நான் இது தொடர்பில் கேட்டறிந்து கொள்கிறேன் என தெரிவித்தார். (ம-9)

# ‘ஆட்கடத்தலைக் கட்டுப்படுத்த வலுவான சட்டம் வரும்’-சாகல

(கொழும்பு)

இலங்கைக்குள் இடம்பெறும் ஆட்கடத்தல் மற்றும் எல்லைப் பாதுகாப்பு குறித்து புதிய சட்ட வரைவு தயாரிக்கப்பட்டுவரும் அதேவேளை, சிறப்பு நடை முறையொன்றையும் அமுல்படுத்தவுள்ளதாக, சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிரு த்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“இலங்கைக்குள் இடம் பெறும் ஆட்கடத்தல் மற்றும் எல்லைப் பாதுகாப்பு குறித்து புதிய சட்ட ஒழுங்குமுறைகள் தயாரிக்கப்பட்டு வருவதுடன், சிறப்பு நடைமுறையும் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்காக வலுவான சட்டங்கள் தேவைப்படுகிறது. இவ்வாறான வலுவான சட்டங்கள் இல்லாமல் போகும் பட்சத்தில், ஆட்கடத்தல் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவது சிக்கலாக அமையும். எனவே, இதன் ஓர் அங்கமாக, ஆட்கடத்தல்காரர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்கும் முகமாக, விரிவான சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்” என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## காணி விற்பனைக்கு

கந்தாப்படி வீதி நுணாவில் கிழக்கு சாவகச்சேரியில் அமைந்துள்ள 5 பரப்புக் காணி (கிணறும், குழாய்க்கிணறும், பத்துடன்) உடன் விற்பனைக்குண்டு. A9 வீதியில் உள்ள கோபி கடையின் பின்புறம்.

தொடர்புகளுக்கு
T.P-077 123 5931


## மரண அறிவித்தல்

### திருமதி. கஜனி சுபேந்திரன்

[தலைவர் மற்றும் ஸ்தாபக உறுப்பினர் யாழ். இந்து மகளிர் கல்லூரி, பழைய மாணவிகள் சங்கம், (பிரித்தானியக் கிளை)]



யாழ். கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் லண்டன் Clayhall ஐ வதிவிடமாகவும் கொண்ட கஜனி சுபேந்திரன் அவர்கள் 13.11.2017 திங்கட்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் (முன்னாள் யாழ். இந்து மகளிர் கல்லூரி விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்), தனலட்சுமி (முன்னாள் யாழ். போதனா வைத்தியசாலை தாதிமார் விரிவுரையாளர்) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான யாழ். நீராவியடி பிறவுண் வீதியைச் சேர்ந்த செந்திவேல்-சந்திரமணி தம்பதிகளின் அன்பு மருமகளும், சுபேந்திரன் (பழைய மாணவர்- யாழ்.இந்துக் கல்லூரி) அவர்களின் ஆசை மனைவியும், சுஜன், சுஜீபா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கஜேந்திரன் (பழைய மாணவர்- யாழ். இந்துக் கல்லூரி), கௌசலா, வத்சலா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிராவினி, டானியல் ஜெயராஜா, சிறீரவீந்திரா, சுரேந்திரன், றனேந்திரா, துஸ்யந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆரணி, அபர்ணா ஆகியோரின் ஆசை மாமியும் அபிராமி, தானியா, கனிஸ்கன் ஆகியோரின் அருமைச் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.11.2017 ஞாயிற்றுக்கிழமை 10.00 மணியளவில் நடைபெற்று லண்டன் Manor Park இல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

T.P : + 442085509153

சுபேந்திரன் (கணவர்),
பிரித்தானியா

(1304)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1968 – 07 – 17



மறைவு
2016 – 11 – 27

திதி:- 16.11.2017

யாழ். ஆதியாமலை, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

### அமரர். சுப்பையா தர்மகுலராஜா (தர்மு)

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
ஆறமுடியவில்லை எம்மால்
இன்றும் உன் பிரிவால் எம் இதயம் கலங்குகிறது
எம் குடும்ப குல விளக்கு அணைந்ததை
எண்ணி மெழுகாய் உருகுகிறோம்
அளவில்லா அன்பையும் அளக்க முடியாத பாசத்தையும்
அளவில்லாமல் கொடுத்து விட்டு
அரை வயதில் எங்கு தான் சென்றாயோ
உன் புன்சிரிப்பை கண்டு இனிமையான குரலைக் கேட்டு
ஓராண்டு காலம் கலைந்து விட்டதே
காற்றுப் பெருவெளியில் உனைக் காணும்
நாளுக்காய் காத்திருக்கும் நாம்
கடவுளை வேண்டுகிறோம் ஆத்ம சாந்திக்காய்.

(1317)

ஆதியாமலை,
உடுப்பிட்டி.

தகவல்:
சுப்பிரமணியம் இராஜேஸ்வரி (சகோதரி)

## இராசி பலன்

16.11.2017
(ஐப்பசி 30, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 3.21 மணிவரை
சித்திரை பிற்பகல் 4.49 மணிவரை
சுபநேரம் 7.37-9.07 மணிவரை
இராகுகாலம் 1.37-3.07 மணிவரை
சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூரட்டாதி, உத்தரட்டாதி | | ராகு |
| கேது | | | |
| | சனி<br>புத | சூரி, சுக்,<br>குரு, சந் | செவ் |

**மேடம்** நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள், உடல் நலம் சீராகும், போசன சுகமுண்டு.

**இடபம்** குடும்பத்தில சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், எடுத்த முயற்சியிலிருந்து குழப்பங்கள் அகலும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** தேவைகள் பூர்த்தியாகும் நாள், பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**சிம்மம்** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**கன்னி** தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், சுயமுயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள்.

**துலாம்** உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம்.

**தனுசு** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள்.

**மகரம்** எண்ணிய காரியம் எளிதில் நிறைவேறும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்திகரமானதாக அமையும்.

**கும்பம்** அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், குடும்பத்தில் சிறு வாக்குவாதம் ஏற்பட்டு விலகும்.



திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியின் கலை விழாவும் விருந்தினர் கௌரவிப்பும் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசியக் கல்வியிற் கல்லூரி பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம் கலந்து கொண்டார். கல்விச் சேவையைப் பாராட்டி முன்பள்ளி சமூகத்தினரால் கல்வி சாகரம் விருந்து வழங்கி கௌரவிக்கப்பட்டது. (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)




சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயத்தில் 2017ஆம் ஆண்டு 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டுவிழா அண்மையில் பாடசாலையின் அதிபர் திருமதி.ம.குணபாலன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன், சிறப்பு விருந்தினராக சங்கானை கோட்டக் கல்விப்பணிப்பாளர் நோபேர்ட் உதயகுமார் கலந்துகொண்டார், கௌரவ விருந்தினர்களாக வைத்திய கலாநிதி திருமதி சு.அகிலன், பிரதேச கிராம அலுவலர் சிவரூபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.




குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீது 1993 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 13 ஆம் திகதி இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் பலியான 9 பேரின் நினைவு தினம் நேற்று குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. கடந்த 13 ஆம் திகதி அதிகாலை 5.45 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஞாபகார்த்த நினைவாலயத்தில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றதோடு பொதுமக்கள் தீபம் ஏற்றி உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

(படங்கள்: பாஷையூர் செய்தியாளர்)

# தமிழ்த் தினப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான கௌரவிப்பு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயம் நடத்தும் தமிழ்த்தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும் பாராட்டு நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலயத்தில் பணியாற்றி கடந்த ஆண்டு ஓய்வு பெற்ற தமிழாசிரியர்களான ச.மார்க்கண்டு, ம.மகேசன், க.சுரேந்திரா, இ.ஜீவேந்திரா, ந.திருஞானசம்பந்த மூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் வலயப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் பல இடம் பெறவுள்ளன. (இ-7)

# 10 ஆம் குறுக்கு வீதி 10 வருடங்களாக புனரமைக்கப்படவில்லை



(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை வளன்புரம் 10 ஆம் குறுக்கு வீதி கடந்த 10 வருடகாலமாக புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாக காணப்படுவதால் இவ் வீதியால் பயணம் செய்யும் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குட்படுவதாக விசனம் வெளியிட்டுள்ளனர்.

இவ் வீதித் திருத்தம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

எனவே வீதித் திருத்தம் தொடர்பில் இனியாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-107)

# நெறியாளர் குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கொத்தணி புதிய நெறியாளர் குழு தெரிவுக்கூட்டம் கடந்த 7 ஆம் திகதி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன் தலைமையில் இடம்பெற்றது.




இதில் கூட்டுறவுச் சங்க கொத்தணியின் புதிய நெறியாளர் குழுத் தலைவராக செ.செல்வராசா, உப தலைவராக பா. விஜயகுலசிங்கம் செயலாளராக பெ. தேவராசா மற்றும் நெறியாளர் குழு உறுப்பினர்களாக நா. கணேசன், ஆ.நடராசா, சி.நந்தகுமார், கி.உமாசுதன், ப.சிறீராமச்சந்திரன், நி.சத்தியராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-10)

# ஐயப்பன் விரதம் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)


கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலயத்தின் வருடாந்த கார்த்திகை மகரஜோதி ஐயப்ப விரதம் நாளை 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் ஆரம்பமாகும்.

சுவாமிமார்களுக்கு மாலை அணிவித்து விரதம் ஆரம்பமாகி தொடர்ந்து அறுபது நாட்கள் பூஜைகள் இடம் பெறவுள்ளன.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆலயத்தின் மஹோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் இடம்பெறவுள்ளன.

19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-10)

# சுகாதாரச் சீர்கேட்டுடன் வடிகான்




(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட கொழும்புத்துறை வளன்புரம் கடற்கரை வீதியிலுள்ள வடிகால்கள் பல வருடங்களாக தூர்வாரப்படாமல் இருப்பதால் வடிகானுக்குள் மழைநீர் தேங்கி சுகாதாரச் சீர்கேடு நிலவுவதோடு டெங்கு நுளம்புப் பெருக்கம் அதிகரித்திருப்பதாகவும் பிரதேச மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொண்டு வடிகானை விரைவில் புனரமைத்துத்தர நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-107)

# வரவு-செலவு திட்டம் தொடர்பான உண்மை நிலவரம் இருட்டடிப்பு

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

இந்த முறை வரவு-செலவுத் திட்டத்தில் சில விடயங்களை அரசாங்கம் பொதுமக்களிடமிருந்து மறைத்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அநுராதபுரம் - கலென்பிந்துனுவெவ பிரதேசத்தில நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டபோதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

புதிய அரசியலமைப்பு திருத்தத்தை தேவையேற்படின் திருத்தங்களுக்கு உட்படுத்த முடியும். உறுதிமொழிகளை நிறைவேற்றாது வழங்காத உறுதிமொழிகளை நல்லாட்சி அரசாங்கம் நிறைவேற்றி வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொருட்களின் விலைகள் மிகவும் உயர்ந்த அளவில் உள்ளதாகவும், விவசாயிகளுக்கு தமது உற்பத்திகளை விநியோகிக்க முடியாத நிலை தோன்றியிருப்பதாகவும் மகிந்த குற்றம் சுமத்தினார்.

இந்தநிலையில் நாட்டில் படிப்படியாக மோசடி வலையமைப்பு ஒன்று தோற்றம் பெற்றுள்ளதாகவும் சட்டம் முறைகெட்டு இருப்பதாகவும் பொதுமக்களின் வாழ்க்கை அழுத்தம் நிறைந்ததாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# பெற்றோல் தட்டுப்பாட்டுக்கு பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகளே காரணம்!

## விசாரணை அறிக்கையில் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட பெற்றோல் தட்டுப்பாட்டுக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளே காரணம் என்று மூன்று அமைச்சர்களைக் கொண்ட விசாரணைக் குழு தெரிவித்துள்ளது.

அண்மையில் ஏற்பட்ட பெற்றோல் தட்டுப்பாடு குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, சரத் அமுனுகம, அநுர பிரியதர்சன யாப்பா ஆகியோரைக் கொண்ட குழுவொன்றை ஜனாதிபதி நியமித்திருந்தார்.

இந்தக் குழு தமது அறிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று முன்தினம் கையளித்துள்ளது.

இந்த அறிக்கையிலேயே, பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கு, வழக்கமாகப் பேணப்படும் எரிபொருள் கையிருப்பை பேணவில்லை என்றும் நெருக்கடி ஏற்படப் போவதை அவர்கள் அறிந்திருந்தார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதுபற்றி கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் சம்பிக்க ரணவக்க, 'சராசரி நாள் ஒன்றில், இலங்கையில் 120,000 மெற்றிக் தொன் எரிபொருளை கையிருப்பில் வைத்திருக்கும் வசதிகள் உள்ள போதிலும், நாளொன்றுக்கு சராசரியாக 2000 மெற்றிக் தொன் எரிபொருளே தேவைப்படுகிறது.

நெருக்கடி வரவுள்ளதை யாரும் உயர்மட்டத்துக்கு தெரியப்படுத்தவில்லை. நெருக்கடி ஏற்படப் போவது ஒக்டோபர் 17ஆம் திகதியே எனப் பலர் அறிந்திருந்தனர். எனினும், அதனை எவரும் நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தவில்லை.

இது ஒரு சதித் திட்டமாக இருக்கலாம் என்ற சந்தேகங்களை நிராகரிப்பதற்கில்லை.

இந்த நெருக்கடிக்குக் காரணமான குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டறிய பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும்.

நான் 100 நாள் திட்டத்தில் அமைச்சராக இருந்த போது, எமது எரிபொருள் கையிருப்பு அளவை 60 ஆயிரம் மெற்றிக் தொன்னில் இருந்து 90 ஆயிரம் மெற்றிக் தொன்னாக அதிகரிக்கப்பட்டது.

லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் 15 ஆயிரம் தொன் எரிபொருளை சேமிக்கும் வசதி கொண்டது. மேலதிகமாக 8000 மெற்றிக் தொன் எரிபொருளை சேமிக்கும் வசதிகளும் உள்ளன" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்




செல்வன்.

## ரஞ்சித்குமார் சாகித்தியன்

கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலையில் கல்வி கற்று 2017ஆம் ஆண்டு தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு இன்றைய பிறந்த நன்னாளில் பாராட்டி வாழ்த்துவதோடு இன்னும் பல கலைகளில் சிறந்து விளங்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மோகன் வீதி,
காளி கோவிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

வாழ்த்துவோர்,
அம்மப்பா இமானுவேல், மாமன்மார்: எலின்டன், சுஜிந்தன், ஜெயரூபன், ஜெயப்பிரசாத், சிந்துஜன்

(1356)



சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து)
பதிவு இல-J/1594 பதிவு திகதி-11.03.1972

# பதவி வெற்றிடம்

**01. பதவி - இலிகிதர் (01)**

| | |
|---|---|
| குறியீட்டு இல. | - 302/13 (13/2015 இன்படி) |
| சம்பள அளவுத் திட்டம் | - 14230-120X10-130X10-16730.00 |
| வயதெல்லை | - 18-45 வரை |
| பால் | - ஆண்/பெண் |

**தகைமைகள்:**

அ. கூட்டுறவுப் பணியாளர் 14வது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15ஆவ்து சம்பளத் திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. க.பொ.த(சா.த) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச்சங்கமொன்றின் எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**02. பதவி - இலிகிதர் (01)**

| | |
|---|---|
| குறியீட்டு இல. | - 302/14(13/2015 இன்படி) |
| சம்பள அளவுத் திட்டம் | - 13875-115X10-125X10-16275.00 |
| வயதெல்லை | - 18-45 வரை |
| பால் | - ஆண்/பெண் |

**தகைமைகள்:**

அ.கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16ஆவது சம்பளத் திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ.க.பொ.த(சா.த) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

01.கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02.சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
03.கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04.முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னரும் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி- 30.11.2017**

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை சங்கத் தலைமைக்காரியாலயத் தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் இலிகிதர் (302/13) பதவிக்கான விண்ணப்பம் அல்லது இலிகிதர் (302/14) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு **"தலைவர் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், டச்சு வீதி, சாவகச்சேரி"** எனும் முகவரிக்கு 30.11.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்,**
**டச்சு வீதி, சாவகச்சேரி.**
**16.11.2017**

(C-396)

**பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,**
**கூட்டுறவுச் சேவையிலுள்ள**
**தலைவர்.**



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா:31
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:BSc, MED/ பிரதி அதிபர்
தொ.இ: B/7977

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
சூரிசெவ் 5 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:A/L/லண்டன் NOT PR
தொ.இ: B/7978

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 175cm
தகைமை/தொழில்:MA/ அரசதொழில்
தொ.இ: B/7981

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 18
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:A/L/லண்டன் NOT PR
தொ.இ: B/7982

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்:உத்தராடம்
கி.பா: 96 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
தொ.இ: G/5787

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்:சித்திரை
கி.பா: 14 செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc, SOR
தொ.இ: G/5788

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 23 செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MSc/ பொறியியலாளர் அவுஸ்ரேலியா
தொ.இ: G/5789

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்:பூராடம்
கி.பா: 38 செவ் 7 இல்
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/5791

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# பெண்தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதார செயற்பாடுகளை முன்னேற்ற செயற்றிட்டங்கள்

## முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**பெண்தலைமைத்துவக் குடும்பங்களினுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேறிய 42 ஆயிரத்து 926 குடும்பங்களில் 6ஆயிரத்து 246 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளடங்குகின்றன.

அதாவது முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 6 ஆயிரத்து 246 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் 2ஆயிரத்து 296 மாற்றுத் திறனாளிகளும் வாழ்ந்து வருவதாக மாவட்டச் செயலகத்தின் புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதாரத் செயற்பாடுகள் தொடர்பில் மாவட்ட அரச அதிபர் கருத்துத்தெரிவிக்கையில்,

மாவட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்ற வீட்டுத் திட்டங்கள், வாழ்வாதாரத் திட்டங்கள், என்பவற்றில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான செயற்றிட்டங்களை வைத்து அதிகளவான குடும்பங்கள் தமது வருமானத்தைப் பெருக்கி தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்கின்றனர்.

தொடர்ந்தும் வருகின்ற திட்டங்களில் இவ்வாறு பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் முன்னுரிமை அடிப்படையில்தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# மரப்பொந்தில் இருந்த குண்டு வெடித்து குடும்பஸ்தர் உயிரிழந்தார்

(பூநகரி)

பூநகரி பிரதேசக் கிராஞ்சியிலுள்ள பிருந்தாவனம் எனும் தென்னந்தோட்டத்தில் நாகபாம்பை அடித்து அருகிலிருந்த பாரிய மரப் பொந்தினுள் போட்டு தீ மூட்டிய வேளை மரப் பொந்தினுள் ஏற்கனவே இருந்த குண்டு வெடித்ததில் நான்கு பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இச் சம்பவத்தில் கிராஞ்சியைச் சேர்ந்த நாதன் சற்குணராஜா (வயது-57) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 5.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

பிரஸ் தாப நபர் பாம்பை அடித்துப் பொந்தினுள் போட்டு தீ மூட்டிய வேளை அதனுள் இருந்த குண்டு வெடித்துள்ளது.

இதனை அடுத்து குடும்பஸ்தர் கிளிநொச்சி அரசினர் வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை ஒரு மணியளவில் உயிரிழந்தார்.

இது விடயம் தொடர்பில் நாச்சிக்குடா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (2-84)

# தேசிய வாசிப்பு மாதப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு பரிசளிப்பு

(கண்டாவளை)

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் முரசுமோட்டை பொது நூலகத்தினால் நடத்தப்பட்ட வாசிப்பு மாதப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபையின் முரசுமோட்டை பொதுநூலகத்தின் 2017ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் கண்டாவளைப் பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன், கரைச்சிப் பிரதேச சபையினுடைய செயலாளர் கணேசன் கம்சநாதன் உள்ளிட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2-315)




# பூநகரி பிரதேச சபைக்கான இலட்சனையை வரைந்து அனுப்புக!

## ஆர்வமுள்ள அனைவரிடமிருந்தும் கோரப்படுகின்றது

(பூநகரி)

பூநகரி பிரதேச சபைக்கான இலட்சனையொன்றை வரைந்து அனுப்பிவைக்குமாறு ஆர்வமுள்ள அனைவரிடமிருந்து பூநகரி பிரதேச சபை செயலாளர் கோரியுள்ளார்.

இலட்சணையை உருவாக்கும் போது பூநகரி வளங்கள், கலை பண்பாடுகள், உள்ளடங்கப்பட்டதாக இருக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

சிறந்தது என தெரிவு செய்யப்படும் இலட்சணை தெரிவாகும் என அவர் அறிவித்துள்ளார்.

இதற்கான முடிவுத் திகதி டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-84)

# கசிப்புடன் கைது செய்யப்பட்ட குடும்பஸ்தர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படாமல் விடுவிப்பு

(பூநகரி)

பூநகரி முக்கொம்பன் பிரதேசத்தில் கசிப்பு காய்ச்சியும் விற்பனை செய்தும் வந்த இரு பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தரை அவரது மனைவி வழங்கிய இரகசியத் தகவலையடுத்து பூநகரி பொலிஸார் முக்கொம்பன் பகுதிக்கு சென்று கசிப்புடன் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மறுநாள் பிரஸ்தாப நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படாமல் விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரது விடுதலையை எதிர்த்து அப்பகுதி மாதர் சங்கத்தை சார்ந்த 25 இற்கு மேற்பட்ட பெண்கள் கையொப்பமிட்டு அவரை மீண்டும் கைது செய்யுமாறு கோரி கடிதமொன்றை பூநகரி பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் கையளித்தனர்.

அத்தோடு இக் கடிதத்தின் பிரதிகளை யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கு இவ் விடயம் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (2-84)

# பிளாஸ்ரிக் போத்தல் சேகரிக்கும் போட்டி பாடசாலை மட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது

(கிளிநொச்சி)

தேசிய கழிவு சுகாதார முகாமைத்துவச் செயற்றிட்டத்தில் பாடசாலை மாணவர்களது பங்களிப்பைப் பெறும் நோக்குடன் பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்களை சேகரித்து சூழலைப் பாதுகாக்கும் செயற்றிட்டம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உளநலப் பிரிவால் பாடசாலை மட்டத்தில் முன்னெடுக்கப்பட உள்ளது. வெற்று பிளாஸ்ரிக் போத்தல் சேகரிக்கும் போட்டியாக நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இப் பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்கள் மாவட்ட வைத்தியசாலையின் தொழில்வழி சிகிச்சை அலகில் பெறப்படவுள்ளது.

இவ் வருடம் கிறிஸ்மஸ் விழாவில் கிறிஸ்மஸ் மரம் அமைக்கப்படவுள்ளது. இதனை வெற்றிகரமாகச் செயற்படுத்த கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச சபைகளின் அனுசரணை பெறப்பட உள்ளது.

அத்துடன் வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுசரணையும் பெற்றுக் கொள்ளப்பட உள்ளது.

இப் போட்டி தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற மாவட்ட வைத்தியசாலையின் உளநலப் பிரிவு உத்தியோகத்தர் கே.ஆரூரனுடன் 077 572 3474 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது

இப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பாடசாலைகளும் பங்கு கொள்ள முடியும். எல்லா வகையான எல்லா நிறத்திலுமான பிளாஸ்ரிக் போத்தல்களும் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படும். போட்டியின் முடிவுத் திகதி 27.11.2017 ஆகும்.

பிரதேச சபைகளின் வாகனங்களது உதவியுடன் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் பாடசாலைகளுக்கு நேரில் வந்து பிளாஸ்ரிக் கழிவுகளைப் பெற்றுக் கொள்வார்கள்.

போட்டியில் வெற்றி பெறும் பாடசாலைக்கு கற்றல் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும்.

முதல் பரிசு 7000 ரூபா. இரண்டாம் பரிசு 5000 ரூபா. மூன்றாம் பரிசு 3000 ரூபா.

தலா 1000 ரூபா வீதம் 5 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை, போத்தல்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பரிசில் வழங்குவது தீர்மானிக்கப்படும்.

பரிசில்கள் 16.12.2017 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நடைபெற உள்ள கிறிஸ்மஸ் மர அங்குரார்ப்பண நிகழ்வில் வைத்து வழங்கப்படும்.

ஆரோக்கியமான உளநலத்திற்கு மாசற்ற சூழல் எனும் தொனிப்பொருளிலான இந்த கிறிஸ்மஸ் மரம் ஒரு மாத காலத்திற்கு பொது மக்கள் பார்வையிடுவதற்காக காட்சிக்கு வைக்கப்படும். (2)

# பாடசாலைகளுக்கு சமுகமளிக்காது வீட்டிலிருந்த ஏழு மாணவர்கள் சிறுவர் இல்லங்களில் ஒப்படைப்பு

(கண்டாவளை)

பூநகரி பிரதேசத்தில் பாடசாலைகளுக்கு செல்லாது மற்றும் ஒழுங்கற்ற வரவுகளைக் கொண்ட 7 மாணவர்கள், மாவட்ட சிறுவர், நன்னடத்தை உத்தியோகத்தர்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் பொலிஸார் ஆகியோர் இணைந்து நீதிமன்ற கட்டளைக்கு அமைவாக நடத்திய தேடுதலின் போது பிடிக்கப்பட்டு நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதவான் அறையில் நீதவான் ஏ. ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதில் 4 மாணவர்களை செஞ்சோலை சிறுவர் இல்லத்திலும் 3 மாணவர்களை ஆரோகணம் சிறுவர் இல்லத்திலும் வைத்து பராமரிக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டது. (2-315-84)

# முல்லைத்தீவு மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு ஆளுநர் ஆராய்வு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட மக்கள் வடக்கு மாகாண ஆளுநரிடம் கொண்டு சென்ற முறைப்பாடுகளை ஆராயும் விசேட நடமாடும் சேவை நேற்று முன்தினம் முற்பகல் பதினொரு மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரை முல்லைத்தீவு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயினது தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் ஆளுநரது செயலாளர், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர், மாகாண காணி ஆணையாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட மாவட்ட செயலக உயரதிகாரிகள், புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு, மணலாறு ஆகியவற்றின் பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம அலுவலர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், முறைப்பாடுகளை செய்த மக்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்னிலையில் ஆராயப்பட்டது.

இதன் இறுதியில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட வடக்கு மாகாண ஆளுநர்,

முல்லைத்தீவு மாவட்ட மக்களால் என்னிடம் கொண்டுவரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் பொருட்டு மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட பிரதிநிதிகள் அனைவரையும் அழைத்து மேற்படி பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்தோம். இதில் காணிப்பிரச்சினை, குடிநீர் பிரச்சினை, கல்விப்பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து தீர்வுகள் எட்டப்பட்டன. அத்தோடு அடுத்த ஆண்டிலேயே வடக்கு மாகாணத்துக்கு வரவு-செலவுத்திட்டத்தில் பல்வேறு நன்மைகள் கிடைக்கவுள்ளது எனவும் தெரிவித்தார்

முல்லை. மாவட்டத்திலிருந்து மக்களால் அனுப்பப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைவாக 42 முறைப்பாடுகளில் வீடு, காணி போன்ற முறைப்பாடுகளில் 20 முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

இதில் 18 பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வடக்கு மாகாண ஆளுநரினால் மக்களுக்கு நேரடியாக தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளது. (2-281)

# இரணைதீவில் காணி அடையாளப்படுத்தி அளவிடும் பணி விரைவில் நிறைவுபெறும்

## பூநகரி பிரதேச செயலாளர் தெரிவிப்பு

**(கண்டாவளை) கிளிநொச்சி இரணைத்தீவில் காணி அடையாளப்படுத்தி அளவீடு செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் 25ஆம் திகதியே நிறைவடையும் என பூநகரிப் பிரதேச செயலாளர் எஸ்.கிருஸ்ணேந்திரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் அதிக கடல் வளம் கொண்ட இரணைதீவு இது வரை விடுவிக்கப்படாது கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து வருவதனால் இங்கே வாழ்ந்த குடும்பங்கள் இது வரை மீள்குடியேற அனுமதிக்கப்படாத நிலையில் முழுங்காவில் இரணைமாதா நகர் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த மே மாதம் முதலாம் திகதி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் ஏழு மாதங்களாக நேற்று வரை தொடர் கவனயீர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ஏற்கனவே கடற்படையினர் இணங்கிக் கொண்டதற்கமைவாக பொதுமக்களின் காணிகளை அடையாளப்படுத்தி அளவீடு செய்யும் நடவடிக்கைகள் கடந்த மாதம் முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பில் பூநகரி பிரதேச செயலாளரிடம் தொடர்புகொண்டு வினவியபோது, பொதுமக்களின் காணிகளை அடையாளப்படுத்தி அளவீடு செய்யும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் குழு அங்கு சென்று காணிகளை அடையாளப்படுத்தி அளவீடு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

எதிர்வரும் 25ஆம் திகதியளவில் அதனுடைய பணிகள் நிறைவடையும் என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப்பணிகள் நிறைவு பெற்றதன் பின்னர் இரணைதீவுக்கு கள விஜயம் ஒன்றினை மேற்கொண்டு அதன்பின் குறித்த பகுதிகளை விடுவிக்குமாறு பாதுகாப்பு அமைச்சுக்கு கடிதத்தினை அனுப்பவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# முல்லையில் 1921 மில்லியன் நிதியில் இவ்வாண்டு அபிவிருத்தி வேலைகள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்திக்கு இவ்வாண்டு 1921.17 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்று அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் மீள்குடியேற்றத்தின் பின்னர் பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக இம் மாவட்டத்தில் வாழும் மக்களின் 61 சதவீதமானோர் விவசாயத்தையும் 17 சதவீதமானோர் கடற்றொழிலையும் 22 சதவீதமானோர் ஏனைய தொழில்களையும் வாழ்வாதாரத்தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் மீள்குடியேற்றத்தின் பின்னர் விவசாயக் குளங்களைப் புனரமைத்தல், வீதிகள் புனரமைத்தல் உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்தல், கடற்றொழில் சார் கட்டுமானங்கள் போன்ற செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டு ஆறாயிரத்து 547 வேலைத்திட்டங்கள் 1921.17 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை மேற்படி நிதியில் 1410.21 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை கடந்த ஆண்டிலே மூவாயிரத்து 270.11 மில்லியன் ரூபா நிதியில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)




# நிரந்தரக்கடை தொகுதியை அமைக்குமாறு கண்டன பேரணி

## கிளிநொச்சி அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு








(கிளிநொச்சி)

கிளிநொச்சிசேவைச்சந்தை பல்பொருள் மற்றும் அழகு சாதனப்பொருட்கள் விற்பனை உரிமையாளர்கள் கண்டனப்பேரணியொன்றை நடத்தியிருந்தனர்.

இப்பேரணி நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி சேவைச் சந்தையிலிருந்து ஆரம்பமாகி ஏ-9 வீதியூடாக நகர்ந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்தை சென்றடைந்து நிரந்தரக் கடைத் தொகுதியொன்றை அமைத்துத் தருமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இது குறித்து வர்த்தகர்கள் கருத்து தெரிவிக்கையில்,

கிளிநொச்சி சந்தைக்கு 2011 ஆம் ஆண்டு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு 274 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு நூறு மில்லியன் ரூபாவில் மீன் மரக்கறி கடைகளுக்கு நிரந்தர கட்டடம் அமைக்கப்பட்டது. ஏனையவியாபாரத்துறைகளுக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு மிகுதியாக இருந்த 174 மில்லியன் ரூபா அன்றைய கரைச்சிப் பிரதேச சபையின் நிர்வாகத்திற்கும் அதிகாரிகளுக்கும் இடையே காணப்பட்ட அதிகார இழுபறி காரணமாக மீண்டும் திறைசேரிக்கு நிதி திருப்பி அனுப்பப்பட்டது.

ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 80 மில்லியனை வீட்டுத்திட்டத்திற்கு பயன்படுத்தியிருக்கின்றார்கள். இதனை வர்த்தகர்களாகிய நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம்.

ஆனால் கிளிநொச்சியை பொறுத்தவரை எமக்கு மாடிக் கட்டடத் தொகுதி கடைகள் பொருத்தமற்றது. எனவே வர்த்தகர்களாகிய எங்களால் ஏற்கனவே தங்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட மாதிரி வியாபார நிலையங்களுக்கான கட்டடங்களை அமைத்து தரவேண்டும் என பதேங்களின் கோரிக்கை எனவும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த மாவட்ட அரச அதிபர் வர்த்தகர்களின் கோரிக்கையை தான் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைப்பதாக தெரிவித்தார். (2-277-312)

# கிராம சக்தி மக்கள் மரம் நாட்டும் செயற்றிட்டம் கள்ளிக்குளத்தில் ஆரம்பிப்பு

(குருமன்காடு)

கிராம சக்தி மக்கள் மரம் நாட்டும் செயற்றிட்டம் வவுனியா கள்ளிக்குளம் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள சிதம்பரம் கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்றுக்காலை அப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படும் கிராம சக்தி மக்கள் மரம் நாட்டும் செயற்றிட்டத்தின் கீழ் வவுனியா பிரதேச செயலக பிரிவின் ஆரம்ப நிகழ்வே கள்ளிக்குளத்தில் இடம்பெற்றது.



இவ் வேலைத்திட்டத்தின் கீழ் மாவட்ட திட்டப்பணிப்பாளர் எஸ்.கிருபாசுதனினால் மாமரக்கன்று நாட்டி வைக்கப்பட்டது.

இதையடுத்து நிகழ்வில் கலந்துகொண்டவர்களும் மரக்கன்றுகளை நாட்டிவைத்ததையடுத்து கலந்துகொண்ட கிராமமக்கள் 200 பேருக்கும் பயன் தரும் நல்லின மாமரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. (2-250)

### யானைக்கூட்டம் அட்டகாசம்

# வீட்டின் சுவர் சேதம் 30தென்னைகள் அழிப்பு



(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தை, புதிய வேலர் சின்னக்குளம் கிராமத்தினுள் புகுந்த யானைக் கூட்டத்தின் அட்டகாசத்தால் தற்காலிக வீடு சேதமடைந்துள்ளதுடன் சுமார் 30 தென்னை மரங்கள் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியாவில் அண்மைக் காலமாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் யானைகளின் அட்டகாசத்தால் அப்பகுதி மக்கள் பல்வேறு இடையூறுகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந் நிலையில் அதிகாலை புதிய வேலர் சின்னக்குளம் கிராமத்தினுள் நுழைந்த யானைக்கூட்டமொன்று அங்கிருந்த தென்னந்தோட்டமொன்றினுள் புகுந்து காய்க்கும் பருவத்தில் இருந்த தென்னை மரங்களை அழித்துள்ளதுடன், பயன்தரு மரங்களையும் சேதப்படுத்தியுள்ளன.

இதேவேளை அப்பகுதியில் இருந்த தற்காலிக வீடொன்றின் சுவரை தாக்கி உடைத்துள்ள யானை பல காணிகளினுள் இருந்த தென்னை மரங்களையும் சேதப்படுத்தியுள்ளது.

தேங்காயின் விலையேற்றம் அதிகமாகவுள்ள நிலையில் தென்னை மரங்களை யானை அழிப்பது தொடர்பில் அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டதுடன் தமது கிராமத்திற்கு வரும் யானைகளை கட்டுப்படுத்துவதற்கு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுகின்றனர். (2-250)

# குழந்தைகள், கர்ப்பவதிகளுக்கு காலவதியான திரிபோசா பக்கெற்றுக்கள்

(பரந்தன்)

கிளிநொச்சியில் கர்ப்பவதி தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ள காலாவதியாகும் நிலையில் திரிபோசா பக்கெற்றுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியின் உருத்திரபுரம், சிவநகர், உதயநகர் ஆகிய பல கிராமங்களில் இவ்வாறு காலாவதியாகும் நிலையில் திரிபோசா பக்கெற்றுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

13-11-2017 அன்று வழங்கப்பட்டுள்ள திரிபோசா பக்கெற்றுகள் 15-11-2017 அன்று காலாவதியாகும் திகதியில் காணப்படுகின்றன. இது குறித்து, சில பெற்றோர்கள் மற்றும் கர்ப்பவதிகள் கேள்வி எழுப்பிய போதும் அவற்றை கவனத்தில் எடுக்காத உத்தியோகத்தர்கள் இவை மட்டுமே இருப்பதாகவும் விரும்பினால் பெற்றுக்கொள்ளுங்கள் இல்லையெனில் விட்டுச் செல்லுங்கள் என தெரிவித்துள்ளனர்.

வறுமைக் கோட்டின் கீழுள்ள பல குடும்பங்கள் வேறு வழியின்றி காலாவதியாகும் திரிபோசாவை பெற்றுச் சென்றுள்ளனர். இந்த திரிபோசா பக்கெற்றுகள் குறைந்தது இரண்டுவாரங்களுக்குவது பயன்படுத்தப்படும் எனவும் பெற்றுக்கொண்டவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-312)

# யாழ்.பல்கலை.வவுனியா வளாகம் வலுப்படுத்தப்படும்

• பயிற்சிக் காலப்பகுதியின் போது மாணவர் உதவு தொகையாக மாதமொன்றுக்கு 3,500 ரூபா வழங்குவதற்கான செலவின ஏற்பாடு.

• பயிற்சிநெறி முடிவடைந்ததன் பின்னர் தொழில் செய்யும் பொழுது 6 மாதக் காலப்பகுதிக்கு ரூபா 6,000 வரைக்குமான மாதாந்த கொடுப்பனவும் தொழில் வழங்குநரினால் மேலதிகமாக 10,000 ரூபாவும் வழங்குவதற்கான ஏற்பாடு.

154. இளைஞர் படை பல்வேறு திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்துவருவதுடன் அதற்காக ரூபா 2,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படுவதன் மூலம் வலுப்படுத்தப்படும். (ரூ. 2,000 மில்.)

155. இரத்மலானை மற்றும் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு மேலதிகமாக மாத்தறையில் தொழில்நுட்பக் கல்லூரியொன்று நிர்மாணிக்கப்படுவதுடன் பதுளை, கண்டி, திருகோணமலை, இரத்தினபுரி மற்றும் அநுராதபுரம் ஆகிய இடங்களில் சுவிட்சர்லாந்து மற்றும் ஜேர்மனி அரசாங்கங்களிடமிருந்து தொழில்நுட்ப உள்ளீடுகளை பெற்றுக் கொள்வதன் மூலம் ஐந்து தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சிப் பாடசாலைகள் அடுத்த மூன்று வருடங்களுக்குள் தாபிக்கப்படும். இந்த தொழில்நுட்ப பாடசாலைகள் உபசார முகாமைத்துவம் சிவில், மின்சார மற்றும் இயந்திரவியல், பொறியியல் துறைகளில் உலகத் தரத்திலான பயிற்சிகளை வழங்கும். (ரூ. 1,000 மில்.)

156. இளைஞர்களுக்கு உயர்தர பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதற்காக கிண்ணியாவில் பல்கலைக்கழகக் கல்லூரியொன்று தாபிக்கப்படும். (ரூ. 50 மில்.)

சமூக உட்கட்டமைப்பு

157. சபாநாயகர் அவர்களே, வரலாற்றில் என்றுமில்லாத வகையில் கல்வி, சுகாதாரம் மற்றும் இளைஞர் வலுவூட்டல் உள்ளடங்கலாக சமூக உட்கட்டமைப்புக்கு எதிர்பாராதளவு வள ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு எமது அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி என்பவற்றின் முதலீடு மாத்திரம் 2018 இல் ரூபா 325 பில்லியனுக்கு அதிகமாகக் காணப்படும். எமது உபாயமானது கட்டடங்கள் மீதான முதலீடுகளிலிருந்து விலகி தரம் மேம்பாடு மீதான முதலீடாக அமைவதால் சிறந்த பங்கிலாபங்களை பெற்றுத் தருகின்ற மிகவும் நிலைபேறுடைய உபாயமொன்றாக காணப்படும். இந்த வகையில் பின்வருவனவற்றை நான் முன்மொழிகின்றேன்.

"13 வருடக் கல்வி"

158. சபாநாயகர் அவர்களே, ஆரம்பத்திலேயே இதனை உங்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகின்றேன். மாணவர் காப்புறுதித் திட்டத்தினை அறிமுகப்படுத்தல் மற்றும் எமது மாணவர்களுக்கான டெப்லட் கணனி வழங்குதல் போன்ற எமது வாக்குறுதிகளை நாம் நிறைவேற்றியுள்ளோம். கல்வியென்பது நாட்டின் அபிவிருத்தி உபாயத்தின் மிக முக்கியமான பகுதி என்பதனால் அதன் அபிவிருத்திக்கான வள ஒதுக்கீட்டில் எவ்வித விட்டுக்கொடுப்பும் காட்டமுடியாது என பல்வேறு சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி மற்றும் பிரதமரினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்த வகையில் கல்விக்கான வரவு- செலவுத்திட்ட ஏற்பாடானது "13 வருடக் கல்வி" நோக்கத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.



## நீலப்பசுமை பட்ஜெட்-2018

அத்தகைய மறுசீரமைப்பு நாட்டிலுள்ள விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் மருத்துவ பாடங்களுக்கும் இப்பாடங்கள் தவிர்ந்த ஏனைய பாடங்களை கற்கின்ற பட்டதாரிகளுக்குமிடையிலான விகிதாசார முன்னேற்றத்தினை மையமாகக் கொண்டுள்ளது. அந்த வகையில்:

159. தேசிய கல்வி நிறுவகம் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியில் முக்கியமானமறுசீரமைப்புக்கான கேள்விகளை நிவர்த்தி செய்யும் வகையில் மீள் கட்டமைப்பு செய்யப்படும். இம்மறுசீரமைப்பின் நோக்கம் பின்வருவனவற்றினை உள்ளடக்கியிருக்கும்.

160. விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் மருத்துவ (STEM Subjects) பாடங்களை கற்பிப்பதற்கான முறைமை மாற்றியமைக்கப்படும்.

161. உயர்தரப் பாடங்களின் சேர்க்கையில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் பொறியியல் மற்றும் மருத்துவம் ஆகிய துறைகளுடன் கலைத் துறையினையும் (STEM+A) இணைத்த பட்டப்படிப்பினை தொடரும் வகையில் உத்தேச மாற்றங்கள் மேற்கொள்ளப்படும். நவீனகால தேவைக்கேற்ப அவசியமான திறமைகளுடன் மாணவர்களை உருவாக்குகின்ற உயர்தரப் பாடங்களில் இசையுடன் கணித்தத்தையும் நாடகத்துடன் விஞ்ஞானத்தையும் உயர்தரப்பாடமாக தோற்றுவதற்கு இதன் மூலம் மாணவர்கள் அனுமதிக்கப்படுவர்.

162. பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டு செயன்முறைகள் "13 வருடக் கல்விக்கு" ஏற்றாற்போல் மறுசீரமைக்கப்படும்.

163. தேவைக்கேற்றவாறு பாடத்திட்டத்தினை மறுசீரமைப்பு செய்யும் நோக்கத்துடன் மாணவர்களுக்கு கணித உபகரணங்கள் வழங்கப்படுவதுடன் கணித ஆய்வு கூடங்களும் தரமுயர்த்தப்படும்.

164. சர்வதேச மாணவர் மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் மாணவர்களின் அறிவு மற்றும் ஆற்றல்களினை உலக தரத்தில் பரிசோதிப்பதுடன் ஒப்பிடுகையில் எமது கல்வி முறைமையினை பரிசோதிப்பதற்கான வசதிகளை அறிமுகப்படுத்தும். (ரூ. 25 மில்.)

165. நாளைய தொழில் வாய்ப்புக்களுக்காக எமது மாணவர்களை தயார்ப்படுத்துவதற்கு மரபியல், குறியீட்டியல், ரோபோ தொழில்நுட்பம் மற்றும் நனோ விஞ்ஞானம் ஆகிய துறைகள் எமது பாடசாலை பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

166. ஆசிரியர்களுக்கான தொடரான உயர்தொழில் திறன் அபிவிருத்தி (Continuous Professional Development) தொடர்ந்து முன்னெடுக்கப்படும். (ரூ. 1200 மில்.)

167. "ஸ்மார்ட் வகுப்பறை" எண்ணக்கருவானது இலத்திரனியல் பாடப் புத்தகங்களின் அபிவிருத்தியுடன் எமது டிஜிட்டல் மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் பகுதியொன்றாக வலுப்படுத்தப்படும். (ரூ. 755 மில்.)

168. ஆங்கில மொழியில் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக விசேட நிலையமொன்று மகரகம கல்விக் கல்லூரிகளில் தாபிக்கப்படும். தேசிய கல்வி நிறுவகம் மற்றும் உத்தேச நிலையத்திற்கிடையில் வளங்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் தேசிய கல்வி நிறுவகத்திற்கு அண்மையில் அமைக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ரூ. 50 மில்.)

169. விசேட தேவையுடைய மாணவர்களின் ஆசிரியர்களுக்கான பயிற்சியினை நாம் வலுப்படுத்தவிருக்கின்றோம். இப்பின்னணியில் ஹபிட்டிகம மற்றும் அட்டாளைச்சேனை கல்விக்கல்லூரிகள் விசேட தேவையுடையவர்களுக்கான பயிற்சி வசதிகளைக் கொண்டதாக தரமுயர்த்தப்படும். (ரூ. 25 மில்.)

170. தேசிய கல்வி கல்லூரிகளில் மாணவர்களுக்கான கொடுப்பனவு மாதமொன்றுக்கு சராசரியாக3,500 ரூபாவிலிருந்து ஆகக் கூடியது 5,000 ரூபாவாக அதிகரிக்கப்படும். (ரூ. 50 மில்.)

"உலகத் தரத்திலான பல்கலைக்கழகக் கல்வி"

171. சபாநாயகர் அவர்களே, பல்கலைக்கழகக் கல்வியில் அரசாங்க முதலீடு அதிகரிக்கப்பட்ட போதிலும் எமது பல்கலைக்கழக முறைமையினை சீர்குலைக்கின்ற பல்வேறு சக்திகள் தொழிற்படுவதுடன் எமது திறமைசாலிகளினது எதிர்காலத்தினை கேள்விக்குறியாக்கி கப்பம் கோருகின்ற நிலை ஏற்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயமொன்றாகும். உண்மையில் எமதுநாட்டின் எதிர்காலம் கப்பம் கோருவதனை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றது.

எவ்வாறாயினும் இந்த அரசாங்கம் எமது இளைஞர்களுக்கான புதிய வாய்ப்புகளை திறப்பதற்கு தீர்மானித்துள்ளது. அடுத்த இரண்டு வருடங்களில் தொழில்நுட்பம், பொறியியல், மருத்துவம் உள்ளடங்கலான விசேட துறைகளிலும் முகாமைத்துவம் மற்றும் சமூக விஞ்ஞானங்களில் தெரிவு செய்யப்பட்ட பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களிலும் பல்கலைக்கழக அனுமதியினை 20 சதவீதத்தினால் அதிகரிக்கின்ற அதேவேளை, பல்கலைக்கழகங்களின் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்படும்.

172. மருத்துவக் கல்வியினை விரிவாக்குவதற்கு வயம்ப, சப்ரகமுவ, மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகங்களில் அரச மருத்துவ பீடங்கள் தாபிக்கப்படும். (ரூ. 1250 மில்.)

173. றுகுணு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தினை விரிவாக்கும் வகையில் கராப்பிட்டிய வைத்தியசாலையில் பேராசிரியர் பிரிவொன்று தாபிக்கப்படும். (ரூ. 50 மில்.)

174. ரஜரட்டை, றுகுணு, சப்ரகமுவ, களனி, கொழும்பு, ஸ்ரீஜயவர்த்தனபுர மற்றும் தென்கிழக்கு ஆகிய பல்கலைக்கழகங்களில் 7 புதிய தொழில்நுட்ப பீடங்கள் உருவாக்கப்படுவதுடன் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் முறைமை தொழில்நுட்பம் போன்ற பாடங்களைக் கொண்டதாக தொழில்நுட்ப பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் விரிவாக்கப்படும். (ரூ. 5,000 மில்.)

175. றுகுணு பல்கலைக்கழகத்தில் கப்பற்றொழில் மற்றும் கடற்படை கற்கைகளுக்கான நிலையமொன்று தாபிக்கப்படும். (ரூ. 250 மில்.)

176. தரவு விஞ்ஞானம், பாரிய தரவு பகுப்பாய்வுகள், நிபுணத்துவக் கற்கைகள், வியாபார பகுப்பாய்வு போன்ற புதிய கற்கை துறைகளை உள்ளடக்குகின்ற கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னெடுப்பிற்கு நாம் ஒத்துழைப்பு வழங்கவிருக்கின்றோம். (ரூ. 250 மில்.)

177. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமானது சகல வசதிகளையும் கொண்ட நூலகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிலையம் என்பவற்றினை அமைப்பதன் மூலம் மேலும் வலுப்படுத்தப்படும். (ரூ. 200 மில்.)

178. முறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட தனியார் நிறுவனங்களில் உள்வாரி சம்பிரதாய மற்ற பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை சேர்த்துக்கொள்வதன் மூலம் அரச பல்கலைக்கழகங்களுக்கு வசதிகள் வழங்கப்படும்.

179. உயர்கல்வி ஏற்பாடுகளின் தராதரம் மற்றும் தரத்தினை பேணுவதற்கு அத்தியாவசியமான, சுயாதீனமான தர நிர்ணயம் மற்றும் சான்றுப்படுத்தல் பொறிமுறையொன்று தாபிக்கப்படும். (ரூ. 25 மில்.)

180. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடமானது சர்வதேச போட்டியாளர்களுக்கு எதிரான அளவுகோல் ஒன்றாக பல்கலைக்கழகத்தினை மாற்றுவதற்கு வியாபார பாடசாலைகளின் உயர் கல்லூரிகளுக்கான அமைப்பின் சான்றுப்படுத்தலினை பெற்றுக் கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும். ஏனைய பல்கலைக்கழகங்களும் இதனைப் பின்பற்றுவதற்கு நான் ஊக்கமளிக்கின்றேன்.

181. காப்புரிமையினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அவற்றுக்கான உரிமம் வழங்குதலில் காணப்படும் வரையறைகளை நீக்குதல். அத்தகைய காப்புரிமைக்கான உரிமத்தைக் கொண்டுள்ள கம்பனிகளில் பங்குடமையினைக் கொண்டிருத்தல் ஆகிய தேவைகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கான நியதிச்சட்டங்கள் திருத்தப்படும்.

182. வளமிக்க சுதேச மருத்துவ முறைமையொன்றினை நாம் கொண்டிருந்த போதிலும் அது புறக்கணிக்கப்பட்டு அழிவினை எதிர்நோக்கியுள்ளது. இந்த வகையில் சுதேச மருத்துவ துறைக்கான பட்டப்பின் படிப்பு நிறுவகமொன்று தாபிக்கப்படும். (ரூ. 40 மில்.)

(11 ஆம் பக்கம் பார்க்க...)

# போரால் அதிகளவில் பாதிப்புக்களை எதிர்கொண்ட வடக்கு-கிழக்கில் பல வீட்டுத் திட்டங்கள் ஆரம்பம்

183. மகாபொல புலமைப் பரிசில் திட்டத்திற்கான தகைமைபெறு குடும்ப வருமான எல்லையினை ஆண்டொன்றுக்கு ரூபா 300,000 இலிருந்து ரூபா 500, 000 ஆக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். இதன் மூலம் மேலதிகமாக 3,000 மாணவர்கள் நன் மையடைவர். (ரூ. 75 மில்.)

184. அனைத்து பல்கலைக்கழக மாணவர்களுக்கும் சுகாதார காப்புறுதித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும். (ரூ. 100 மில்.)

### விளையாட்டுத் துறை செயற்பாடுகள்

185. சபாநாயகர் அவர்களே, விளையாட்டுத்துறையானது சமூக ஒற்றுமை மற்றும் சமூக மூலதனம் ஆகிய இரண்டு விடயங்களை ஏற்படுத்துவதுடன் சர்வதேச போட்டிகளில் நாட்டின் அடைவுகளுக்கான அங்கீகாரத்தினையும் பெற்றுக் கொடுக்கின்றது.

186. சமுதாய விளையாட்டுக்களை பிரபல்யப்படுத்தும் நோக்கத்துடன் முன்னோடி நடவடிக்கையாக நாடு முழுவதிலும் காணப்படும் 100 கிராமிய விளையாட்டு மைதானங்களை நாம் அபிவிருத்தி செய்யவுள்ளோம். (ரூ. 100 மில்.)

187. மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் திறமைமிக்க இளம் விளையாட்டு வீரர்களின் குழுமமொன்றினை உருவாக்குவதற்கு திறன் இனங்காணல் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் முடியுமென்பதுடன் தேசிய குழுமத்திற்கான பிரதான ஊட்டல் மையமாக இது காணப்படும்.

இந்த வகையில் மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் விளையாட்டுத் துறையினை ஊக்குவிப்பதற்கு மாவட்ட மற்றும் மாகாண விளையாட்டரங்குகளை தரமுயர்த்துவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். இந்த வகையில் திகன விளையாட்டரங்கு, பொலநறுவை மாவட்ட விளையாட்டரங்கு மற்றும் கல்முனையில் சந்தாங்கேணி விளையாட்டரங்கு என்பன அடுத்த இரண்டு வருடங்களின் போது அபிவிருத்தி செய்யப்படும். பாழடைந்த நிலையில் காணப்படும் மாத்தளை ஹொக்கி மைதானம் புனரமைக்கப்படும். (ரூ. 400 மில்.)

188. தெற்காசிய விளையாட்டு விழாவினை 2020 இல் இலங்கையில் நடத்துவது எமக்குப் பெருமையாகும். தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள தியகம சர்வதேச விளையாட்டுத் தொகுதி தரமுயர்த்தப்படுவதுடன் ஓட்டப் பாதைகளை மீள மைத்தல், விளையாட்டு போட்டிகளுக்கான கிராமமொன்றினை அபிவிருத்தி செய்தல், பொழுதுபோக்கு பிரதேசம், தசைநார் எலும்பு சத்திரசிகிச்சை பிரிவு என்பன இதில் உள்ளடங்கும். எமது தேசிய மட்ட விளையாட்டு வீரர்களில் பெரும்பாலானவர்களுக்கான பயிற்சி மைதானமாக அமையவுள்ள தியகமயில் விளையாட்டுப் பாடசாலை மற்றும் கல்வி நிலையமொன்று தாபிக்கப்படும். (ரூ. 1500 மில்.)

189. சுகததாச உள்ளக விளையாட்டரங்கு நவீனமயப்படுத் தப்படுவதுடன் அரச தனியார் பங்களிப்புடன் முகாமை செய்யப்படும். சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கேளிக்கை நிகழ்வுகள் என்பவற்றினை கவரக்கூடியதாக இது காணப்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (ரூ. 100 மில்.)

190. சுகததாச வெளியக விளையாட்டரங்கில் பார்வையாளர் அரங்கு மற்றும் ஓட்டப்பாதைகள் சர்வதேச தராதரங்களுக்கமைவாக தரமுயர்த்தப்படும். (ரூ. 1200 மில்.)

191. மனித செயலாற்றுகை ஆய்வுகூடம் சகல வசதிகளுடன் கூடிய உபகரணங்களுடன் உருவாக்கப்படும். (ரூ. 75 மில்.)

192. செயலூக்கி போதைப் பொருட்கள் நாட்டின் விளையாட்டுத் துறையிலும் ஊடுருவியுள்ளது. இது வெட்கப்படக்கூடிய விடயமொன்றாகும். இந்த வகையில் ஊக்கமருந்து பாவனைக்கெதிரான தேசிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்கும் போதைப்பொருள் பரிசோதனை மற்றும் ஆராய்ச்சி ஆய்வுகூடமொன்றினைத் தாபிப்பதற்கும் நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். (ரூ 25 மில்.)

193. எமது கிராமங்களிலுள்ள இளைஞர்கள் சிறந்த விளையாட்டுகளுக்கு கவரச் செய்வதில் விளையாட்டுப் பாதணிகளுக்கான செலவினம் முக்கியமான தடையாகக் காணப்படுகின்றது என நான் விளங்கிக் கொண்டேன். எனவே, விளையாட்டுப் பாதணிகளின் இறக்குமதி மீது விதிக்கப்படும் சுங்கத் தீர்வையற்ற ஏனைய வரிகளை நீக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

194. ஆசிய வெற்றிக் கிண்ணப் போட்டிகள், துணை ஒலிம்பிக் போன்ற சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற எமது வீரர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்கவிருக்கின்றோம். (ரூ. 50 மில்.)

### ஆரோக்கியமிக்கதொரு தேசம்

195. சபாநாயகர் அவர்களே, எமது அரசாங்கத்தினால் சுகாதாரத் துறைக்கான முதலீடு குறிப்பிடத்தக்களவு மேற்கொள்ளப்படுகின்றது. மருந்துப் பொருட்களை குறைந்த விலையில் வழங்குவோம் என்ற வாக்குறுதியினை நாம் நிறைவேற்றியுள்ளோம். 2018 இல் ரூபா 200 பில்லியனை நாம் ஏற்கனவே ஒதுக்கீடு செய்துள்ளதுடன் சுகாதாரத் துறையினை மேலும் வலுப்படுத்துவதற்கு அதிகமான வளங்களை ஒதுக்கீடு செய்துள்ளோம்.

196. நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பெரும்பாலும் காணப்படுகின்ற சிறுநீரக நோய் அதிகரிப்பினை கவனத்திற்கொண்டு பொலநறுவை, அநுராதபுரம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் அதி நவீன Extra –Corporeal Shoke Wave Lithotripsy (ESWL) இயந்திரங்கள் மூன்றுடன் விசேட சிறுநீரகத் தொகுதிகளும் தாபிக்கப்படும். (ரூ. 450 மில்.)

197. குறிப்பாக சிறுவர்களுக்கு மத்தியில் காணப்படும் தொற்றாத நோய்களின் ஆபத்து அதிகரிப்பினை கையாள்வதற்கு சுகாதார கல்விப் பணியகத்தின் செயற்பாடுகளை நாம் வலுப்படுத்தவுள்ளோம். அந்த வகையில் சிறுவர் நீரிழிவு, ஆஸ்துமா நோய் போன்ற தொற்றல்லாத நோய்களின் ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பதற்கு சுகாதாரக் கல்விப் பணியகம் கல்வி அமைச்சுடன் இணைந்து பணியாற்றும். சிறுநீரக நோய், தலசீமியா மற்றும் எச்.ஐ.வி. எயிட்ஸ் நோய் கண்டறிதல் செயன்முறை மேலும் வலுப்படுத்தப்படும். (ரூ. 100 மில்.)



## நீலப்பசுமை பட்ஜெட்-2018

198. சிறுவர்களுக்கு மத்தியில் நீரிழிவு மற்றும் உடற்பருமன் நோய்களைக் குறைப்பதற்கு தற்பொழுது இடம்பெற்றுவரும் முயற்சிகளுக்காக அமுல்படுத்தப்படும் வகையில் குடிபானங்களில் கலந்துள்ள சீனி கிராமொன்றுக்கு 50 சத உற்பத்தித் தீர்வையொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

199. கராப்பிட்டிய புற்றுநோய்ப் பிரிவு மேலும் வலுப்படுத்தப்படும். அத்துடன் மட்டக்களப்பு மற்றும் இரத்தினபுரி வைத்தியசாலைகளில் புற்றுநோய் அலகுகளை நாம் தாபிக்கவிருக்கின்றோம். (ரூ. 300 மில்.)

200. அரசாங்க மருந்தகங்களின் ஆரம்ப சுகாதார பராமரிப்பு மேலும் வலுப்படுத்தப்படும். (ரூ. 100 மில்.)

201. காசல் வீதி மகளிர் வைத்தியசாலையில் உதவியளிக்கப்பட்ட இனப்பெருக்க சிகிச்சை நிலையமொன்றும் கொழும்பு, கண்டி மற்றும் அநுராதபுரத்தில் உயர் தரத்திலான விசேட மகப்பேற்று நிலையங்கள் மூன்றும் தாபிக்கப்படும். (ரூ. 275 மில்.)

202. பொலநறுவை வைத்தியசாலையில் மகப்பேற்று மற்றும் குழந்தைப் பிரசவ வாட்டுத் தொகுதி நிர்மாணிக்கப்படும். (ரூ. 50 மில்.)

203. சீமாட்டி றிஜ்வே வைத்தியசாலையில் இருதய மற்றும் அவசர பராமரிப்பு தொகுதியொன்றினையும் இருதய சிகிச்சைப் பிரிவினையும் நாம் ஆரம்பிக்கவுள்ளோம். சிற்றிதய முன்னெடுப்பு (Little Heart Initiative) திட்டத்திற்கு உதவிய அனைவருக்கும் நான் நன்றி கூற விரும்புகின்றேன். (ரூ. 400 மில்.)

204. மொறட்டுவை மற்றும் தெனியாய பிரதேச வைத்தியசாலைகளுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதன் மூலம் தரமுயர்த்தப்படும் அதே வேளை, பேருவளை வைத்தியசாலை நோய்ப் பராமரிப்புப் பிரிவுகள், ஆய்வுகூடங்கள், இரத்த வங்கி மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி என்பன உள்ளடங்கலாக தரமுயர்த்தப்படும். (ரூ. 375 மில்.)

205. தற்பொழுது மிகவும் நெரிசலாகக் காணப்படும் மாத்தறை புதிய மாவட்டப் பொது வைத்தியசாலை மகப்பேற்று, சிறுவர் சிகிச்சைப் பிரிவு, மருத்துவ மற்றும் நிர்வாகப் பிரிவுகளை கம்புறுகமுவைக்கு மாற்றுவதன் மூலம் மறுசீரமைக்கப்படும். (ரூ. 150 மில்.)

206. பரந்தளவிலான உணவு சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு முறைமையொன்று தொடர்புடைய நிரல் முகவர்களுடன் இணைந்து அபிவிருத்தி செய்யப்படும். (ரூ. 25 மில்.)

207. தாதியர் பயிற்சிக் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் முன்னேற்றப்படும். (ரூ.300 மில்.)

208. சபாநாயகர் அவர்களே, மக்களுக்கு மத்தியில் வயது வேறுபாடின்றி காணப்படும் தற்கொலை, சுய தீங்கிழைப்பு சம்பவங்கள் மற்றும் சமூக விரோத நடவடிக்கைகள் தொடர்பாக தினமும் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில் நாட்டில் உளவி யல் மருத்துவ பராமரிப்பு மேம்பாட்டுக்கு நாம் ஒத்து ழைப் பு வழங்கவிருக்கின்றோம். (ரூ. 25 மில்.)

209. மகரகம பல் மருத்துவ நிறுவகம் மற்றும் இரத்தினபுரியில் வாய் சுகாதார பராமரிப்பு அலகு என்பன சிறந்த வசதிகளுடன் வலுப்படுத்தப்படும். (ரூ. 300 மில்.)

210. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சகல வசதிகளுடன் கூடிய பாலியல் நோய்கள் மற்றும் எச்.ஐ.வி. எயிட்ஸ் நோய்களுக்கான விசேட அலகொன்று தாபிக்கப்படும். (ரூ. 25 மில்.)

211. சுகாதார சேவையின் இணைந்த பகுதியொன்றாக தற்பொழுது காணப்படும் சுவசெரிய அம்புலன்ஸ் சேவைக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும். (ரூ. 750 மில்.)

212. சுகாதாரம் மற்றும் அதனுடன் இணைந்த ஆராய்ச்சிகளை வலுப்படுத்துவதற்கு தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்.(ரூ. 75 மில்)

213. அழகு சாதனப் பொருட்கள் மற்றும் தனியாள் பராமரிப்பு உற்பத்திகளில் இறக்குமதிக்குத் தேவையான தரம் மற்றும் தராதரங்களுக்கான ஒழுங்கு விதிகள் வெளியிடப்படும்.

214. மொத்த மதுபானப் பாவனையில் 49 சதவீதமானது சட்ட ரீதியற்ற முறையில் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் 85 சதவீதமானவை வன் மதுபானமாக நுகரப்படுகின்றது. எவ்வாறாயினும், பெரும்பாலான நாடுகளில் வன் மதுபான நுகர்வினை ஊக்கம் குன்றச் செய்யும் வகையிலும் மதுபானத்தின் உள்ளடக்கத்திற்கேற்பவும் வரிக்கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. மதுசார உள்ளடக்கம் மற்றும் அதன்வகை என்பவற்றினைக் கொண்ட சூத்திரமொன்றின் அடிப்படையில் வரிக்கட்டமைப்பு ஒழுங்குபடுத்தப்படும். மேலும், 2018 ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் மதுபானம் மீது மேலதிக தேசக் கட்டுமான வரி விதிக்கப்படும்.

(தொடரும்)

பாரதம்

# இலஞ்சம் கைமாறியது குறித்து ஊழல் தடுப்புபடை விசாரணை

## டி.ஐ.ஜி.ரூபா கோரிக்கை

(பெங்களூர்)

பெங்களூர் சிறையில் சசிகலாவுக்கு சொகுசு வசதிகள் வழங்கியதில் இலஞ்சம் கைமாறியது குறித்து ஊழல் தடுப்பு படை விசாரணை தேவை என்று டி.ஐ.ஜி. ரூபா கோரிக்கை விடுத்துள்ளார்.

பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டுள்ள அ.தி.மு.க. (அம்மா) அணி பொதுச்செயலாளர் சசிகலாவுக்கு சிறையில் சொகுசு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதாகவும், இதற்காக சிறைத்துறை டி.ஜி.பி.யாக இருந்த சத்தியநாராயண ராவ் ரூ.2 கோடி இலஞ்சம் வாங்கியதாகவும் சிறைத்துறை டி.ஐ.ஜியாக இருந்த ரூபா குற்றம்சாட்டினார்.



இதுபற்றிய அறிக்கையை கடந்த ஜூலை மாதம் அவர் டி.ஜி.பி.சத்திய நாராயணராவ், கர்நாடக அரசின் தலை மைச் செயலாளர், கர்நாடக தலைமை டி.ஜி.பி., ஊழல் தடுப்பு படை அதிகாரி ஆகியோருக்கும் அனுப்பி வைத்தார்.

இதனை தொடர்ந்து சிறைத் துறையில் பணியாற்றிய சத்திய நாராயணராவ், ரூபா ஆகியோர் பணி இடமாற்றம் செய்யப்பட்டனர். சத்திய நாராயணராவ் தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டார். ரூபா, டி.ஐ.ஜி. அந்தஸ்திலேயே பெங்களூர் வீதிப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து பிரிவு ஆணையாளராக பணியாற்றி வருகிறார்.

இதுகுறித்து ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி வினய்குமார் தலைமையில் உயர்மட்ட குழுவினர் சிறையில் பணியாற்றிய அதிகாரிகள், பொலிஸார் மற்றும் கைதிகளிடம் விசாரணை நடத்தி அந்த அறிக்கையை கர்நாடக அரசிடம் தாக்கல் செய்தனர்.

அதில் சிறையில் சசிகலாவுக்கு சொகுசு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது உண்மை தான் என குறிப்பிடப்பட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இருப்பினும், ரூ.2 கோடி இலஞ்சம் பெறப்பட்டதா? என்பது குறித்து விசாரணை குழுவினர் எந்த விசாரணையையும் மேற்கொள்ளவில்லை எனவும், அது பற்றிய விபரங்கள் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை எனவும் கூறப்படுகிறது. இதுகுறித்து சிறைத்துறை டி.ஐ.ஜியாக இருந்த ரூபா கூறுகையில், 'ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையிலான குழுவினர் அரசிடம் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் சசிகலாவுக்கு சிறையில் சொகுசு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு இருப்பதை உறுதி செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனாலும் இந்த விவகாரத்தில் கைமாற்றப்பட்ட லஞ்சம் குறித்து விசாரணை நடைபெறவில்லை. ஏனென்றால் விசாரணை குழுவுக்கு அந்த அதிகாரம் இல்லை. லஞ்சம் கைமாறியது குறித்தும், சிறையில் எவ்வளவு காலம் சொகுசு வசதிகள் வழங்கப்பட்டன என்பது குறித்தும் ஊழல் தடுப்பு படை அல்லது பொலிஸார் விசாரணை நடத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# எல்லை தாண்டிச்சென்ற வ

## வீரர் மீது சக வீரர்கள் துப்பா

(சியோல்)

வடகொரியாவில் இருந்து இராணுவ வீரர் ஒருவர் தென் கொரியாவுக்குள் எல்லையோர கிராமம் வழியாக தப்பிச்செல்ல முயன்ற போது சக வீரர்கள் அவர் மீது சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

கொரிய தீபகற்பத்தில் 1953ஆம் ஆண்டு நடந்த போருக்கு பின்னர், வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த நிலையில் வட கொரியாவில் இருந்து தென் கொரியாவுக்கு மக்கள் தொடர்ந்து தப்பிச் செல்கின்றனர். பெரும்பாலானோர் சீனா வழியாக தப்பிச் செல்கின்றனர்.

இந்த நிலையில் வடகொரியாவில் இருந்து இராணுவ வீரர் ஒருவர் தென்கொரியாவுக்குள் எல்லையோர கிராமம் வழியாக தப்பிச்செல்ல முயன்றார்.

இராணுவம் குவிக்கப்பட்டிருந்த பகுதி வழியாக அவர் தனது வாகனத்தில் இருந்து இறங்கி ஓட முற்பட்டபோது, வடகொரிய வீரர்கள் அவர்




மீது சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். அவர் மீது 6 முறை சுடப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

இந்த சம்பவம், எல்லை பகுதியில் அமைந்துள்ள பேம் முன் ஜம் என்ற கிராமத்தில் நடந்துள்ளது. படுகாயம் அடைந்த அந்த வீரர் அங்கிருந்து உடனடியாக மீட்கப்பட்டு வான்வழியாக எடுத்துச் செல்லப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

# இந்து தீவிரவாதம் கையில் கத்தியை

## டுவிட்டரில் க



(சென்னை)

இந்து தீவிரவாதம் குழந்தைகளின் கையில் கத்தியை திணிக்கிறது என நடிகர் கமல்ஹாசன் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

நடிகர் கமல்ஹாசன் அண்மையில் இந்து தீவிரவாதம் குறித்து கருத்து தெரிவித்திருந்தார். அவரது கருத்துக்கு பா.ஜ.கவினர் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

தனது கருத்தை அவர் திரும்ப பெற வேண்டும் என வலியுறுத்தினர். ஆனாலும் அவர் தனது கருத்தில் இருந்து பின் வாங்கவில்லை.

இந்நிலையில், இந்து தீவிரவாதம் குழந்தைகளின் கையில் கத்தியை திணிக்கிறது என நடிகர் கமல்ஹாசன் டுவிட்டரில் பதிவு செய்துள்ளார்.

# பயங்கரவாதத்தை ஒடுக்க அனைத்து நாடுகளும் இணைந்து செயற்படும் நேரம் வந்துவிட்டது

## பிரதமர் மோடி அழைப்பு

(மணிலா)

பயங்கரவாதத்தை ஒடுக்க அனைத்து நாடுகளும் இணைந்து செயற்படும் நேரம் வந்துவிட்டது என்று இந்தியா-ஆசியான் மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

ஆசியான், கிழக்கு ஆசிய மாநாடுகளில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மோடி 3 நாள் பயணமாக பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்றார். ஆசியான் மாநாட்டின்போது அமெரிக்கஜனாதிபதி ட்ரம்பை அவர் 2 முறை சந்தித்து பேசினார்.



இந்த நிலையில் 12-வது கிழக்கு ஆசிய உச்சி மாநாடு நேற்று முன்தினம் நடந்தது. (இதில் ஆசியான் அமைப்பின் 10 நாடுகளுடன் இந்தியா, சீனா, ஜப்பான், தென் கொரியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா ஆகியவையும் உறுப்பினர்களாக உள்ளன)

அப்போது மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கு இடையே பிரதமர் மோடி அவுஸ்திரேலிய பிரதமர் மால்கம் டர்ன்புல், ஜப்பான் பிரதமர் ஷின்ஷோ அபே, சீன பிரதமர் லீ கெகியாங், நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் ஆகியோருடன் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த சந்திப்பின்போது, அவர்கள் பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக விவாதித்தனர்.

மோடியை சந்தித்தது பற்றி அவுஸ்திரேலிய பிரதமர் மால்கம் டர்ன்புல் தனது டுவிட்டர் பதிவில், "பிரதமர் நரேந்திர மோடியுடன் நடத்திய பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமாக இருந்தது. இருநாடுகளும் பொருளாதாரம், பாதுகாப்பு, பயங்கரவாத எதிர்ப்பு ஆகியவற்றில் இணைந்து செயற்படுவதில் முக்கிய கவனம் செலுத்தவேண்டும் என்று விரும்பினோம்" என குறிப்பிட்டு இருந்தார்.

இதைத்தொடர்ந்து பிரதமர் மோடி, அவுஸ்திரேலிய பிரதமருக்கு டுவிட்டரில் நன்றி தெரிவித்தார். அதில் உங்களை சந்தித்தது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த சந்திப்பு, இரு நாடுகளுக்கும் இடையே நட்புறவில் புதிய சக்தியை அளிக்கும் என்று தெரிவித்தார்.

ஜப்பானிய பிரதமரை சந்தித்தது குறித்து மோடி தனது டுவிட்டர் பதிவில், மணிலாவில் எனது நண்பர் ஷின்ஷோ அபேயை சந்தித்து பேசியது அருமையாக இருந்தது. இரு நாடுகளும் மக்களுக்காக பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், பல்வேறு அம்சங்கள் பற்றியும் நாங்கள் விரிவாக ஆய்வு செய்தோம் என்றார்.

கிழக்கு ஆசிய மாநாட்டில் சீன பிரதமர் லீ கெகியாங்கை பிரதமர் மோடி தனிப்பட்ட முறையில் சந்தித்து பேசியது இந்தியாவின் தூதரக ரீதியான அணுகுமுறையிலும், தென் சீனக்கடல் விவகாரத்தில் சீனாவுக்கு எதிராக அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் இந்தியாவும் இணைந்து நாற்கர கூட்டணி ஒன்றை அமைக்கவிருக்கும் நிலையிலும் முக் கியவத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்னை சந்தித்தபோது, மோடி பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை மேம்படுத்துவது பற்றி விரிவாக விவாதித்தார்.

இதேபோல் கிழக்கு ஆசிய மாநாட்டில் குழு புகைப்படம் எடுத்துக் கொள்வதற்காக தலைவர்கள் வந்தபோது பிரதமர் மோடி, சீன பிரதமர் லீ கெகியாங், பிலிப் பைன்ஸ் ஜனாதிபதி ரோட்ரிகோ டியூடர்டே, புருனை மன்னர் ஹசனல் போல்கியா, வியட்நாம் பிரதமர் நுயென் ஹுயான் பூக் ஆகியோரை சந்தித்து சிறிது நேரம் உற்சாகமாக பேசினார்.



இதைத்தொடர்ந்து நடந்த இந்தியா-ஆசியான் மாநாட்டில் பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

ஆசியான் அமைப்பு உருவான போது உலக நாடுகள் பிளவுபட்டுக் கிடந்தன. இன்று அதன் பொன்விழாவை அனைத்து நாடுகளும் ஒன்றாக இணைந்து கொண்டாடுகின்றன. இது உலகில் அமைதியும், சுபீட்சமும்

# வெளிநாடு

## ...வடகொரிய ...பாக்கிச் சூடு

## ...தம் குழந்தைகள் ...யை திணிக்கிறது ...் கமல் பதிவு



இதுதொடர்பாக நடிகர் கமல் ஹாசன் தனது டுவிட்டர் பக்கத்தில், தன் புகைப்படத்தை கத்தியால் கிழிக்கும் சிறுவன் குறித்து பதிவிட்டிருப்பதாவது.

இந்து தீவிரவாதம் குழந்தைகள் கையில் கத்தியை திணிக்கிறது. மனம் பதறுகிறது. நீங்கள் சொன்னதை சரியென்று நிறுவுகின்றனர்.

என் பிள்ளைகள். ஐயகோ! ஒரு பிள்ளை எனை குத்திச் சாவதே மேல். என் வளர்ந்த சகோதரன் குற்றவாளியாய் தமிழ்பேசிக் குற்றம் ஏற்பதை தமிழ் இனம் சகியாது. இயற்கை எனைக் கொன்றே மகிழும். அதன் முன் மகிழ உமக்கும் உரிமை உண்டு. கொன்று தான் பாரும். வென்றே தீர்வேன். இவ்வாறு அவர் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (இ-7)

நிலவுவதற் கான நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

இந்த பிராந்தியத்தில் அமைதி, அரசியல், பாதுகாப்பு மற்றும் பொருளாதார விவ காரங்களில் கிழக்கு ஆசிய நாடுகளுடன் இணைந்து செயற்படுவதில் உறுதியாக இருக்கிறேன் என்பதை மீண் டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் விதிமுறைகள் அடிப்படையில் இந்த பிராந்தியத்தில் பாதுகாப்பு கட்டமைப்பை ஏற்படுத்துவதில் ஆசியான் நாடுகளுக்கு நாங்கள் தொடர்ந்து ஆத ரவை அளிப்போம்.



பயங்கரவாதத்தால் இன்று நாம் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறோம். எனவே பயங் கரவாதத்தை ஒடுக்குவதற்கு நாம் அனைவரும் இணைந்து செயற்படவேண்டிய நேரம் வந்துவிட்டது எனத் தெரிவித்தார். (இ-7)

# சிம்பாவேயில் இராணுவப் புரட்சியா?

## தலைநகரை சுற்றி பீரங்கிகளுடன் படையினர் குவிப்பு

(ஹரரே)

ஆபிரிக்க நாடான சிம்பாவே தலைநகர் ஹரரே நகரை இராணுவம் சுற்றி வளைத்துள்ளது. அரசு ஊடக தலைமையகத்தை இராணுவம் ஆக்கிரமித்துள்ளதால் இராணுவ புரட்சிக்கு அடித்தளமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

சிம்பாவேயில் ராபர்ட் முகபே ஜனாதிபதியாக பதவி வகித்து வருகிறார். இந்நிலையில், உள்ளூர்நேரப்படி நேற்று அதிகாலை தலைநகர் ஹரரேவை இராணுவ பீரங்கிகள் சுற்றி வளைத்தன.

அதிகள விலான இராணுவத்தினர் தலைநகரை சுற்றி குவிக் கப்பட்டுள்ளனர்.

இதேவேளை துப்பாக்கியால், பீரங்கியால் சுடும் சத்தம் கேட்டதாகவும் கூறப்படுகிறது. அந்நாட்டு அரச ஊடக தலைமையகத்தையும் இராணுவம் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளது. அதிகாரத்தை தனது வசம்கொண்டு





ஜனாதிபதி முகபே

வர முயற்சிப்பதாக கூறி அந்நாட்டு துணை ஜனாதிபதி எம்மர்சன் நாங்கா வாவை கடந்த வாரம் பதவி நீக்கம் செய்தார் முகபே. இதனால், அவர் இராணு வத் தளபதி ஜெனரல் சிவெங்கா உதவியுடன் ஆட்சியை கைப்பற்ற முயற்சிக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில். 'அரசை கைப்பற்றும் நோக்கமில்லை' என இராணுவ செய்தி தொடர்பாளர் கூறியுள்ளார்.

குற்றவா ளிகளை மட்டுமே இராணுவம் குறி வைத்துள்ளது எனவும், ஜனாதிபதி முகபே மற்றும் அவரது குடும்பத்தினர் பாதுகாப்பாக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

சிம்பாவேயில் குழப்பமான சூழ்நிலை நிலவுவதால் தங்களது நாட்டவர்களைப் பாதுகாப்பாக இருக்கும் படி அமெரிக்க மற்றும் பிரிட்டன் தூதரகங்கள் அறிவுறுத்தியுள்ளன. (இ-7)

## இந்தோனேஷியா அருங்காட்சியகத்திலிருந்த ஹிட்லரின் மெழுகுச்சிலை நீக்கம்

(ஜகார்த்தா)

இந்தோனேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த ஹிட்லரின் மெழுகுச்சிலை பல போராட்டங்களுக்குப் பின்னர் நீக்கப்பட்டதாக அருங்காட்சியக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தோனேசியாவில்உள்ளாடி மாட்டா டிரிக் ஐ என்ற அருங்காட்சியம் உள்ளது. இந்த அருங்காட்சியகத்தில் பல வரலாற்று சிறப்பு மிக்க சிலைகள் மற்றும் புகைப்படங்கள் உள்ளன. பல உலக பிரபலங்களின் மெழுகுச்சிலைகள் உள்ளன. அவற்றின் அருகில்நின்று பார்வையாளர்கள் புகைப்படம் எடுத்துக்கொள்கின்றனர். இதனால் அந்த அருங்காட்சியகம் மிகவும் புகழ்



பெற்று விளங்குகிறது.

இந்த அருங்காட்சியகத்தில் ஜெர்மன் நாட்டின் சர்வாதிகாரியான ஹிட்லரின் மெழுகுச்சிலை இடம்பெற்றுள்ளது. அதன் அருகில்நின்று புகைப்படம் எடுக்க பலரும் ஆர்வம் காட்டுவர். சிலையின் பின்புறம் ஆஷ்விட்ச் முகாமின் புகைப்படம் இடம்பெற்றுள்ளது. முகாமின் வாசலில் மெழுகுச்சிலை இடம்பெற்றுள்ளது.

அதற்கு பல அமைப்பினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். ஹிட்லர் ஒரு சர்வாதிகாரி. அவர் ஆட்சியில் பல யூதர் இனத்தைச் சேர்ந்த மக்கள் இந்த முகாமில் வைத்து கொல்லப்பட்டனர். அவர் சிலையை இங்குவைத்திருப்பது அவர்களை அவமதிப்பதாகும். அதனால் சிலையையும், புகைப்படத்தையும் நீக்க வேண்டும் என போராட்டம் நடத்திவந்தனர்.

இந்நிலையில், ஹிட்லரின் மெழுகுச்சிலையை நீக்கிவிட்டதாக இந்தோனேசிய அருங்காட்சியக நிர்வாகத்தினர் தெரிவித்தனர். இந்த சிலை 2014ஆம்ஆண்டு வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## உலகிலேயே முதன் முறையாக மின்சாரத்தில் இயங்கிய கப்பல்

சீனா சாதனை



(பீஜிங்)

உலகிலேயே முதன் முறையாக மின்சாரத்தின் உதவியால் கப்பலை இயக்கி சீனா சாதனை படைத்துள்ளது.

ரயில்வே, விண்வெளி மற்றும் அறிவியல் என அனைத்துத் துறைகளிலும் சீனா முன்னேறி வருகிறது. தற்போது நீர்வழி போக்குவரத்திலும் முன்னேறியுள்ளது.

கார் உள்ளிட்ட வாகனங்கள் மட்டுமே மின்சாரம் மூலம் இயக்கப்பட்டு வருகின்றன. ஆனால் சீனா சரக்கு கப்பலை மின்சாரம் மூலம் இயக்கி சாதனை படைத்துள்ளது.

அந்த கப்பல் 70.5 மீற்றர் நீளம் கொண்டது. 600 தொன் எடை உடையது. அதில் 2 ஆயிரம் தொன் சரக்கு ஏற்றப்பட்டு மின்சாரம் மூலம் இயக்கப்பட்டது. கப்பலில் பொருத்தப்பட்ட 26 தொன் லித்தியம் மின்கலம் (பற்றிகள்) 2 மணி நேரம் மின்சாரம் (சார்ஜ்) பாய்ச்சப்பட்டது.

மின்சார சரக்கு கப்பல் இயக்கும் நிகழ்ச்சி குயாங்ஷு ஆற்றில் நடந்தது. இக்கப்பல் மணிக்கு 12.8 கி.மீ. வேகத்தில் 80 கி.மீற்றர் தூரம் பயணம் செய்தது.

இது சீனாவில் குயாங்ஷு ஷிப்யார்டு கம்பெனியால் உருவாக்கப்பட்டது. கப்பல்கள் டீசல் மற்றும் பெற்றோல் மூலம் இயக்கப்படுகிறது. ஆனால் இது மின்சாரம் மூலம் இயக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் உலகிலேயே முதன் முறையாக மின்சாரத்தின் உதவியால் கப்பலை இயக்கி சீனா சாதனை படைத்துள்ளது. (இ-7)

## அரசுப்படையினரின் வான்வழித் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 61ஆக உயர்வு

(பெய்ரூட்)

சிரியாவின் அலெப்போ மாகாணத்தில் தீவிரவாதிகளை குறிவைத்து அரசுப்படையினர் நடத்திய வான் வெளி தாக்குதலில் பலியா னவர்கள் எண்ணிக்கை 61 ஆக அதிகரித்துள்ளதாக போர் கண் காணிப்பகம் தெரிவித்துள்ளது.

துருக்கி எல்லையை யொட்டிய சிரியாவின் அலெப்போ மாகாணம் தீவிரவாதிகளின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளது. இதனால் இங்கு சிரிய அரசு படைகளும், ரஷ்ய படைகளும் இணைந்து போர் விமானங்கள் மூலம் தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இப்பகுதியில் உள்ள அல் அடாரெப்



நகரில் நேற்று முன்தினம் இரவு ஒரு சந்தையைக் குறிவைத்து நடத்தப்பட்ட மூன்று வான்வழி தாக்குதலில் 61 பொதுமக்கள் உயிரிழந்தனர் என சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலை சிரியா அரசுப்படை நடத்தியதா? அல்லது ரஷ்ய படை நடத்தியதா? என்பது தெரியவில்லை.

இப்பகுதியில் பொதுமக்கள் பாதுகாப்புக்காக சமாதான வளையம் அமைப்பதற்கு ரஷ்யா, துருக்கி மற்றும் ஈரான் அரசுகள் ஒப்புக் கொண்டுள்ளன. எனினும், இந்த தாக்குதலினால் அந்த திட்டத்தை நிறைவேற்று வதில் சிக்கல் ஏற்பட்டுள்ள தாக கூறப்படுகிறது.

கடந்த ஒக்டோபர் முதலாம் திகதி இப்பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 28 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# விஜேவீர கொலைக்கு பொறுப்பேற்கும் துணிச்சல் யாருக்கும் இல்லை- ஜே.வி.பி

(கொழும்பு)

றோகண விஜேவீரவை தான் கொலை செய்யவில்லை என்று மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா தன்னிடம் கூறியதாக, ஜே.வி.பியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் நிறுவகத் தலைவர் றோகண விஜேவீர நினைவுநாளை முன்னிட்டு விகாரமாதேவி பூங்காவில் நேற்று நடந்த கூட்டத்தில் உரையாற்றிய அவர்,

“முற்போக்கு இலங்கையர்கள் எவரும் நவம்பர் 13ஆம் திகதியை மறக்கமாட்டார்கள். எமது நிறுவகத் தலைவர் றோகண விஜேவீர அன்றுதான் கொல்லப்பட்டார். அப்போதைய ஆட்சியாளர்களால், ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். 60 ஆயிரத்துக்கு அதிகமான ஜே.வி.பியினர் கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது.

விடுதலைப் புலிகளையும் அதன் தலைமையையும் இல்லாமல் அழித்தது தாங்களே என்று பலர் இப்போது உரிமை கொண்டாடுகின்றனர்.

மகிந்த ராஜபக்ஷ, தானே போருக்குத் தலைமை தாங்கியதாக கூறுகிறார். விடுதலைப் புலிகளுக்கு முடிவு கட்டியது தானே என்று கோத்தபாய ராஜபக்ஷ கூறுகிறார். தானே அதனைச் செய்ததாக சொல்கிறார் சரத் பொன்சேகா. வெற்றிக்கு உரிமை கோரி இன்னும் பலர் நூல்களை எழுதியுள்ளனர்.

1980களின் இறுதியில் ஆயிரக்கணக்கான ஜே.வி.பியினர் கொல்லப்பட்டனர். ஆனால் எவரும் அதற்குப் பொறுப்பேற்கவில்லை. ஏனென்றால் நாங்கள் முற்போக்கான இயக்கமாக முன்னோக்கிச் செல்கிறோம்.

வடமத்திய மாகாண முதலமைச்சர் பதவிக்கு மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா போட்டியிட்டிருந்தார். எமது கட்சியின் பரப்புரைக்கு நான் அப்போது தலைமை தாங்கியிருந்தேன். பரப்புரையின் போது, ஜானக பெரேரா தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டு, என்னைச் சந்திக்க முடியுமா என்று கேட்டார்.

அதையடுத்து அவருடன் நடந்த சந்திப்பின் போது, தான் றோகண விஜேவீரவைக் கொலை செய்யவில்லை என்று கூறினார். அவரது கொலையில் தனக்குத் தொடர்பில்லை என்று தெரிவித்தார்.

விஜேவீரவை கைது செய்தது மட்டுமே தான் என்றும், அவரை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தாம் ஒப்படைத்து விட்டதாகவும் அவர் கூறினார்.

இந்த விடயத்தில் தனது பெயர் சம்பந்தப்பட்டுள்ளதை தெளிவுபடுத்த வேண்டும் என்றும் கூறிய அவர், அந்தக் குற்றத்துக்குக் காரணமான தனது அரசியல் அல்லது இராணுவ தலைவர்களை காட்டிக் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை.



அந்த துரதிர்ஷ்டமான நாளில் எங்களுடன் போராட்டத்தில் இருந்த பலர் இங்கு இருக்கிறார்கள். நான் வெலிக்கடை சிறையின் வதைக் கூடத்தில் இருந்தேன். ரில்வின் சில்வா மகசின் சிறையில் இருந்தார். எமக்கு அரசாங்க நாளிதழ்கள் மாத்திரம் தரப்படும்.

அதில் அப்போது உபதிஸ்ஸ கமநாயக்க கைது செய்யப்பட்டதாக தலைப்புச் செய்தி வெளியாகியிருந்தது. அந்த நாளிதழ்களை வீசிய சிறை அதிகாரிகள், போராட்டம் முடிந்து விட்டது. எல்லாவற்றையும் விட்டு விடுங்கள் என்று எம்மிடம் கூறினார்.

1980களின் இறுதியில் நடந்த கொலைகள் கடத்தல்கள் பற்றியும்தான் பலர் பேசுகின்றனர். ஆனால், 1985 இலேயே ஜே.வி.பி உறுப்பினர்களின் படுகொலைகள் ஆரம்பமாகி விட்டன. அநுராதபுரவில் எமது இரு தோழர்கள் கடத்தப்பட்டு கொல்லப்பட்டனர்.

புறக்கோட்டையில் இந்திய - இலங்கை உடன்பாட்டுக்கு எதிராக போராட்டம் நடத்திய எமது உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டனர்.

அப்போது சிறிமாவோ பண்டாரநாயக்கவும், தினேஷ் குணவர்த்தனவும் எம்முடன் இருந்தனர். ஜே.ஆர். அரசாங்கம் துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டது.

இன்று ரதுபஸ்வெல துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. 1987இல் இந்திய - இலங்கை உடன்பாட்டுக்கு எதிரான போராட்டத்தின் போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு குறித்து எப்போது விசாரணை நடத்தப்படும்?

முதலாளித்துவ அரசாங்கங்கள் எமது தலைவரையும், எல்லா மத்திய குழு உறுப்பினர்களையும் 60 ஆயிரம் உறுப்பினர்களையும் கொன்றொழித்து விட்டன. அந்தக் கொலைகள் எமக்கு ஒரு தந்திரோபாய பின்னடைவை ஏற்படுத்தியது. ஆனால் நாம் இழந்து போகவில்லை” என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# முக்கிய பல்கலை மூன்றில் புதிய வைத்திய பீடங்கள்

புதிதாக வைத்திய பீடங்களை ஆரம்பித்து வருடாந்தம் அதிகளவான மாணவர்களுக்கு வைத்தியக் கல்வி வழங்கவுள்ளதோடு, தற்போது இதற்காக நிலவும் போட்டியைக் குறைக்க முடியும் என, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வைத்திய கல்வியை விஸ்தரிக்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்திற்கு அமைய, வட மேல், சப்ரகமுவ மற்றும் மொரட்டுவை ஆகிய பல்கலைக்கழகங்களில் புதிய வைத்திய பீடங்கள்மூன்றைநிறுவமுடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பொருட்டு 2018ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்ட யோசனையில் 1250 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சீனக் கடற்படைக் கப்பல் புறப்பட்டது அவுஸ்திரேலிய போர்க்கப்பல் வந்தது



(கொழும்பு)

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த சீன கடற்படைக் கப்பல் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்ற அதேவேளை அவுஸ்திரேலியக் கடற்படையின் போர்க் கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி கொழும்பு துறைமுகத்துக்கு வந்த சீனக் கடற்படையின் பயிற்சிக் கப்பலான Qi Ji Guang ஐந்து நாட்கள் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் தாய்லாந்து நோக்கிப் புறப்பட்டுச் சென்றது.

அதேவேளை, அவுஸ்திரேலியக் கடற்படையின் போர்க் கப்பலான எச்.எம்.ஏ.எஸ் நியூகாசில் நான்கு நாட்கள் பயணமாக நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

138.1 மீற்றர் நீளமான இந்தப் போர்க்கப்பலில் 184 மாலுமிகள் உள்ளனர். கொழும்பில் தங்கியிருக்கும் போது, இலங்கை கடற்படையுடன் இணைந்து அவுஸ்திரேலிய கடற்படையினர் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளனர். எதிர்வரும் 17ஆம் திகதி அவுஸ்திரேலிய போர்க் கப்பல் புறப்பட்டுச் செல்லவுள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### ஆளைப் பிடிக்கவில்லை என்றால்...

இந்த ஆள் என்ன சொல்றது! நாம் என்ன கேட்கிறது? என்று , நல்ல விடயங்களைக்கூட வேண்டாதவர்கள் சொன்னார்கள் என்பதற்காக ஒதுக்கித் தள்ளிவிடுகிறவர்கள் உண்டு.

இந்த வீம்பு இவர்களுக்கு இருப்பதால் காலம்தோறும் எவ்வளவோ இழப்புக்களை விலை கொடுத்து வாங்குகிறார்கள்.

நானே அந்த முடிவை எடுப்பதாகத் தான் இருந்தேன். ஆனால் அந்த ஆளும் அதையே சொன்னதால் இப்போது என் மனம் மாறிவிட்டது. அப்புறம் அவர் சொல்லித் தான் நான் அந்த முடிவுக்கு வந்ததா பேராயிடும். அதனால் நேர் எதிரான முடிவை எடுத்து அந்தாளு முகத்துல கரியைப் பூசப் போறேன். அவர் மூக்கை உடைக்கப் போறேன். என்றெல்லாம் வீம்புக்கென்றே எதையாவது தலைகீழாகச் செய்து வைக்கிறார்கள்.

நம்மைச் சுற்றி வாழுபவர்கள் சிலரிடம் விரோத உணர்வோ சற்றே வெறுப்புணர்வோ நமக்கு ஏற்படலாம். தவறில்லை. ஆனால் அதை மிகைப்படுத்தி அவர்கள் சொல்வதும் செய்வதும் 100 சதவிகிதம் தவறு என்கிற முடிவுக்கு வருவது சரியான அணுகுமுறையல்ல.

விரோதம் என்பது நபர்கள் மீது இருக்கலாம்; ஆனால் அவர்கள் சொல்லும் கருத்தின் மீது கூடாது.

விவாதங்களின் மீது நல்ல கருத்து ஒன்றைச் சொன்னார் என்கிற காரணத்திற்காக மறுப்பவர்கள் இருக்கிறார்கள்.

இவர் நமக்குப் பிடிக்காதவர் என்பதற்காக பலவீனமான எதிர்வாதம் ஒன்றை வெகுநேரம் விடாப்பிடியாகச் செய்பவர்களும் உண்டு.

ஆளைப் பிடிக்கவில்லை என்றாலும் அவர்களுக்கு நாம் கட்டுப்பட்டவர்களாக இருந்தால் அவர் சொல்வதை ஏற்கத்தான் வேண்டும். ஆளைப் பிடிக்கவில்லை என்றாலும் அவரிடம் சரக்கு இருந்தால் அந்தச் சரக்கை நாம் அவசியம் நாம் கொள்முதல் செய்து கொள்ளத்தான் வேண்டும்.

விரோதியும் வேண்டாதவர்களும் சொன்னதை நாம் கேட்டுக் கொண்டால் அது விரோதிக்கு வெற்றி என்று அவசரப்பட்டு முடிவுக்கு வந்துவிடலாகாது.

அவர்கள் சொல்வதில் நல்லவற்றை ஏற்றுக் கொள்வதும் அவர்களது திறமைகளை அங்கீகரிப்பதும் நம் காரியத்தை மட்டுமல்ல அவர்களையும் சேர்த்து வெற்றி கொள்வதாகும்.

**லேனா தமிழ்வாணன்**



சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண நீரிழிவு கழகத்தின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பொலிஸ் பிரிவில் நடைபெற்று வரும் இலவச மருத்துவ முகாம் கடந்த திங்கட்கிழமை யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# அதிபர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ் எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயத்தில் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. குறித்த பாடசாலைக்கு அதிபர் பதவிக்கு விண்ணப்பிப்போர் இலங்கை அதிபர் சேவை தரம்-II அல்லது அதற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக இருக்க வேண்டும். குறித்த தரத்தை சேர்ந்த அதிபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் இலங்கை அதிபர் சேவை தரம் III ஐச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படும்.

இதற்கான நிபந்தனைகளாக . தென்மராட்சி வலயத்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரிகள் தற்போது கடமையாற்றும் பாடசாலையில்3 வருடங்கள்தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல்வேண்டும். தங்கள் அதிபர் தரத்து க்கு பொருத்தமற்ற பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களும் விண்ணபிக்க முடியும். மற்றும் விண்ணப்பதாரி கள் விண்ணப்ப முடிவு திக தியில் இருந்து ஆகக் குறைந் தது மூன்று வருடங்கள்கடமையாற்றக்கூடிய வயதெல்லையை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை வலயக்கல்வி அலுவலக நிர்வாக கிளையில் பெற்று பூரணப்படுத்தி 28.11.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்புமாறு தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (இ-9)

# உள்ளூர் உற்பத்தி முயற்சிகளுக்கு மக்கள் ஆதரவு வழங்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எமது மக்கள் உள்ளூர் உற்பத்தி முயற்சிக்கு ஆதரவு வழங்க வேண்டும் என கைத்தொழில் அபிவிருத்தி சபையின் யாழ். மாவட்ட பிரதிப் பணிப்பாளர் சி. சிவகொங்காதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த கால யுத்த சூழலால் யாழ்.மாவட்டத்தில் இயங்கிய பல தொழிற்சாலைகள் அழிவடைந்ததுடன்மேலும் பல தொழிற்சாலைகள் இயங்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. ஆயினும் தற்போதைய சூழலில் ஓரளவு சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகள் யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை நிலைத்திருப்பதற்கு பல்வேறு இடர்களை சமாளிக்க வேண்டியுள்ளது. இதில் முக்கியமானது சந்தைப்படுத்தலில் ஏற்படுகின்ற பிரச்சினையாகும்.

வெளியிடங்களிலிருந்து வருகின்ற தரம் குறைந்ததும், விலை குறைந்ததுமான பொருட்கள் சந்தைகளிலும் மற்றும் வீதியோர வியாபாரிகளாலும் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன. இவை உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும்தரமான பொருட்களின் விற்பனையை மிகவும் பாதிக்கின்றது. எமது மக்களும் விலை ஒன்றை மட்டுமே கருத்தில் கொண்டு கொள்வனவு செய்கின்றனர்.

இவ்வாறு சந்தைப்படுத்தலில் பல பிரச்சினைகளை எதிர்கொள்ளும் எமது உள்ளூர் கைத்தொழில் முயற்சியில் ஒன்றான, சங்கானை பிரதேச செயலர் பிரிவிலுள்ள சித்தன்கேணியில் இயங்கும் இறப்பர் பாதணிகளை உற்பத்தி செய்யும் 'அந்திரான் ஜன சக்தி தோற்பொருள் உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கமாகும்" இது 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இது கைத்தொழில் அபிவிருத்தி சபை, UNDP போன்ற நிறுவனங்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது.






தற்போது யாழ்.மாவட்ட அரச அதிபரின் ஒத்துழைப்புடன் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சினூடாக நிதி வசதி ஒழுங்கு செய்யப்பட்டு மேலதிக இயந்திர உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கான முக்கிய காரணம் இத்தொழில் முயற்சி யில் ஈடுபடும் ஊழியர்கள் பெண்கள் ஆவர். அதிலும் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற பெண்களே தமது வாழ்வாதாரத்திற்காக இத்தொழில் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

பாதணிக ளின் விற்பனை மூலம்கிடைக்கும் வருமானத்திலிருந்தே இப் பெண்களது ஊதியம் வழங்கப்படுகின்றது.


இங்கு ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான எல்லா அளவிலும் சிறந்த வடிவத்திலும் தரமான மூலப்பொருட்களாலான 'arp" எனும்வியாபார குறியிடப்பட்ட இறப்பர் பாதணிகள் உருவாக்கப்படுகின்றன. இருப்பினும் விற்பனையில், வெளியூரிலிருந்து வருகின்ற தரமற்ற பொருட்களால் பாதிப்பு ஏற்படுகின்றது.

இத் தடையை நிவர்த்தி செய்ய எமது பிரதேச மக்களின் முழுமையான ஆதரவும் பாதணி விற்பனை நிலையங்களின் பங்களிப்பும் மிகவும் இன்றியமையாதவையாக காணப்படுகின்றன.

எனவே எமது மக்கள் உள்ளூர் முயற்சிக்கு ஆதரவு வழங்க வேண்டும்என்ற மனப்பாங்கே எமது பிரதேசத்தில் தொழில் முயற்சிகள் வளர்வதற்கும், வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் உந்துதலாக அமையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# மரண அறிவித்தல்

## நல்லதம்பி நல்லராசா (ஆனந்தன்)



கல்லுவம் கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி நல்லராசா (ஆனந்தன்) நேற்று (14.11.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - அழகம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்- தங்கமுத்து தம்பதிகளின் மருமகனும் பாக்கியலட்சுமியின் (பாக்கியம்) அன்புக் கணவரும் நவநீதா (லண்டன்), நவராஜ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜ்குமார் (குமார்- லண்டன்), தயாபினி (தயா-கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் றக்கிஷா, யெருஷா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினேஸ்வரி, நல்லலிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் இராசலிங்கம் (கனடா), கிஸ்ணலிங்கம், குலசேகரம் (கனடா), லகுநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்னலட்சுமி, சற்குணராசா சரோஜினிதேவி, செல்வலச்சுமி தர்மராசா, காலஞ்சென்ற பரமாநாதன், சந்தானலக்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2017) வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக [illegible] வெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்லுவம்.கரணவாய் மேற்கு. கரவெட்டி. (C-394) தகவல்: குடும்பத்தினர்

# இணுவில் இந்துவின் கண்ணீர் அஞ்சலி

## செல்லையா தெய்வநாயகம்



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி.கயலினி தனசீலன்
அவர்களது தந்தை
திரு.செல்லையா
தெய்வநாயகம் (அளவெட்டி மேற்கு)
அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி
கேட்டுத் துயர் அடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும்
அவரின் குடும்பத்துக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/இணுவில் இந்துக் கல்லூரி
(1358)

# ஏலவிற்பனை

எமது கல்லூரியில் வருடாந்தப் பொருட்கணக்கெடுப்பின் போது விற்பனைக்கு அனுமதிக்கப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 29.11.2017 அன்று புதன்கிழமை மாலை ஒரு மணிக்கு பிரதான மண்டபத்தில் ஏலம் விடத் தீர்மானித்திருப்பதால் பொருட்களை பெற விரும்புவோர் குறித்த நேரத்திற்கு சமுகமளித்து ஏலத்தில் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

### தளபாடங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. உருக்கு மேசை C – | 05 | 5. சதுர மேசை – | 15 |
| 2. உருக்கு கதிரை C – | 10 | 6. உருக்கு மேசை B – | 11 |
| 3. நீள மேசை – | 02 | 7. உருக்கு மேசை B – | 06 |
| 4. ஸ்ளுஸ் – | 10 | 8. மாணவர் மேசை A வகை மரம் | – 18 |
| | | 9. மாணவர் கதிரை A வகை இரும்பு | – 5 |

### மின் உபகரணங்கள்

1.Over head Projector Vega-01
2.Interactive Multi media-01
3.Camera Lumix DMc LZ8-01
4.GP Power band Charger-01
5.Singer 22" Color TV Model Set 2127-01
6.31mm GI pipe length-01
7.Printer Epson LQ 300+ -01
8.Hard Disk 500GB -01
9.DVD Writer -01
10.Power Supply -01
11.Scanner -01
12.HP Printer 1005 -01
13.Woover -01
14.Multi media Projector Acer Ds VO80 -01
15.Summit (Grinder) -01
16.LG TV Flad Model-01
17. Melodiga-02

அதிபர்
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண
மகா வித்தியாலயம்
(C-395)

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தமிழ் எம்.பிக்கள் ஒன்றிணைய வேண்டும்



## ஆனந்தன் எம்.பி. கோரிக்கை

(குருமன்காடு)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு தமிழ் எம்.பிக்கள் அனைவரும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார். நேற்று கண்டி சிறைச்சாலைக்கு விஜயம் செய்த பின் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

சிறைச்சாலைகளில்முறையான விசாரணைகளின்றி பல வருடங்களாகத் தவிக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு நாட்டிலுள்ள அனைத்துத் தமிழ் எம்.பிக்களும்ஒன்றிணைந்துகுரல்கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கவும் முன்வர வேண்டும்.

சைட்டம் பிரச்சினைக்கு ஒரு விசேட குழு அமைத்து தீர்வு கண்டதைப் போன்று, தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரத்திற்கும் ஒரு விசேட குழு அமைத்து அரசியல் கைதிகளின் நிலைமை களை ஆராய்ந்து அதற்கேற்ற வகையில் துரிதமாகத் தீர்வு கண்டு விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று அரசியல் கைதிகள் என்னிடம் கேட்டுள்ளனர்.

கண்டி சிறைச்சாலையில் 11 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் ஒருவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர். மற்றுமொருவர் முல்லைத்தீவைச் சேர்ந்தவர். ஏனையோர்மலையகத்தின்பல பகுதிகளையும் சேர்ந்தவர்களாவர்.

நடுத்தர வயதுடைய இந்தக் கைதிகள் தங்களைப் பார்வையிடுவதற்கும் தங்களுடைய நிலைமைகளைக் கேட்பதற்கும் அரசியல் வாதிகளோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களோ வருவதில்லை என கவலை கொண்டிருக்கின்றார்கள்.

மலையகத் தலை நகராகிய கண்டி சிறைச்சாலையில் பல வருடங்களாக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதிலும், குறிப்பாக மலையக தமிழ் எம்.பிக்கள் எவரும் தங்கள் நிலைமை களை அறிவதற்கு வருவதில்லை என்பது குறித்து மிகுந்த மன வருத்த மடைந்துள்ளார்கள்.

இங்கு பத்து வருடங்களாகத் தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்கள் உட்பட அனைவரும் பல வருடங்கள் சிறைவாசம் அனுபவித்து வருகின்றார்கள். இங்கு தண்டனை பெற்றவர் களும், வழக்கு விசாரணை முடியாதவர்களும் இருக்கின்றார்கள். தங்களுடைய வழக்கு விசாரணைகள் துரிதமாக நடத்தப்படுவதில்லை என அவர்கள் கவலையோடு கூறினார்கள்.

கடந்த பத்து வருடங்களாக இங்கு சிறைவாசம் அனுபவித்து வருகின்ற ஒரு கைதிக்கு எதிராக 3 வழக்குகள் தாக்கல் செய் யப்பட்டன. அவற்றில் ஒரு வழக்கில் 2 வருட சிறைத் தண்டனையும், ஒரு வருட புனர்வாழ்வுத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. மிகுதி இரண்டு வழக்குகளின் விசாரணைகள் மிகவும் தாமதமாகவே நடைபெறுவதாக அவர் கூறினார். நீண்டகால இடைவெளியில் வழக்குத் தவணைகள் போடப்படுவதாகவும், எப்போது அந்த வழக்குகள் முடிவடையும் அவற்றில்என்ன வகையான தீர்ப்பு வழங்கப்படும் என்பது தெரியாதுள்ளது என தெரிவித்த அவர் மிகவும் மனம் நொந்த நிலையில் காணப்பட்டார்.

இன்னுமொரு கைதியுடைய வழக்கில் பொலிஸாருக்கு எதிராகப் பிடியாணை கட்டளை பிறப்பிக்கப்பட்டு ள்ளது. எட்டு தவணைகள் கடந்து விட்டன. ஆனால் சம்ப ந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி நீதிமன்றத்தில் வழக்குத் தவணைக்கு சமூகமளிப்பதில்லை. வழக்கு தொடர்ந்து தவணையிடப்படுகின்றது. நீதிமன்றத்திற்கு வருகை தராமல் உள்ள அந்த பொலிஸ் அதிகாரிக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வழக்குகளைத் தொடர்ச்சியாக விசாரணை செய்வதற்கு பொலிஸார் ஒத்துழைப் பதில்லை. அதேபோன்று வழக்கு சம்பந்தமான பல விடயங்களில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை மற்றும் அறிவுறுத்தல்களுக்காக நீதிம ன்றம் காத்திருக்க வேண்டிய நிலையும் உள்ளது. இதனால் தங்களுடைய வழக்குவிசாரணைகள்மிகவும்தாமதமடைந்துள்ளதாக அந்தக் கைதிகள் தெரிவித்தனர்.

இராணுவத்தினர் மீது எந்தக் காரணத்தைக் கொண்டும் குற்றம் சுமத்தப்படுவதற்கு இடமளிக்கப்படுவதில்லை என்றும் எந்தவொரு இராணுவ வீரரையும் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என அரசாங்கம் கூறுகின்றது. இராணுவத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடும் தங்களுடைய வழக்குகள் தாமதமடைவதற்கு முக்கிய காரணமாகும் என்றும் அவர்கள் கூறினர்.

மற்றுமொரு அரசியல் கைதிக்கு எதிராக 8 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றில் சாட்சிகளாக இருக்கின்ற 7, 8 பேரில் ஒருவருக்கு ஒரு வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இன்னுமொரு சாட்சிக்கு 7 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வழக்கு விசாரணைகள் முறையாக நடைபெறுவதில்லை. சாட்சிகளையும் உரிய முறையில்நீதிமன்றத்திற்குக்கொண்டு வருவதில்லை.

சூரியமூர்த்தி ஜீவநேசன் என்ற கைதி 263 தடவைகள் வழக்குத் தவணைகளுக்காக நீதிமன்றங்களில் ஏறி இறங்கியிருக்கின்றார். கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி சரணடைந்த இவருக்கு எதிராக 8 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. பத்து வருடங்களாக இவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவருக்கு எதிரான ஒரு வழக்கில் 5 வருடச் சிறைத் தண்டனையும் ஒரு வருடம் புனர்வாழ்வுத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய வழக்குகளில் என்ன வகையான தீர்ப்புகள் வழங்கப்படும்,எப்போது அந்த வழக்குகள் முடிவடையும் என்பது தெரியாத நிலையில் இழுபட்டுக் கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இன்னுமொரு கைதி ஒன்றரை வருடங்களாக நடைபெற்ற விசாரணையின் போது சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருந்ததாகவும்; அது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள போதிலும், வருடக்கணக்காக நாட்கள் கழிந்த பின்னரும், அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. அதனால் அந்த வழக்கு விசாரணை இழுபட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால் அந்த அறிக்கையை சமர்ப்பிக்காத பொலிஸாருக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அந்தக் கைதி தெரிவித்தார். எப்போது இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும்,எப்போது தனது வழக்கு முடிவடையும் என தெரியாமல் அவர் தவித்துக் கொண்டிருக்கின்றார்.

நல்லிணக்கம், மனிதாபிமானம் என்றெல்லாம் பேசப்படுகின்றது. ஆனால், அரசியல் கைதிகள் விடயத்தில் அது கணக்கில் எடுக்கப்படு வதில்லை. சைட்டம் பிரச்சினைக்கு ஜனாதிபதி ஒரு விசேட குழுவை அமைத்து தீர்வு கண்டதைப் போன்று தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கும் ஒரு விசேட குழு அமைத்து நடவடிக்கை எடுத்து, தங்களை விரைவாக விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு தமிழ்நாடாளுமன்றஉறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அந்தக்கைதிகள் என்னிடம் கோரியுள்ளார்கள்.

தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை ஒப்புக் கொண்டாலும், தண்டனைக்கு மேல் தண்டனை வழங்கப்படுகின்றது. தீர்ப்பு வழங்கப்படும் போது சிறையில் இருந்த காலம் கணக்கில் எடுக்கப்படுவதில்லை ஏற்கனவே சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தைத் தண்டனை அனுபவித்ததாகக் கணக்கில் எடுத்து, அதற்கேற்ற வகையில் தண்டனை வழங்கப்படுவதில்லை.

புனர்வாழ்வுப் பயிற்சி பெறுவதற்கு ஒப்புக்கொண்டு அரசாங்கத்தின் வேண்டுகோளை ஏற்று அதற்கான இணக்கத்தைத் தெரிவித்து விண்ணப்பங்கள் கையளிக்கப்பட்டுள்ள போதிலும், அது இதுவரையில் கவனத்தில் எடுக்கப்படவில்லை. இவ்வாறு ஆறு வருடங்களாகக் காத்திருப்பதாக ஒரு கைதி என்னிடம் கூறினார்.

சிறைச்சாலை என்பது குற்றம் புரிந்தவர்கள் திருந்துவதற்கான சந்தர்ப்பத்தை அளிக்கின்ற ஒரு நிலையமாகச் சொல்லப்படுகின்றது. ஆனால்தங்களைப் பொருத்தமட்டில், தங்களை மேலும் மேலும் தண்டித்து வருத்துவதற்காகவே, விசாரணைகளின்றியும் வழக்குகளை விரைவாக முடிக்காமலும், வைத்திருக்கின்றார்கள் என்று எண்ணத்தோன்றுவதாகவும் அந்த கைதிகள் குறிப்பிட்டனர்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. ஆனால் அந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களும், அந்த சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டவர்களும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.


ஒரு வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு, 20 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டால், அவர் 13 வருடங்களில் வெளியில் வரமுடியும். வருடந்தோறும் வருகின்ற சுதந்திரதினம் போன்ற விசேட தினங்களுக்கு தண்டனைக் காலத்தில் கழிவு வழங்கப்படுவது வழக்கம். அவ்வாறு ஒரு தினத்திற்கு 7 நாட்கள் கழிக்கப்பட வேண்டும். அத்தகைய தண்டனைக்கால கழிவு கூட தங்களுக்கு வழங்கப்படுவதில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் கேள்விக்குப் பதிலளித்த நீதி அமைச்சர் தலதா அத்துகோரள 17 பேர் மட்டுமே அரசியல் கைதிகள் இருப்பதாகக் கூறியிருக்கின்றார். உண்மையில் 132 அரசியல் கைதிகள் இலங்கையின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆனால் அவர் 17 பேர் மாத்திரமே இருக்கின்றனர் என கூறினால் அந்த 17 பேர் யார் என்ற விபரத்தை வெளியிட வேண்டும் என அவர்கள் கேட்கின்றார்கள்.

கண்டி சிறைச்சாலையில் உள்ள ஏனைய குற்றவாளிக் கைதிகளினால் தங்களுக்கு ஆபத்துஏற்படக்கூடியநிலைமை இருப்பதாகத் தெரிவித்த அவர்கள், சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சரின் ஊடாகத் தங்களுடைய பாதுகாப்பை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரினார்கள் எனத் தெரிவித்துள்ளார். (இ250)

# புதிய அரசியலமைப்புக்கு எதிராக மகிந்த-பிக்குகள் இரகசிய ஒப்பந்தம்

## விக்கிரமபாகு கருணாரட்ன குற்றச்சாட்டு



(கொழும்பு)

புதிய அரசியலமைப்புக்கு எதிராக மக்களைத் திசை திருப்புவதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் திரைமறைவிலான ஒப்பந்தங்களை சில இன வாத சிந்தனை கொண்ட பௌத்த பிக்குகளே செய்து கொண்டிருப்பதாக நவசம சமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன குற்றம் சாட்டியுள்ளார்.

பொதுபல சேனா, ராவணா பலய உள்ளிட்ட இனவாத பௌத்த அமைப்புக்களும் இந்த ஒப்பந்தத்தில் இணைந்திருப்பதாகவும் அவர் பட்டியலிட்டுக் காண்பித்தார்.

நவசம சமாஜக் கட்சி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது. புதிய அரசியலமைப்புக்கு எதிராக மக்களைத் திசை திருப்பும் முயற்சிகளில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அணியுடன் சில கடும் போக்குவாத பௌத்த அமைப்புக்களும் ஈடுபட்டு வருகின்றன.

"ஒருமுறை ஏமாற்றம டைந்ததால் மற்றொருமுறை ஏமாற்றமடைய இயலாது. மக்களுடனேயே தாம் ஒப்பந்தம்வைத்துக் கொள்வதாக அநுராதபுரத்தில் வைத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார். இவரிடம்ஒரு கேள்வியை கேட்க விரும்புகிறேன்.

எந்த மக்களுடன் நீங்கள் ஒப்பந்தம் செய்து கொண்டீர்கள்? மகிந்தவுடன் இந்நாட்டிலுள்ள இனவாதிகளே ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதாக மிகத் தெளிவாக தெரிகிறது. தேரர்களும் இவ்வாறு மகிந்தவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றனர். மல்வத்துப்பீட மகாநாயகரை அண்மையில் நான் சந்தித்த போது, புத்தபெருமானின் நோக்கத்தின்படி அனைத்து மனிதர்களுக்கும் சமமான உரிமை இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டார். மகிந்த ராஜபக்ஷவுடன் பொதுபல சேனாவும் ராவணா பலய ஆகியோருமே ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றனர். கலாநிதி இந்துலாகல தர்மரத்ன, பெங்கமுவே நாலக்க தேரருடன் சேர்ந்து இனங்களுக்கு இடையில் மோதலை ஏற்படுத்தும் பொறி என்று அரசியலமைப்பை அர்த்தப்படுத்தியுள்ளனர்.

மேலும் ரோஹண சங்க சபை, புதிய அரசியலமைப்பு அவசியமற்றது என்பதை ஏகமனதுடன் தீர்மானித்திருப்பதாக கூறியிருக்கிறது. நான் நினைக்கிறேன் இவர்களே மகிந்த ராஜபக்ஷவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்" என்று மேலும் தெரிவித்தார். (இ-7)

### ஊழல் மோசடியில் அதிகாரிகள்

# இரு அமைச்சுக்களுக்கு எதிராக முறைப்பாடு

(கொழும்பு)

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி விடயத்தில் அமைச்சுகள் இரண்டின் அதிகாரிகள் ஊழல் மற்றும் மோசடியில் ஈடுபட்டுள்ளனரென, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது.

உயர் கல்வியமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு அதிகாரிகளுக்கு எதிராகவே, மாலபே மருத்துவக் கல்லூரியின் பெற்றோர் சங்கம், ஆணைக்குழுவிடம் முறைப்பாடொன்றைச் செய்து கடிதமொன்றையும் கையளித்து ள்ளது.


'இவர்கள் மேற்கொண்ட ஊழல் காரணமாக 80 ஆயிரம் பட்டதாரிகள் வேலை வாய்ப்பின்றி உள்ளனர் எனவும் 800 பேர் கல்வி வரப்பிரசாதங்கள் கிடைக்கப்பெறாதும் உள்ளனர் எனவும் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, அக்கடிதத்தின் ஊடாகத் தெரிவித்துள்ளார்.


"சைட்டம் கல்வி நிறுவனத்தை நீக்குவதாக அரசாங்கம் வாக்குறுதியளித்துள்ள போதிலும், அதில் கல்வி பயிலும் மாணவர்களின் எதிர்காலப் பாதுகாப்புக் குறித்து, இதுவரை எந்த வேலைத் திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

"சைட்டம் கல்வி நிலையத்தில் கல்வி பயின்று வரும் மாணவர்கள், மீண்டும் அதில் இணைத்துக் கொள்ளப்பட்டமையானது, உயர் கல்வியமைச்சால் வழங்கப்பட்ட பாதுகாப்பு உறுதிமொழிக்கமைவானது என அவர் தெரிவித்தார்.

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி விடயத்தில், உயர்கல்வியமைச்சு, சுகாதார அமைச்சு ஊழியர்கள் மேற்கொண்ட மோசடிகளைச் சாட்சியங்களுடன் நிரூபிக்க முடியும் எனவும் கெமுனு விஜேரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மருத்துவமரம் மருதமரம்




மருதங்காய்


மருதம் பூ

தமிழ் பெயர்- மருதமரம்
ஆங்கிலப் பெயர் - அர்யூன்
தாவரவியல் பெயர் - **Terminaliaellipticawild.**

மருதம் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா, நேபாளம், பங்களாதேஷத்தில் அதிகம் காணப்படுகிறது.

இம் மரமானது ஓங்கியுயர்ந்து வளரக்கூடியது. இம் மரம் சாதாரணமாக ஏழு மீற்றர் சுற்றளவுடன் முப்பது மீற்றர் உயரம் வளரக்கூடியது. சங்க காலத்தில் இதன் சிறப்பு கருதி 'திருமருது' எனப்போற்றினர். மருதமரம் நீர்ச் செழிப்புள்ள இடங்களான ஆற்றோரங்களிலும் வயலோரங்களிலும் செழித்து வளரும். மருதமரத்தில் வெண்மருது, கருமருது, பில்லமருது எனப் பல வகைகள் உண்டு. பில்ல மருது வீட்டுக்கு நிலை, யன்னல் சட்டங்கள் செய்யப் பயன்படுகிறது.

மருதமரத்தை பயிரிட நேரடியாக விதைக்கலாம் அல்லது விதை நாற்றுக்கள் மூலம் பயிரிடலாம். இதன் இலைகளை பட்டுப்பூச்சி உணவாக உண்கிறது. மழைக்காலம் முடிந்ததும் இலைகள் சிவப்பு நிறமடைந்து உதிரும்.

முற்காலத்தில் கோவில் தேர்கள் செய்வதற்கு மருதமரத்தை பயன்படுத்தியுள்ளனர். அத்துடன் காடுகளில் மருதமர வளர்ச்சியைக் கொண்டு நீரூற்று இருப்பது கண்டறிப்படுகிறது. ஓங்கி வளர்ந்த மருதமரத்தின் அருகே ஆழத்தில் நீரூற்று இருக்கும் என நம்பப்படுகிறது. உவர் நிலத்தில் மருதமரத்தை வளர்த்தால் உவரின் கடுமை குறைந்துவிடும். நிறைய கிளைகள் இருப்பதால் தூசிக் காற்றிலுள்ள தூசியையும் வடிகட்டிக் கொடுத்திடும்.

எப்போதும் பசுமையாகக் காட்சியளிக்கும் மருதமரத்தை மருத்துவமரம் என்றே சொல்லலாம். மருதமரத்தில் அளவற்ற மருத்துவகுணங்கள் கொண்டது. மருதம் பட்டையில் விற்றமின் சி மிகுதியாக காணப்படுகிறது.

மருதம்பட்டையை அரைத்துப் பொடியாகவும் மருதம் பட்டையை தண்ணீரில் ஊற வைத்து குடிநீராகவும் பயன்படுத்தலாம். மருதம் பட்டை உடலுக்கு மிகுந்த குளிர்ச்சியைத் தருகிறது. அத்துடன் உடலில் இரத்தக்கொதிப்பு, இதயபடபடப்பு, தூக்கமின்மை, நீரிழிவு பிரச்சினை, கல்லீரல் பிரச்சினை போன்றவைகள் கட்டுப்பாட்டுக்குள் வரும்.

# மஹாகவியின் 'புதியதொரு வீடு' மீண்டும் மேடையேறுகின்றது



(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் மஹாகவியின் புதியதொருவீடு நாடகம் நாளை மறுதினம் சனிக்கிழமை இரண்டு காட்சிகளாக முற்பகல் 10.30 மணிக்கும் மாலை 4 மணிக்கும் இலக்கம் 286, பிரதானவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின், கலைத்தூது கலையகத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

1969 ஆம் ஆண்டு மஹாகவியினால் எழுதப்பட்ட மேற்படி இந்நாடகம் முதன் முதலாக அ. தாசீசியசினால் 1971 ஆம் ஆண்டு கொழும்பில் மேடையேற்றப்பட்டது. அதன் பின் பலதடவைகள் பல நெறியாளர்களினால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டு வந்துள்ளது. திருமறைக்கலாமன்றத்தினாலும் பல தடவைகள் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்ட இந்நாடகம் இறுதியாக கடந்த பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டது. தற்போது மீண்டும் மேடையேற்றப்படுகின்றது.

மஹாகவியின் கவிதை நாடகமாகிய இந் நாடகம் மீனவக் கிராமமொன்றின் கதை மாந்தரினையும் கடலோடு தொடர்புடையதாக அவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வின் சவால்களையும் வெளிப்படுத்துகின்றது. இந் நாடகம் க.பொ.த. சாதாரண தரத்தில் நாடகமும் அரங்கியலும் பயிலும் மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்தில் பாடநூலாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 91முறைப்பாடுகள் சட்டமா அதிபரிடம்

(கொழும்பு)

பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினால் விசாரித்து முடிக்கப்பட்ட 91 முறைப்பாடுகள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய, 12 முறைப்பாடுகள் தொடர்பில் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1251

Search for people, places and things | Nagendram Home

**தர்சன்**





**கோபி**




**பிரகாஸ்**




**சுதா**




**கார்த்தி**




**கண்ணா**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வழமைக்கு மாறாக மட்டக்களப்பில் பனி மூட்டம்



(ஏறாவூர்)

வழமைக்கு மாறாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று புதன்கிழமை அதிகாலையிலிருந்து பொழுது புலரும் வரை பனி மூட்டம் நிலவியது.

ஏறாவூர், மட்டக்களப்பு நகர், காத்தான்குடி உள்ளிட்ட நகரப் பகுதிகளில் நிலவிய இந்த பனி மூட்டத்தால் மட்டக்களப்பு -கொழும்பு நெடுஞ்சாலையில் சுமார் 30 மீற்றர் தூரத்திற்கப்பால் வீதி தெளிவில்லாத நிலைமை இருந்தது.

இதனால் வாகன சாரதிகள் வாகன முகப்பு வெளிச்சத்துடன் மிகுந்த அவதானமாகப் பயணிக்க வேண்டியிருந்தது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின் காடு சார்ந்த வயற் பிரதேசங்களில் நிலவிய பனிமூட்டம் பொழுது புலர்ந்த பின்னும் நீண்ட நேரம் நீடித்ததாக கிராம மக்கள் தெரிவித்தனர். (இ)



இலங்கை இராணுவத்தின் 512 படைப்பிரிவின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் ஒன்று கடந்த 12 ஆம் திகதி நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெற்றது. யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் கொழும்பிலுள்ள அசிரி (தனியார்) வைத்தியசாலை மருத்துவ உத்தியோகத்தர்களின் ஆதரவுடன், மருத்துவ முகாம் இடம்பெற்றது. இந்த மருத்துவ முகாமில் தொற்றாநோயுடன் 177 நோயாளிகள் கண்டறியப்பட்டிருந்தனர். (படங்கள்:-சோபிகா)

# 2018ஆம் ஆண்டுக்காக 2 பாதீடுகள் தயாரிப்பு

## ஜே.வி.பி.எம்.பி.பிமல் குற்றச்சாட்டு



(கொழும்பு)

"இம்முறை வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் போது, இரண்டு வரவு - செலவுத்திட்ட ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன" என்று, மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

"இவ்விரு ஆவணங்களில் ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அதேவேளை, நிறைவேற்றுவதற்காக வேறொரு வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது" என, முன்னணியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

"நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில், அரச நிறுவனங்கள் விற்கப்படுவது குறித்தோ அல்லது குத்தகைக்கு விடப்படுவது குறித்தோ குறிப்பிடப்படவில்லை.

இருப்பினும் உண்மையிலேயே, அரச நிறுவனங்கள் பலவற்றைத் தனியாருக்கு விற்பனை செய்யவும் மேலும் சிலவற்றை தனியாரிடம் குத்தகைக்கு விடவும் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

"அதனால், இந்த வரவு - செலவுத் திட்டத்தினால் நாட்டுக்கு எவ்வித நன்மையும் இல்லை. அதனால், இம்முறை வரவு - செலவுத் திட்டத்தை எமது கட்சி எதிர்க்கும் என, பிமல் ரத்நாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# சபாநாயகர்-கடற்படைத்தளபதி சந்திப்பு



(கொழும்பு)

புதிய கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் சிரிமேவன் ரணசிங்க மற்றும் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் சபாநாயகரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் இடம்பெற்றது.

புதிய கடற்படை தளபதியாக பதவியேற்றதை தொடர்ந்து வைஸ் அட்மிரல் சிரி மேவன் ரணசிங்க சபாநாயகரை சந்திக்கும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். குறித்த சந்திப்பில் புதிய கடற்படை தளபதிக்கு சபாநாயகர் வாழ்த்து தெரிவித்ததுடன் சந்திப்பின் இறுதியில் இருவருக்குமிடையில் நினைவுச்சின்னங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வெள்ளத்தால் பாதிப்பு



(கரணவாய்)

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக கொட்டித் தீர்த்த கனமழையால் கரணவாய் கிராய்கப்பூது, கரவெட்டி,நுணுவில் பகுதிகளிலுள்ள வயல் நிலங்களில் வெள்ளநீர் வற்றாததால் நெற் பயிர்கள் அழிவடைந்து வருவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (இ-10-60)

# தனி நபரின் மீன் நுகர்வு அதிகரிப்பு



(கொழும்பு)

இவ் வருடத்தில் நபரொருவர் நுகரும் மீனின் அளவு அதிகரித்துள்ளதாக, மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில், குறித்த அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு நபரொருவர் 22 கிலோகிராம் மீனை நுகர்ந்ததாகவும், இவ்வருடம் இது 46 கிலோகிராமாக அதிகரித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதற்கமைய, அடுத்த வருடம் இந்தத் தொகையை 50 கிலோகிராமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு, அமைச்சர் மகிந்த அமரவீர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 220 | 150 | 170 | 240 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 75 | 90 | 80 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 520 | 540 | 800 | 600 | 700 |
| தக்காளி | 150 | 100 | 100 | 120 | 140 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 20 | 20 | 70 | 50 | 50 | 50 |
| கோவா | 150 | 160 | 80 | 120 | 160 | 160 | 160 |
| கரட் | 130 | 100 | 80 | 120 | 200 | 240 | 200 |
| பூசணி | 80 | 100 | 60 | 70 | 80 | 100 | 50 |
| புடோல் | 100 | 100 | 70 | 70 | 120 | 100 | 140 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80 | 50 | 120 | 70 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 250 | 300 | 240 | 320 | 280 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 150 | 120 | 130 | 120 | 120 |
| பாகற்காய் | 300 | 400 | 250 | 240 | 320 | 320 | 350 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 70 | 80 | 120 | 160 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 60 | 80 | 80 | 100 | 70 |
| பயற்றங்காய் | 250 | 300 | 150 | 180 | 240 | 240 | 300 |
| லீக்ஸ் | 150 | 280 | 150 | 200 | 200 | 240 | 200 |
| பீற்றூட் | 100 | 100 | 80 | 100 | 100 | 120 | 80 |
| கறிமிளகாய் | 350 | 200 | 230 | 100 | 300 | 400 | 250 |
| முருங்கைக்காய் | 250 | 100 | 170 | 320 | 240 | 200 | 800 |
| போஞ்சி | 200 | 280 | 90 | 100 | 200 | 240 | 200 |
| கத்தரிதம்புள்ள | 200 | 100 | 100 | 180 | 200 | 160 | 180 |
| கீரை - 1பிடி | 60 | 50 | 30 | — | 50 | 40 | 40 |
| தேசிக்காய் | 120 | 50 | 150 | 80 | 100 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 80 | 80 | 90 | 60--100 | 100 |
| இராசவள்ளி | — | — | 230 | 75 | — | — | — |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | 240 | — |
| முள்ளங்கி | 80 | — | 30 | 280 | 80 | 120 | 70 |
| பொன்னாங்காணி | 50 | — | 20 | 80 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 20 | — | 08 | 50 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 100 | — | 25 | — | 80 | 80 | 80 |

# 5 பில்லியன் ரூபாய் வழங்க வேண்டும்

# கடற்படையிடம் நட்டஈடு கோரி அவன்கார்ட் நிறுவனம் வழக்கு

(கொழும்பு)

சர்வதேசக் கடலில் பயணிக்கும் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் வகையில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட பணியை, இலங்கைக் கடற்படையினர் பலவந்தமாகத் தடுத்ததால் ஏற்பட்டுள்ள நட்டத்துக்காக, இலங்கைக் கடற்படைத் தளபதிகள், 5 பில்லியன் ரூபாயை நட்ட ஈடாகக் கொடுக்க வேண்டும் என்று, அவன்கார்ட் மெரிடைம் நிறுவனம், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில், நேற்று முன்தினம் வழக்கொன்றைத் தாக்கல் செய்தது.

குறித்த நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கின் பிரதிவாதிகளாக, சட்டமா அதிபர், பாதுகாப்புப் படைகளின் பிரதானி அட்மிரல் ஆர்.சி.விஜேகுணரத்ன, முன்னாள் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் டி.எப்.எல். சின்னையா மற்றும்கடற்படைத் தளபதி எஸ்.எஸ். ரணசிங்க ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (இ-7)

# பியருக்கான வரியைக் குறைக்கும் எனது தீர்மானத்தில் மாற்றமில்லை

## மங்கள சமரவீர உறுதி



(கொழும்பு)

பியர் வகைகளுக்கான வரியை குறைக்கும் தீர்மானத்தில் மாற்றமில்லை என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பியர் மற்றும் வைன் வகைகளுக்கான விலையை குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அண்மையில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தில் பியருக்கான வரி குறைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், பியருக்கான வரி குறைக்கப்படுவதனை பௌத்த மாநாயக்க தேரர்கள் முதல் பல்வேறு தரப்பினர் எதிர்த்து வருகின்றனர்.

இந்த நிலையில், பியருக்கான வரி குறைப்பு குறித்த தீர்மானத்தில் மாற்றமில்லை என நிதி அமைச்சர் மீளவும் வலியுறுத்தியுள்ளார்.

மதுபானத்தில் அடங்கியுள்ள அல்கஹோலின் அளவினை அடிப்படையாகக் கொண்டு வரி அறவீடு செய்வதானது சர்வதேச நடைமுறை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றிடம் அமைச்சர் மங்கள மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)




# படை விட்டோடிகளின் பொது மன்னிப்புக் காலம் நீடிப்பு

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியுள்ள ஊழியர்கள், மீண்டும் சேவையில் இணைந்துகொள்வதற்கோ அல்லது உத்தியோகபூர்வமான முறையில் சேவையில் இருந்து விலகிச் செல்வதற்கோ விடுக்கப்பட்டிருந்த பொது மன்னிப்புக் காலம், எதிர் வரும் 22 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 23ஆம் திகதி முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்ட இந்த மன்னிப்புக் காலம், நேற்றுடன் முடிவடையவிருந்த நிலையிலேயே, 22ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதென, இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரொஷான் செனவிரத்ன தெரிவித்தார்.

இவ்வாறு நடைமுறையில் உள்ள பொது மன்னிப்புக் காலத்தின் இதுவரையான நாள் வரையில், 8.052 பேர் சரணடைந்துள்ளனர் என்றும், இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (இ-7)

# சு.கவை தோற்கடிக்க கூட்டு எதிரணி சூழ்ச்சி

## அமைச்சர் தயாசிறி குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியிலுள்ள சில அடிப்படைவாதிகள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை தோற்கடிக்க திட்டமிட்டு வருவதாக விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்துவதன் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சியை பலப்படுத்தும் முயற்சிக்கு ஒருபோதும் விரும்பமில்லை என அவர் தெரிவித்தார்.

இதன்காரணமாக, ஒன்றிணைந்து செயற்படுவதற்கு அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட போதும் அடிப்படைவாதிகள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை தோற்கடித்து இன்னும் 10 அல்லது 15 வருடங்களில் ஆட்சிக்கு வருவதற்கு முயற்சிப்பதாக அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் குருநாகலையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மகிந்த அணியுடன் இணைந்து செயற்படுவதற்கு எதிர்பார்த்துள்ளீர்களா? என செய்தியாளர்கள் வினவியபோதே அவர் பதிலளிக்கையில், சில தரப்பினர் ஒன்றிணைவதற்கும், இன்னும் சில தரப்பினர் விலகுவதற்கும் எத்தனிக்கின்றார்கள்.

காலம் செல்ல செல்ல தேர்தல்கள் இடம்பெறும் தருணங்களில் இந்த விடயங்களை அறிந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (இ-7)

# அரச அதிகாரிகள் கூட பழிவாங்கப்படுகின்றனர்

## மகிந்த கவலை



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம், தனது காலத்தில் இருந்த அரசாங்க அதிகாரிகளைக் கூட பழிவாங்குவதாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, முன்னாள் ஜனாதிபதியின் பிரதம அதிகாரி காமினி செனரத்தை சந்திக்க மகிந்த நேற்று முன்தினம் வெலிக் கடை சிறைச்சாலைக்கு சென்றிருந்தார்.

இதன்போதே அவர் மேற் கண்டவாறு கருத்து வெளி யிட்டுள்ளார்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 4 பில்லியன் ரூபாய் பணத்தை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில், காமினி செனரத் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மலையகத் தமிழர்களை மீண்டும் நாடற்றவர்களாக்க வேண்டாம்

## திலகராஜ் எம்.பி.கோரிக்கை



(கொத்மலை)

"இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழர்கள் மீது, மீண்டும் இந்திய அடையாளத்தைப் பதித்து, அவர்களை மீண்டும் நாடற்றவர்களாக்கும் முயற்சியில் யாரும் ஈடுபட வேண்டாம் என, நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ் கோரிக்கை விடுத்தார்.

மலையகப் பெருந் தோட்டப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தனி வீடுகளுக்கு முழு உரித்துடனான காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு கட்டமாக, கொத்மலை பிரதேச சபைக்குட்பட்ட குயின்ஸ்பெரி தோட்டக் குடியிருப்பாளர்கள் 23 பேருக்கு காணி உறுதி வழங்கி வைக்கும் நிகழ்வு, அண்மையில் கொத்மலை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கோரினார்.

"இன்றைக்கு 90 வருடங்களுக்கு முன்பே அரசியல் உரிமையை வென்றெடுத்த மலையக மக்களுக்கு, இந்த ஆண்டுதான் காணியுரிமை கிடைத்திருக்கிறது. இதற்கு முன்னர் பயன் அனுமதிகளை சொந்தமாக்குவதாக கடிதங்களை பெற்றுக்கொடுத்த அரசியல்வாதிகளுக்கு மத்தியில் மலையகத்தில், அமைச்சர் திகாம்பரம் காலத்தில் தான் தோட்டத் தொழிலாளர்களுக்குரிய தனி வீடுகளுக்கான முழு உரித்துடனான காணி உறுதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது. இது வரலாற்று சாதனையாகும்.

"மலையக மக்களின் அரசியல் வரலாறு நீண்டது. 200 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை நாட்டுக்கு கூலிகளாக அழைத்து வரப்பட்ட மக்கள், தமது நூறாவது ஆண்டிலேயே தொழிற்சங்க, அரசியல் ரீதியாக தமது அடியை எடுத்து வைத்தனர்.

"வாக்குரிமை போராட்டத்தையே மலையகத்தின் முதல் அரசியல் போராட்டமாகக் காட்ட முனைவது வரலாற்றை தவறாக திரிபுபடுத்துவதாகிவிடும். அவரவர் சௌகரியத்திற்கு ஏற்ப வரலாறு வளைந்துகொடுக்காது. எது உண்மையோ அது என்றோ ஒருநாள் வெளிப்பட்டுத் தீரும். மலையக தோட்டத் தொழிலாள மக்களுக்கு முழு உரித்துடனான காணியுரிமை பெற்றுக் கொடுக்கப்பட்ட வரலாற்றுப்பதிவையும் எவராலும் திரிபுபடுத்த முடியாது. இந்த வரலாற்றுச் சாதனைகளை திசை திருப்ப பெயர் மாற்ற நாடகங்களை சிலர் அரங்கேற்றி வருகின்றனர்.

"அதிகளவான தியாகங்களும் விட்டுக்கொடுப்புக்களும் செய்து இலங்கை நாட்டில் இந்திய வம்சாவளியினரான மலையகத் தமிழர்கள் இப்போது உறுதிபெற்று வருகின்றனர். இவர்கள் மீது மீண்டும் இந்திய அடையாளத்தைப் பதித்து, அவர்களை மீண்டும் நாடற்றவர்களாக்கும் முயற்சியில் யாரும் இறங்க முற்படக்கூடாது.

இலங்கைக்கு வந்து இருநூறு ஆண்டுகள் கடந்த நிலையில், இப்போது தான் காணி புரிமையை இலங்கையில் பெறுகின்றனர். உள்ளூராட்சி அதிகார ஆட்சியில் பங்கேற்கும் உரிமையைப் பெறுகின்றனர். இவற்றை இல்லாமலாக்க, ஒரு போதும் இடமளிக்க முடியாது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 10 வருடங்களின் பின்னர் இலங்கைக் கடலில் தோன்றிய விலங்கினம்



(கொழும்பு)

இலங்கையின் கடற்பரப்பில் பத்து வருடங்களின் பின்னர் கடல் பன்றிக் கூட்டமொன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

கல்பிட்டி கடற்பரப்பில் இந்த கடல் பன்றிக் கூட்டம் மீனவர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

10 வருடங்களுக்கு முன்னர் கடல் பன்றியொன்று கோத்துபிட்டிய வாடிய பிரதேசத்தில் தோன்றிய பின்னர் தற்போது கல்பிட்டியில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இலங்கை வனவிலங்கு திணைக்களம், நாரா நிறுவனம், ஐ.யூ.சி.யூ நிறுவனம் கடல் ஆமை பாதுகாப்பு நிறுவனம் ஆகியன கல்பிட்டிய பிரதேசத்தில் இந்த கடல் பன்றியை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

கடல்தாவரங்களை உண்ணும் கடல் வாழ் பாலூட்டி மிருகமான கடல் பன்றி 3 அல்லது 4 மீற்றர் வரை நீளம் கொண்டது. கடல் பன்றி 500 முதல் 900 கிலோகிராம் வரை எடை கொண்டது. (இ-7)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17.11.2017-15.12.2017

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



மன உறுதியோடு செயற்பட்டு மற்றவர்களை ஆச்சரியப்பட வைக்கும் மேஷ இராசி வாசகர்களே!

## எதிர்பாராத நல்ல தகவல்கள் வந்து சேரும்!

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியைக் குருபகவான் பார்க்கிறார். அவரோடு தன சப்தமாதிபதியான சுக்ரனும், சுகாதிபதியான சந்திரனும் கூடியிருக்கிறார்கள். எனவே சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். தகராறு செய்தவர்கள் தானாக விலகுவர். பகல்- இரவு பாராமல் பாடுபட்டதற்கேற்ற பலன்கள் இப்பொழுது கிடைக்கும்.

உங்கள் இராசிநாதன் செவ்வாய் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அவர் 8ஆம் இடத்திற்கும் அதிபதியாக விளங்குபவர். அஷ்டமாதிபதி 6இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் சில எதிர்பாராத நல்ல தகவல்கள் வந்து சேரும். இடம், பூமி வாங்குவதில் இருந்த பிரச்சினைகள் அகலும். கடன் சுமை அளவிற்கு அதிகமாக இருக்கிறதே என்று கவலைப்பட்டவர்கள், இப்பொழுது மகிழ்ச்சியடையும் விதத்தில் ஒரு தொகை கிடைக்கும்.

அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருந்தாலும், அது விலகுவதற்கான நேரமிது. சனி விலகுவதற்கு 2 மாதங்களுக்கு முன்னதாகவே நற்பலன்களைக் கொடுப்பார் என்பது நம்பிக்கை. அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, நல்ல நேரம் தொடங்கி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். வழக்குகள் சாதகமாக முடியும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். வியாபாரத்தில் இருந்த போட்டிகள் அகலும். ஒவ்வொரு காரியத்திலும் யோசித்து செயற்பட்ட நீங்கள், இனித் துணிந்து செயற்பட்டு காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள்.

மந்தன் செய்வதைப் போல மகேஸ்வரன் கூடச் செய்யமாட்டான் என்று பழமொழியைச் சொல்லி வைத்தார்கள். மந்தன் என்று சனிபகவானை அழைப்பது வழக்கம். சனியை விலகும் சமயத்தில் வழிபட்டால் எந்த நாளையும் இனிய நாளாக அமைத்துக் கொடுப்பார் என்பது நம்பிக்கை. எனவே திருநள்ளாறு, திருக்கொள்ளிக்காடு, பெரிச் சிக் கோவில், குச்சானூர், நல்லிப்பட்டி, திருக்கொடியலூர் போன்ற சிறப்பு தலங்களுக்கு, உங்கள் ஜாதக அடிப்படையில் யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வரலாம்.

பார்க்கும் குருவையும் பலப்படுத்துவது நல்லது. வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருபகவான் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். திருக்கார்த்திகைத் திரு நாளில் கந்தப்பெருமான் சன்னிதியில் கவசம் பாடி வழிபட்டால் நினைத்த காரியம் நிறைவேறும்.

விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்

சுக்ரன் உங்கள் இராசிக்கு 2,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். தன, சப்தமாதிபதியாக விளங்கும் சுக்ரன், மாதத் தொடக்கத்தில் பணப்புழக்கத்தை அதிகரிக்க வைத்திருப்பார். அதே நேரத்தில் நவம்பர் 28ஆம் திகதி விருச்சிக இராசிக்குச் செல்கின்றார். 8இல் சுக்ரன் மறையும் பொழுது, சுபவிரயங்கள் அதிகரிக்கும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கவில்லையே என்ற கவலை அகலும். பெண் பிள்ளைகளின் சுபச் சடங்குகள், பெற்றோர்களின் மணி விழாக்களை நடத்தி மகிழும் வாய்ப்பு ஒரு சிலருக்கு ஏற்படும். டிசெம்பர் 10ஆம் திகதி சுக்ரன் வலிமையிழக்கும் பொழுது, மாதக் கடைசியில் பற்றாக்குறை பட்ஜெட் உருவாகலாம். எனவே திட்டமிட்டுச் செலவு செய்வது நல்லது.




செவ்வாய் பெயர்ச்சி காலம்

டிசெம்பர் 2ஆம் திகதி துலாம் இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். இராசிநாதன் சப்தம ஸ்தானத்திற்கு செல்லும் பொழுது, நன்மைகளை அதிகம் செய்வார். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். வீடு கட்டிக்குடியேற வேண்டு மென்று நினைத்தவர்களுக்கு, நல்ல வாய்ப்புகள் இப்பொழுது வரப்போகின்றது. சொத்துகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்.

தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

புதனின் வக்ர காலம்

நவம்பர் 25ஆம் திகதி முதல் டிசெம்பர் 12ஆம் திகதி வரை, விருச்சிக இராசிக்குள் இருக்கும் புதன் வக்ரம் பெறுகிறார். 3,6இற்கு அதிபதி வக்ரம் பெறும்பொழுது, உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். பொது நலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். வீண் பழிகள் அகலும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

மாதத் தொடக்கத்தில் மகிழ்ச்சிக் குரிய சம்பவங்கள் நிறைய நடைபெறும். சுபகாரியப் பேச்சுகள் நல்ல முடிவிற்கு வரும். பயணங்களால் பலன் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படத் தொடங்குவீர்கள். ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சுக்ரன் பலமிழக்கும் நேரத்திலும், புதனின் வக்ர காலத்திலும் பற்றாக்குறை ஏற்படலாம். தாய்வழி ஆதரவு உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். மேலும் அலுவலகத்தில் கேட்ட உதவிகளும், எதிர்பார்த்த சலுகைகளும் கிடைக்கலாம். முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றத்திற்கு வித்திடும்.



எதையும் வெளிப்படையாகப் பேசி முடிவெடுக்கும் ரிஷப இராசி வாசகர்களே!

## எடுத்த முயற்சிகள் கைகூடும்!

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்ரன் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு அஷ்டம லாபாதிபதியான குருவும் இணைந்திருக்கிறார். அஷ்டமாதிபதி 6இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோகம் செயற்படும். எனவே திடீர் மாற்றங்கள் பலவும் இம்மாதத்தில் நடக்கலாம். செய்யும் தொழிலில் உயர்வு, செயற்பாட்டில் வெற்றி போன்றவை ஏற்படும். வேலைக்காக விண்ணப்பித்து பல மாதங்களாக காத்திருந்தவர்களுக்கு, எதிர்பார்த்த வேலை அமையும். நேர்முகத் தேர்விற்கு அழைப்புகள் வந்து சேரும். வருமானம் வருவதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள்.

சப்தம ஸ்தானத்தில் இருக்கும் சனிபகவான் சூரியனோடும், புதனோடும் இணைந்து சஞ்சரிக்கிறார். புத-ஆதித்ய யோகம் செயற்பட்டாலும், சூரிய, சனி சேர்க்கை அவ்வளவு நல்லதல்ல. பெற்றோர் வழியில் பிரச்சினைகள் உருவாகி மறையும். பங்காளிப் பகை வளராமல் பார்த்துக்கொள்ளுங்கள். சொத்துகளால் ஏற்பட்ட பிரச்சினைகளை, பெரியோர்களின் தொடர்புகளாலும், பஞ்சாயத்துகளாலும் தீர்த்துக் கொள்வது நல்லது.

சனி விலக ஆயத்தமாகும் நேரம் என்பதால், ஆரோக்கிய பாதிப்புகள் கொஞ்சம் குறைவாகவே இருக்கும். நோய்க்கான அறிகுறிகள் தெரியும் பொழுதே, மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம். மாற்று மருத்துவம் உடல்நலத்தைச் சீராக்கும். குழந்தைகளின் கல்வி நலன் கருதியும், கல்யாண வாய்ப்புகள் கருதியும் நீங்கள் எடுத்த புது முயற்சிகள் கைகூடும். படித்து பட்டம் பெற்றவர்களுக்கு உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கை கூடும்.

பொதுவாக நந்தி வழிபாடு உங்களுக்கு அதிக நன்மைகளை வழங்கும் என்பதால், பிரதோஷ நேரத்தில் சிவாலயம் சென்று நந்தியம்பெருமானையும், உமாமகேஸ்வரரையும் வழிபாடு செய்யுங்கள். செவ்வாய் உங்கள் இராசிக்கு சப்தம விரயாதிபதி என்பதால், வாழ்க்கையில் வளர்ச்சி ஏற்பட, குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்க, செவ்வாய்க்குரிய தெய்வமாக விளங்கும் முருகப் பெருமானை, திருக்கார்த்திகைத் திருநாளில் வழிபாடு செய்யுங்கள்.

விருச்சிக சுக்ரனின் சஞ்சாரம்!

உங்கள் இராசிநாதன் சுக்ரன் நவம்பர் 28ஆம் திகதி விருச்சிக இராசிக்குச் செல்கிறார். சப்தம ஸ்தானத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போவதால் குடும்பத்தினருடன் ஏற்பட்ட மனக் கசப்பு நீங்கும். கருத்து வேறுபாடுகள் அகலும். உற்சாகத்தோடு பணிபுரியத் தொடங்குவீர்கள். உயர்ந்த மனிதர்களின் சந்திப்பு கிடைக்கும். பண வரவு போதுமானதாக இருக்கும். பழுதான வாகனங்களை சரிசெய்ய வாய்ப்புகள் கைகூடி வரும். தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த பொருட்களையும், வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!

டிசெம்பர் 2ஆம் திகதி துலாம் இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 7,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் 6ஆம் இடத்தில் சஞ்சரிப்பது ஒரு வழிக்கு யோகம்தான். வாழ்க்கைத் துணை வழியே ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். நமது சம்பாத்தியம் மட்டும் போதாது வாழ்க்கைத் துணையும் சம்பாதித்தால் தான் மிதமிஞ்சிய பொருளாதாரம் கிடைக்கும் என்று நினைத்தவர்களின் விருப்பங்கள் ஈடேறப் போகிறது. உதிரி வருமானங்கள் பெருகும். உடன்பிறப்புகளின் இல்லங்களில் நடைபெறும் சுப நிகழ்வுகளை, முன்னின்று நடத்திப் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

புதனின் வக்ர காலம்!

நவம்பர் 25 முதல் டிசெம்பர் 12 வரை விருச்சிக இராசியில் சஞ்சரிக்கும் புதன் வக்ரம் பெறுகிறார். தன பஞ்சமாதிபதியான புதன் வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. எனவே பொருளாதாரத்தில் பற்றாக்குறை ஏற்படலாம். சூரியபலம் நன்றாக இருப்பதால் கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

மாதத் தொடக்கத்தில் இராசிநாதன் 6இல் சஞ்சரிப்பதாலும், அவரோடு குரு இணைந்திருப்பதாலும் புதிய திருப்பங்கள் ஏற்படும். புகழ் மிக்கவர்கள், உங்களுக்கு வேலை வாய்ப்புகள் கைகூட வழிவகை செய்து கொடுப்பர். ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. எதிர்பார்த்தபடியே சில நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். பிள்ளைகள் வழியே வந்த பிரச்சினை தீரும். தாய்வழி ஆதரவு உண்டு. டிசம்பர் 10ஆம் திகதிக்கு மேல் எதிர்பாராத விரயங்களை சந்திக்க நேரிடும். ஒருசிலருக்கு வெளிநாடு செல்லும் அனுகூலம் உண்டு. சுப்ரமணியர் வழிபாடு சுகங்களையும், சந்தோஷங்களையும் வழங்கும்.

(தொடரும்)

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு.
~ பாவேந்தர் பாரதிதாசன்


வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk


## தர்மத்தின் வெற்றிக்காக வலம்புரிச் சங்கு ஒலிக்கும்

அன்பு வாசகர்களுக்கு வணக்கம். கடந்த சில நாட்களாக வலம்புரிக்கு ஏகப்பட்ட தொலைபேசி அழைப்புகள் வந்தவண்ணமுள்ளன.

தமிழ் மக்கள் பேரவையின் சுவட்டம், உள்ளூராட்சி சபைத் தேர்தல், அரசியல் கட்சிகளின் கூட்டு இவை தொடர்பில் அந்தக் கேள்விகள் அமைந்திருந்தன.

தொலைபேசி அழைப்பை எடுத்த அத்தனை பேரும் வலம்புரி என்ன சொல்கிறது. அதன் நிலைப்பாடு என்ன? என்ற கேள்விகளைக் கேட்டிருந்தனர்.

இச்சந்தர்ப்பத்தில்தான் வலம்புரி தனது நிலைப்பாட்டை தெரியப்படுத்த முன்வருகிறது.

12.11.2017 அன்று தமிழ் மக்கள் பேரவையின் சுவட்டம் நடைபெற்றது.

அதில் பேரவையின் தலைவரும் வடக்கின் முதலமைச்சருமாகிய சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் ஆற்றிய உரையை வலம்புரி தனது முன்பக்கத் தலைமைச் செய்தியாக தந்திருந்தது.

கூடவே தமிழ் மக்கள் பேரவையின் எழுத்து மூலமான அறிக்கையும் அப்படியே தரப்பட்டிருந்தது.

தவிர, பேரவையில் இடம்பெற்றிருக்கக்கூடிய அரசியல் கட்சிகள் சார்ந்த சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் ஊடகவியலாளர் மத்தியில் தெரிவித்த கருத்துக்களையும் வலம்புரி வெளிப்படுத்தியிருந்தது.

வலம்புரியைப் பொறுத்தவரை அது தனது நடுநிலையில் நின்று என்றும் விலகாது.

அதேவேளை யாருடைய செய்திகளையும் புறந்தள்ளியோ அன்றி திரிபுபடுத்தியோ அல்லது பொய்யான தகவல்களைப் பிரசுரித்தோ பத்திரிகைத் தர்மத்துக்குக் கேடு செய்ததும் இல்லை. செய்யப்போவதும் இல்லை.

பத்திரிகைத் தொழில் என்பது ஒரு தர்மம். அந்தத் தர்மத்தை ஆற்றும் நாம் அதிலிருந்து வழுவினால் அது பாவச் சொத்தாகும்.

அது ஊழ்வினையின் வடிவில் வந்துறுத்தும் என்பதில் நாம் நூறு வீத நம்பிக்கை கொண்டவர்கள்.

எனவே ஒருபோதும் செய்திகளைத் திரிபுபடுத்தி, மக்களைக் குழப்பி, பொது அமைதிக்குப் பங்கம் செய்யவோ அன்றித் தனி மனிதர்களின் மனதை நோகடிக்கவோ நாம் தயாரில்லை.

அதேநேரம் தர்மத்தை நிலைநாட்ட வேண்டிய நேரத்தில் அதனை நிலைநாட்டவும் வலம்புரி தயங்கியது கிடையாது.

இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். எங்கள் மக்கள் இழந்தவை ஏராளம்.

அதிலும் ஒரு வீட்டில் மூன்று பேர் நான்கு பேர் என்று யுத்தத்தில் உயிரிழந்த கொடுமை தாழ முடியாது.

ஏன், குடும்பம் குடும்பமாகக் கொல்லப்பட்ட துயரங்களும் வன்னிப்போரில் நடந்துள்ளன. இப்பெரும் பாவச் செயல் நடந்திருக்கும் வேளையில்; நாங்கள் எங்கள்பாட்டில், எங்களுக்கு ஏற்றபாட்டில் செய்திகளைப் பிரசுரிப்பதும் அதன் வழி மக்களைக் குழப்புவதும் மகாபாவம்.

ஆகையால் வலம்புரி சரியான செய்திகளைத் தர விரும்புகிறது. அந்தச் செய்திகள் எங்கள் மக்களுக்கு உண்மையைச் சொல்ல வேண்டும்.

இந்த உண்மை மக்கள் சரியான தீர்மானத்தை எடுப்பதற்கு ஆதாரமாக இருக்க வேண்டும். இந்தக் குறிக்கோளோடு வலம்புரி தனது பணியைத் தொடரும்.

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி என்ற வள்ளுவன் நெறியில் தர்மத்தின் வெற்றிக்காக வலம்புரிச் சங்கு ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

# நாட்டிலுள்ள அனைத்துப் பிள்ளைகளுக்கும் கல்வியை பெற்றுக்கொடுப்பது அரசின் கடமை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து பிள்ளைகளுக்கும் கல்வி உரிமையைப் பெற்றுக் கொடுப்பது சர்வதேச சமவாயங்களுக்கு அமைவாக மட்டுமன்றி அரசியலமைப்புக் கேற்பவும் அனைத்து அரசாங்கங்களினதும் கடமையாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கண்டி புஷ்பதான மகளிர் கல்லூரியின் 25ஆவது ஆண்டு நிறைவு விழா மற்றும் வருடாந்த பரிசளிப்பு விழாவில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இன்று நகரங்களில் பிரதான பாடசாலைகளுக்கு இருந்துவரும் போட்டி காரணமாக கொழும்பு நகரத்தில் வாழும் குறைந்த வசதிகளையுடைய குடும்பங்களைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான பிள்ளைகளுக்கு தமக்கு அருகில் உள்ள பாடசாலைகளுக்கு அனுமதி பெறுவதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.

நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் தேவையான பௌதிக மற்றும் மனித வளங்களைக் குறைவின்றி வழங்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பது பிரதான பாடசாலைகளுக்கு இருந்து வரும் போட்டித்தன்மையைக் குறைத்து அனைத்து பிள்ளைகளுக்கும் தடையின்றி கல்வி உரிமையைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே யாகும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, கல்வித்துறையில் போட்டித் தன்மை காரணமாக ஏற்பட்டிருக்கும் இந்த நிலை விரைவில் சரிசெய்யப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பரீட்சையில் சித்தியடைவது போன்று சமூகத்திலுள்ள சவால்களையும் தடைகளையும் புரிந்துகொண்டு தன்னம்பிக்கையுடன் வாழ்க்கைக்கு முகங்கொடுத்து வாழ்க்கையை வெற்றிகொள்வதற்கு மாணவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இன்றைய தினம் (நேற்று) செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் 10 வயது பாடசாலை மாணவி தற்கொலை செய்துகொண்ட நிகழ்வை நினைவுபடுத்திய ஜனாதிபதி, தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கையில் இலங்கை முன்னணியில் இருப்பதாகக் குறிப்பிட்டதுடன், இந்த மோசமான நிலைமையிலிருந்து சமூகத்தை மீட்பது குறித்து பொறுப்புவாய்ந்த அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, மத்திய மாகாண அமைச்சர் திலின பண்டார தென்னகோன், கண்டி மாவட்ட செயலாளர் எச் எம் பி ஹிட்டிசேகர ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

## காமினி செனரத் மீளவும் மறியலில்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியின பிரதானி காமினி செனரத் உள்ளிட்ட மூன்று சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 13ம் திகதி குறித்த நபர்கள் சட்டத்தரணிகள் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகியதை தொடர்ந்து அவர்கள் கைது செய்யப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில் சந்தேகநபர்களை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இலங்கை காப்புறுதி திணைக்களத்திற்கு சொந்தமான 4 பில்லியன் ரூபாய் பணத்தினை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை தொடர்பில் காமினி செனரத் மற்றும் குறித்த திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்களான பியதாச குடாபாலகே, நீல் ஹபுஹின்ன ஆகியோருக்கெதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இணைவு சாத்தியமில்லை கூட்டு எதிர்க்கட்சி அறிவிப்பு

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு அக்கட்சி அழைப்பு விடுத்துள்ளது. எனினும் அக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தில் பங்குதாரராக இருக்கும்வரையில் தாம் அதில் இணைந்து கொள்ளப் போவதில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள ஸ்ரீவஜிராஷ்ரம பௌத்த நிலையத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகை யிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கிறது. குறித்த உணவுப் பொருட்களின் விலை குறைபபினால் மாதம் ஒன்றுக்கு 1.5 பில்லியன் ரூபாய் அரசாங்கத்திற்கு செலவாவதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். அவ்வாறெனில் வருடம் ஒன்றுக்கு 18 பில்லியன் ரூபாயையே அரசாங்கம் செலவு செய்ய வேண்டியுள்ளது.

எனினும் கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் மறைமுகமாக 649 பில்லியன் ரூபாயை வரி மூலம் அறவிடுவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் இடம்பெற்ற மோசடிகளினாலேயே இவ்வாறு வரி அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது.

எனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு- செலவுத் திட்டமானது முழுமையாக மக்களை ஏமாற்றும் வகையில் அமைந்துள்ளது. ஏனெனில் இறக்குமதி செய்யப்படும் புதிய மின்சாரக் கார்களுக்கே வரி விலக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் புதிய மின்சாரக் கார்களை இலங்கையில் இறக்குமதி செய்யமுடியாது. எனவே இவ்வாறாக மக்களை ஏமாற்றும் வகையிலேயே வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவால் பிரதமருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனினும் அவர் ஆணைக்குழுவில் ஆஜராவதற்கு இன்னும் காலம் ஒதுக்கிக் கொடுக்கவில்லை. ஆகவே இவ்வாறான குற்றச்சாட்டுகள் உள்ள அரசாங்கத்திலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அங்கம் வகிக்கிறது. அது தொடர்பில் நாம் கவலையடைகிறோம். மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொள்ளுமாறு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தில் இடம்பெற்றுள்ள மோசடிகளை மறைப்பதற்காகவே எம்மை இணைத்துக் கொள்வதற்கு அத் தரப்பினா் முயற்சிக்கின்றனா் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விளக்கமறியல் நீடிப்பு

மாணவி வித்தியா கொலை வழக்கு நடைபெற்றபோது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் விளக்கமறியலிலிருந்து வரும் பூபாலசிங்கம் இந்திரகுமாரின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவியின் கொலை தொடர்பில் முதலாவது சந்தேக நபராக குறித்த நபர் கைது செய்யப்பட்டிருந்த போது ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகள் நிறைவுற்று சிறைச்சாலை அதிகாரிகள் கூட்டிச் செல்லும்போது குறித்த நபர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரது பெயரை குறிப்பிட்டு அவரை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டிருந்தார்.

இதனையடுத்து குறித்த நபருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் பொலிஸாரை அச்சுறுத்திய வழக்கானது தாக்கல் செய்யப்பட்டு அது விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. இந்நிலையில் நேற்று முன்தினமும் குறித்த வழக்கானது விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது. குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னமும் நிறைவடையவில்லை என பொலிஸார் மன்றுக்கு தெரிவித்தனர். இதன்போது குறித்த நபர் கூண்டில் இருந்தவாறு தனது பிள்ளைகளைகூட பார்க்க முடியவில்லை. தான் செய்யாத தவறுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளேன். சிறைக்குள் இருக்க தனக்கு பைத்தியம் பிடிப்பது போல் உள்ளது என உணர்ச்சிவசப்பட்டு பேசியிருந்தார்.

இதன்போது முன்னரே உங்களை விசாரணை முடிவடையும் வரை அமைதியாக இருக்குமாறு மன்று கூறியிருந்தது. அதனை கேட்காது பேசியதாலேயே இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருந்த போதிலும் மன்று அது தொடர்பாக விசாரணை செய்து வருகின்றது. இந்நிலையில் மீண்டும் நீதிமன்றில் இவ்வாறு பேசி நீதிமன்றை அவமதித்தவழக்கை மீண்டும் தாக்கல் செய்ய வைக்கக் கூடாது என நீதவான் குறிப்பிட்டார். இதனை தொடர்ந்து குறித்த நபரை இம் மாதம் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அது வரை இவ் வழக்கை ஒத்திவைப்பதாகவும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.எம்.எம்.றியால் உத்தரவிட்டார். (இ-4)

## போலி நாணயத்துடன் ஒருவர் கைது

ஒரு மில்லியன் டொலர் முகப் பெறுமதிகொண்ட போலி டொலர் நாணயத்தாள்களுடன் சந்தேக நபர் ஒருவரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

வவுனியா மற்றும் திருகோணமலை முகாம்களைச் சேர்ந்த விசேட அதிரடிப் படையினர நேற்று முன் தினம் கிண்ணியா, மாஞ்சோலை சீமை பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இதனபோதே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

அவரைக் கைது செய்த போது, அவரிடம் இருந்த டொலர் நாணயத்தாளுக்கான செப்பு அச்சுப் பிடிவத்தையும் நாணயத்தாள் அச்சிடப் பயன்படும் சில உபகரணங்களையும் விசேட அதிரடிப் படையினர் பறிமுதல் செய்தனர். (ம)

# தேசிய கராத்தே போட்டி எக்ஸ்புளோரா தங்கம்



வடக்கு மாகாண மற்றும் அகில இலங்கை ரீதியிலான கராத்தே சுற்றுப் போட்டியில், மானிப்பாயிலுள்ள எக்ஸ் புளோரா (Xpllora) கல்வி நிறுவனமானது தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.

இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்திய, தேசியமட்ட கராத்தே தொடரில் ஒரு தங்கப் பதக்கமும், வடக்கு மாகாண கராத்தே சுற்றுப் போட்டியில் மூன்று, தங்கப் பதக்கங்களும், மானிப்பாயிலுள்ள எக்ஸ்புளோரா (Xpllora) கல்வி நிறுவனத்திற்கு கிடைத்துள்ளன.

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் இடம்பெற்று வருகின்ற 42 வது தேசிய கராத்தே சுற்றுப் போட்டியில், நவாலியைச் சேர்ந்த, சுப்பிரமணியம் ரஞ்சித் என்ற ஆசிரியரின் பயிற்சியின் கீழ், மாணவர்களான ஜே. தமிழ்ச்செல்வன் தங்கப்பதக்கத்தினையும், உ. நவீன் மற்றும் ச. சங்கீர்த்தன் ஆகியோர் சிறந்த வீரர்களாகவும் கராத்தே போட்டியில் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.(க)

# சர்வதேச போட்டிகளிலிருந்து சயித் அஜ்மல் ஓய்வு



பாகிஸ்தான் அணியின் முன்னணி பந்துவீச்சாளர் சயீத் அஜ்மல் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த 2008ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகமான அஜ்மல், பாகிஸ்தான் அணியின் நட்சத்திர வீரராக திகழ்ந்தார்.

ஆனால் பலமுறை அவரின் பந்து வீசும் விதம் சர்ச்சைக்குள்ளானது, பந்தை எறிவதாக கூறி பலமுறை அவருக்கு தடைவிதிக்கப் பட்டது.

இந்நிலையில் தடைக்குப் பின்னர் மீண்டும் அணிக்கு திரும்பியவரால் பழைய போர்முக்கு வர முடியவில்லை.

இதன் காரணமாக தற்போது நடைபெற்று வரும் இருபது-20 தொடருடன் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அஜ்மல் அறிவித்துள்ளார்.

35 டெஸ்ட் போட்டிகளில் 178 விக்கெட்டுகளையும், 113 ஒருநாள் போட்டிகளில் 184 விக்கெட்டுகளையும், 64 இருபது-20 போட்டிகளில் 85 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# உலக டென்னிஸ் சம்பியன்ஷிப்; ரோஜர் பெடரர் வெற்றி

லண்டனில் நடைபெற்று வரும் உலக டென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரின் லீக் போட்டிகளில் பெடரர், கோஃபின் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

பெடரர், நடால் உட்பட டொப்-8 வீரர்கள் பங்கேற்கும் உலக டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி லண்டனில் 12ஆம் திகதி தொடங்கியது. இத் தொடரில் கலந்து கொள்ளும் எட்டு வீரர்களும் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு லீக் முறையில் போட்டிகள் நடத்தப்படும்.

லீக் போட்டிகளின் முடிவில் இரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் வீரர்கள் அரையிறுதிப் போட்டிக்கு தகுதிபெறுவர்.

ஐந்தாவது லீக் போட்டியில் இரண்டாம் நிலை வீரரான ரோஜர் பெடரர், மூன்றாம் நிலை வீரரான அலெக்ஸாண்டர் ஸ்வரேவை எதிர்கொண்டார்.

இப் போட்டியில், 7-6, 5-7, 6-1 என்ற செட்கணக்கில் பெடரர் வெற்றி பெற்றார்.

முன்னதாக நடைபெற்ற நான்காவது லீக் போட்டியில் முதல் நிலை வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால் பெல்ஜியத்தின் டேவிட் கோஃபினை எதிர்த்து விளையாடினார். இப் போட்டியில் நடாலுக்கு காலில் அடிப்பட்டது. இருப்பினும் நடால் போட்டியை தொடர்ந்து விளையாடினார். இறுதியில் 7-6, 6-7, 6-4 என்ற செட் கணக்கில் கோஃபின் வெற்றி பெற்றார்.

இதையடுத்து ரபேல் நடால் காயம் காரணமாக இத்தொடரில் இருந்து விலகினார்.

அவருக்கு பதிலாக மற்றொரு ஸ்பெயின் வீரரான பப்லோ கரினீ பஸ்டா சேர்க்கப்பட்டுள்ளார். (க)



# உலக ஆண்கள் டென்னிஸ் போட்டி; அமெரிக்க வீரர் ஜாக் சோக் வெற்றி



உலக ஆண்கள் டென்னிஸ் சம்பியன் ஷிப் போட்டியில் அமெரிக்க வீரர் ஜாக் சோக், மரின் சிலிச்சை வீழ்த்தி முதல் வெற்றியை ருசித்தார்.

உலக தரவரிசையில் டொப்-8 இடங்கள் வகிக்கும் வீரர்கள் மட்டுமே பங்கேற்கும் 'ஏ.டி.பி. டூர் இறுதி சுற்று' என்று அழைக்கப்படும் உலக ஆண்கள் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி லண்டனில் நடந்து வருகிறது.

எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நடைபெறும் இந்த போட்டியில் பங்கேற்றுள்ள 8 வீரர்கள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளனர். இதன்படி 'போரிஸ் பெக்கர்' அணி பிரிவில் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), அலெக்சாண்டர் ஸ்வெரேவ் (ஜெர்மனி), மரின் சிலிச் (குரோஷியா), ஜாக் சோக் (அமெரிக்கா) ஆகியோரும், 'பீட் சாம்ப்ராஸ்' அணி பிரிவில் டொமினிக் திம் (அவுஸ்திரியா), கிரிகோர் டிமிட்ரோவ் (பல்கேரியா), டேவிட் கோபின் (பெல்ஜியம்) ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

காயம் அடைந்த ரபெல் நடால் விலகியதால் அவருக்கு பதிலாக பாப்லோ கார்னோ பஸ்டா (ஸ்பெயின்) சேர்க்கப்பட்டுள்ளார்.

ஒவ்வொரு வீரரும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற வீரர்களுடன் தலா ஒரு முறை மோத வேண்டும்.

லீக் முடிவில் இரு பிரிவிலும் முதல் 2 இடங்களை பிடிக் கும் வீரர்கள் அரைஇறுதிக்கு தகுதி பெறுவார்கள்.

மூன்றாவது நாளான நேற்று முன்தினம் நடந்த ஒற்றையர் பிரிவு ஆட்டம் ஒன்றில் உலக தர வரிசையில் 9-வது இடத்தில் இருக்கும் ஜாக் சோக் (அமெரிக்கா), 5-ஆம் நிலை வீரர் மரின் சிலிச்சை (குரோஷியா) சந்தித்தார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ஜாக் சோக் 5-7, 6-2, 7-6 (7-4) என்ற செட் கணக்கில் மரின் சிலிச்சை வீழ்த்தி முதல் வெற்றியை ருசித்தார்.

மரின் சிலிச் தொடர்ந்து சந்தித்த 2-வது தோல்வி இதுவாகும். (க)

# சீனா ஓபன் பட்மிண்டன்; 2 வது சுற்றில் சாய்னா நேவால்



சீன ஓபன் பட்மிண்டன் தொடரின் முதல் சுற்று போட்டியில் இந்தியாவின் சாய்னா நேவால் வெற்றி பெற்றார்.

சீன ஓபன் சுப்பர் சீரிஸ் பட்மிண்டன் தொடரின் பிரதான சுற்றுப் போட்டிகள் புஸ்கோவ் நகரில் நேற்று புதன்கிழமை தொடங்கியது.

நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றுப் போட்டியில் இந்தியாவின் சாய்னா நேவால், அமெரிக்காவின் பெய்வென் ஸாங்கை எதிர்கொண்டார்.

இப் போட்டியின் முதல் சுற்றை சாய்னா 21-12 என கைப்பற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது சுற்றிலும் அதிரடியாக விளையாடிய சாய்னா அந்த சுற்றையும் 21-13 என கைப்பற்றினார். இதன்மூலம் 21-12, 21-13 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்ற சாய்னா இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

ஆண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்று போட்டியில் இந்தியாவின் ரங்கிரெட்டி - சிராக் ஷெட்டி ஜோடி, சீனாவின் லியூ - ஸாங் ஜோடியுடன் மோதியது. இப்போட்டியில் சீன ஜோடி 21-13, 21-13 என்ற செட்களில் இந்திய ஜோடியை வீழ்த்தியது. (க)

## ஏக்கமடைந்த சிறுமி...

மாணவி தனது சகோதரியான சிறுமிக்கு சுனாமி வரப்போவதாகத் தெரிவித்து பாடசாலை விடப்பட்டதாக கூறியதாகவும் இதனையடுத்து மேற்படி சிறுமி மூச்சுவிடமாட்டாது அந்தரப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

நோய்வாய்ப்பட்டிருந்த 13 வயதுடைய அச்சிறுமி மூச்சுவிடமாட்டாது அந்தரப்பட்டதையடுத்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு மரணமடைந்துள்ளார். (ம-60)

## வாள்வெட்டு தொடர்பில்...

கடமையில் ஈடுபடும் பொலிஸார் வீதிகளால் செல்பவர்களின் வாகன அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றை பார்வையிட்டு தண்டம் வழங்குவதிலேயே குறியாக இருப்பதாகவும், கிராம பகுதிகளுக்குள் நடைபெறுகின்ற வாள்வெட்டு சூத்திரதாரிகளை கோட்டை விடுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்:குடாநாட்டில் அண்மைக்காலமாக சமூகவிரோத செயல்கள் அதிகரித்து காணப்படுகிறது. அதிலும் கடந்த ஒரு வார காலமாக வாள்வெட்டு சம்பவங்கள் திடீரென அதிகரித்து வருகின்றன. நாளுக்கு நாள் பலர் வாள்வெட்டில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

ஒரு வாரத்தில் 30 க்கும் மேற்பட்ட சமூக விரோத செயல்கள் இடம்பெற்றுள்ளதுடன் 20க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தும் பாதிக்கப்பட்டும் உள்ளதுடன், பல லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

வாள்வெட்டு, திருட்டு, கொலை முயற்சி, அச்சுறுத்தல், பெற்றோல் குண்டு வீசுதல் போன்ற அடாவடித்தனத்தில் சில குழுக்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றன.

அதிகமாக மாலை நேரங்களில் நவாலி, ஓட்டுமடம், தட்டாதெரு சந்தி, சுன்னாகம், யாழ்.நகர்ப்பகுதி, மானிப்பாய், கோப்பாய் மற்றும் கலட்டி பகுதிகளில் இந்தச் சம்பவங்கள் அதிகமாக நடைபெற்றுள்ளன.

முகத்தை மூடிய நிலையில் தலைக்கவசம் அணிந்து மூன்றுக்கும் அதிகமான மோட்டார் சைக்கிள்களில் வந்து திரியும் இந்த சமூக விரோத கும்பல்கள் இளைஞர்கள், முதியவர் என பார்க்காது கொலைவெறி தாக்கு தலை மேற்கொண்டு விட்டு செல்கின்றனர்.

இதனால் வீதியில் எவரும் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் நடமாட முடியாத நிலை தோன்றியுள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையிலேயே பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். மேலும் நேற்று முன்தினம் நடைபெற்ற வாள்வெட்டு சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் சிசிரிவி கமராக்களை பரிசோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (ம-4)

## தமிழ் மக்கள்...

தமிழ் மக்கள் பேரவை தடுக்காது என்றும், தமிழ் மக்கள் பேரவையில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள் பேரவையின் பெயரை விடுத்து சுயமாகத் தாம் போட்டியிட நினைத்தால் அதனைத் தடுத்து அவர்களின் தனி மனித சுதந்திரத்தில் பேரவை தலையிடாது எனவும்,

தேர்தல் அரசியலில் ஈடுபடுவதில்லை என்ற பேரவையின் கொள்கையில் உறுதியாக இருப்பதுடன் பேரவை தயாரித்த தீர்வுத் திட்ட வரைபு உள்ளிட்ட தமிழ் மக்களின் உரிமைசார் கொள்கையில் பேரவை என்றும் உறுதியாக இருக்கும் எனவும்,

தேர்தல் என்பது மக்களின் ஆணையைப் பெறுகின்ற தீர்ப்பு என்பதால், தமிழ் மக்கள் தமது வாக்குகள் மூலம் வழங்கும் தீர்ப்புகளை பேரவை மதிப்போடு ஏற்றுக்கொள்ளும் எனவும் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

இதேவேளை தமிழ் மக்கள் பேரவை விரைவில் கூடி இது தொடர்பான தனது உத்தியோகபூர்வ அறிக்கையை வெளியிடும் எனவும் பேரவை வட்டாரத் தகவல்கள் உறுதி செய்துள்ளன. (ம)

# வட மாகாண திணைக்களத்துக்கு புதிய அதிகாரிகள் நியமனம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண திணைக்களங்களின் புதிய தலைமை அதிகாரிகளுக்கான புதிய நியமனக் கடிதங்களை வடக்கு மாகாண ஆளுநர் ரெயினோல்ட் கூரே நேற்றைய தினம் வழங்கி வைத்தார்.

யாழ்.மாநகரசபை ஆணையாளராக பதவி வகித்த பொ.வாகீசன் வடமாகாண கூட்டுறவு ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பருத்தித்துறை பிரதேச செயலக முன்னாள் செயலாளராக இருந்த ஆர்.ரி.ஜெயசீலன் யாழ்.மாநகர சபை ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளராக இருந்த சிவராஜலிங்கம் விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவதன் காரணமாக தற்காலிக பணிப்பாளராக எஸ்.பி.சிவநேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆளுநர் அலுவலகத்தில் நேற்று 3.30 மணியளவில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண சபை பிரதம செயலர் ஏ.பத்திநாதன், ஆளுநரின் செயலர் எல்.இளங்கோவன், உதவிச் செயலர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ம-4)

# மனித உரிமைகளை உறுதிப்படுத்துவது ஒரே நாளில் நடந்துவிட முடியாது

## ஜெனிவா அமர்வில் ஹர்ஷடிசில்வா

(ஜெனிவா)

இலங்கையில் மனித உரிமைகளை மீள்நிறுவ அரசு தொடர்ந்து முயற்சித்து வருவதாகவும் எனினும் இலங்கை போன்ற ஜனநாயக நாட்டில் மனித உரிமைகளை வேகமாக மீள்நிறுவ முடியாதுள்ளது என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அவையில் நேற்று பேசிய இலங்கைப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா மனித உரிமைகள் அமர்வின் மூன்றாவது சுற்று காலாந்தர மதிப்பாய்வை முன்வைத்துப் பேசியபோதே இலங்கைக் குழுவினர் இவ்வாறு தெரிவித்தனர்.

தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரத்துறை பிரதியமைச்சர் டொக்டர் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான குழு மேற்படி அமர்வில் கலந்துகொண்டுள்ளது.

இதில் பேசிய பிரதியமைச்சர் தெரிவித்ததாவது,

சவால்கள் இல்லாத நாடுகளே இல்லை. எந்தவொரு நாட்டிலும் அந்நாட்டுச் சட்டங்கள் முழுமையாக அமுல் ஆவதில்லை. முழுமையான அர்ப்பணிப்புடன் இயங்கினாலும்கூட, மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதும் அதைப் பாதுகாப்பதும் ஒரே நாளில் நடந்து விடக் கூடியது அல்ல.

மனித உரிமைகளை முழுமையாக அமுல்படுத்துவது குறித்த எமது முயற்சிகள் மீதான சர்வதேசத்தினது விமர்சனங்களை வரவேற்கிறோம். எமது செயற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடவும் நாம் தயாராக உள்ளோம்.

ஆனால், எமது இந்த முயற்சியை சர்வதேசத் தலையீடுகளின் மூலம் குழப்புவதற்குச் சில சக்திகள் இயங்குவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எனினும், மனித உரிமைகளை முழுமையாக நாட்டில் அமுல்படுத்துவதில் இலங்கை அரசு முழுமனதுடன் உழைக்கும்.

இவ்வாறு பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். (ம)

# உள்ளூராட்சி சபை தேர்தலில் மகிந்தவுடன் இணைய மைத்திரிபால சிறிசேன தயார்

(கொழும்பு)

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்புடன் இணைந்து செயற்படுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தயாராகவிருப்பதாக அமைச்சரவை பேச்சாளரும் விளையாட்டுத் துறை அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், ஒன்றிணைந்த எதிர்க்கட்சியுடன் இணைந்து சுதந்திர கட்சியாக தேர்தலில் போட்டியிட எதிர்பார்த்துள்ளோம். அதற்கான முயற்சிகளில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஈடுபட்டு வருகிறார்.

இரண்டு பிரிவுகளாகக் காணப்படும் கட்சியை ஒன்றிணைக்க நாம் கடுமையாக உழைத்து வருகிறோம். அதன்படி இரண்டு பிரிவுகளை ஒன்றிணைப்பதற்கு தயாராக விருப்பதாகவும், அதற்காக வேண்டிய தியாகத்தை செய்ய தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

எனவே, ஒரிருவர் சொல்வதை கேட்காது இணைந்து போட்டியிடுவது குறித்து ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தீர்மானிக்க வேண்டும்.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனும் கலந்துரையாட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை, அவ்வாறு ஒன்றிணைந்து செயற்படும் பட்சத்தில் தேர்தல் சின்னம் எதுவாக அமையும் என கேள்வி எழுப்பப்பட்ட நிலையில், அது அனைவரும் ஒன்றிணைந்த பின்னர் தீர்மானிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (ம)

## தஸநாயக்கவுக்கு விளக்கமறியல்

முன்னாள் கடற்படை பேச்சாளர் டீ.கே.பி. தஸநாயக்க உள்ளிட்ட கடற்படையினர் ஆறு பேரும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதவான் லங்கா ஜயரட்ன நேற்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

அத்துடன், தற்போது வெலிசர கடற்படை இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் முன்னாள் கடற்படை பேச்சாளரை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றுமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம)

## கஜேந்திரகுமார்...

றைய தினம் தேர்தல்கள் ஆணையாளரை சந்தித்து தமது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளதுடன் பொதுச் சின்னம் ஒன்றையும் கோரியுள்ளனர்.

பொது அணிக்கான பொதுச் சின்னம் வழங்குவதை தேர்தல் ஆணையாளர் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (ம)

# தமிழ் அரசியல் கைதி வழக்கில் வவுனியா நீதிமன்றில் முன்னிலையாக சாட்சி ஒருவர் இணங்கியுள்ளார்

(கொழும்பு)

இலங்கையின் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று தமிழ் அரசியல்கைதிகள் தொடர்பான வழக்கில் சாட்சியமளிப்பதற்கு, சாட்சியாளர்களில் ஒருவர் சம்மதம் தெரிவித்துள்ளார்.

குறித்த மூன்று தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை வவுனியாவிலிருந்து அநுராதபுரத்திற்கு மாற்றியமைக்கு எதிராக கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டமா அதிபர் திணைக்கள சட்டத்தரணி, வவுனியா நீதிமன்றில் முன்னிலையாகி சாட்சியமளிப்பதற்கு சாட்சியாளர் ஒருவர் தயாராக உள்ள விடயத்தை நீதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்தார். ஏனைய இரு சாட்சியாளர்களும் வெளிநாடுகளில் உள்ளதால், அவர்களை தொடர்புகொள்ள முடியாதிருப்பதாகவும், அதற்கு இருவார காலம் அவகாசம் வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

இதனையடுத்து வழக்கு எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ராசதுரை திருவருள், மதியரசன் சுலக்ஷன் மற்றும் கணேசன் தர்ஷன் ஆகிய மூவர் தொடர்பான வழக்கு கடந்த நான்கு வருட காலமாக வவுனியா மேல் நீதிமன்றில் நடைபெற்று வந்தது. இவர்களுக்கு எதிராக சட்டமா அதிபரால் குற்றப்பகிர்வு பத்திரமும் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கிற்கான சாட்சியப்பதிவும் இடம்பெறவிருந்த சந்தர்ப்பத்தில், அநுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றப்பட்டது.

இதற்கு எதிராக வடக்கு கிழக்கில் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, மேன்முறையீடும் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## புத்தரை பச்சை...

மாக உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதன்படி குறித்த பிரித்தானிய பெண்ணுக்கு 8 இலட்சம் ரூபாய் நட்டஈடு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம)

## பிரித்தானிய பாரா...

தலைவர் போல் ஸ்குலி இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை ஆணையாளரிடம் இது தொடர்பில் விசாரணை நடத்துமாறு கோரியுள்ளார். இலங்கையில் சர்வதேச ஊடகமொன்று இலங்கையில் சித்திரவதைகள் இடம்பெறுவதாகக் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இராணுவத் தளப...

டுள்ளார்.

கடந்த 1996ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் சாவகச்சேரி நாவற்குழி பகுதியில் வைத்து நாவற்குழி இராணுவ முகாம் தளபதியான துமிந்த கெப்டிவெலான கைது செய்து சென்ற நபர்கள் இராணுவத்தால் காணாமல் ஆக்கப்பட்டதாகவும், அவர்களை மீட்டுத் தருமாறு கோரி அவர்களது உறவினர்களால் மூன்று ஆட்கொணர்வு மனுக்களானது சட்டதரணி குருபரன் மற்றும் சுபாஷினி ஆகியோரால் யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ் மனுவில் நாவற்குழி இராணுவ முகாம் தளபதி துமிந்த கெப்டிவெலாவன முதலாம் எதிரியாகவும், இரண்டாம் எதிரியாக இராணுவ தளபதியும், மூன்றாம் எதிரியாக சட்டமா அதிபரும் பெயர் குறிப்பிடப்பட்டு இவ் மனுவானது தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதன்படி இவ் மனுத் தொடர்பான விசாரணையானது நேற்றைய தினம் யாழ் மேல் நீதிமன்றில் இடம்பெற்றிருந்தது. இதன் போதே நீதிபதி மேற்படி உத்தரவை பிறப்பித்திருந்தார். இதன்படி நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டிருப்பதாவது,

சர்வதேச குற்றவியல் சட்டத்தின் கீழ் வலிந்து காணாமல் ஆக்குதல் என்பது குற்றச் செயல் என்பதுடன் அது மனிதாபிமானத்திற்கு எதிரான செயற்பாடு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றைவிட ஐக்கிய நாடுகள் ரூவாண்டா யுத்தக்குற்ற நீதிமன்றமும், ஐக்கிய நாடுகள் யூஸ்கோஸ்லேவியாவின் யுத்தக் குற்ற நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்கள் வலிந்து காணாமல்போதல் குற்றச் செயல் எனவும் மனிதாபிமானத்திற்கு எதிரான செயற்பாடு எனவும் தீர்ப்பளித்துள்ளன.

இவ்வாறான நிலையில் இவ் வழக்கும் காணப்படுகின்றது. எனவே இவ் வழக்கு தொடர்பில் எதிரிகளாக குறிப்பிடப்பட்டுள்ள முதலாம் எதிரியான துமிந்த கெப்டிவெலான மற்றும் தற்போதைய நாட்டின் இராணுவ தளபதி ஆகியோர் எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் திகதி இந் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும்.

இது தொடர்பான அழைப்புக் கட்டளையை அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறும், இது தொடர்பான அறிவுறுத்தலை முதலாம், இரண்டாம் எதிரிகளுக்கும் சட்டமா அதிபருக்கும் அனுப்பி வைக்குமாறு யாழ்.மேல் நீதிமன்ற பதிவாளருக்கு பணிப்புரை பிறப்பிப்பதாக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டார்.(ம-4)

## பரீட்சைகள் திணை...

நியமிக்கப்பட்டுள்ளார் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் டப்ளியூ. எம்.என்.ஜே.புஷ்பகுமார நேற்று முன்தினம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் கல்வி அமைச்சுக்கு இடமாற்றப்பட்டார்.

இதனால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கே பதில் பரீட்சைகள் ஆணையாளராக பீ. சனத் பூஜித நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

## யாழ்ப்பாண கோட்...

சிறிசேனவுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

நேற்று ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, குடாநாட்டில் உள்ள தனியார் காணி விடுவிப்பு தொடர்பாக ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் நகர்ப்பகுதியில் தனியார் காணிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை யாழ். கோட்டைக்குள் அனுப்பிவிட்டு தனியார் காணிகளை உரியவர்களிடம் ஒப்படைக்கலாம். பொது காணியாக இருந்தால் அதை பொதுமக்கள் சேவைக்கு பயன்படுத்த முடியும் என தெரிவித்தார்.

அப்போது, கோட்டை ஒரு சுற்றுலாத் தளம் என்றும் அது தொல்பொருள் திணைக்களத்துக்குரியது. அதில் எவ்வாறு இராணுவத்தினர் நிலைகொள்ளமுடியும் என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட போது,

கடந்த ஆங்கிலேயர் ஆட்சியில், அதாவது பிரிட்டிஷ், டச்சு, ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் அங்கு இராணுவத்தினர் இருந்தார்கள், புலிகளும் இருந்தார்கள். அந்த நேரம் தொல்பொருள் திணைக்களம் எங்கு போனது? அப்போது இது தொடர்பில் யாரும் கேள்வி எழுப்பவில்லை தானே. இப்போது ஏன் கேட்க வேண்டும் என ஆவேசமாக தெரிவித்தார்.

அப்போது, தற்போது யுத்தம் இல்லை என்றும், வன்னியில் பொதுமக்களின் காணிகளை தொல்பொருள் திணைக்களத்தினர் அடாத்தாக கைப்பற்றி வருகிறார்கள், அது தொடர்பில் நீங்கள் என்ன கூறுகிறீர்கள் என கேட்ட போது,

யுத்தம் இல்லாததால் தான் சுத்தம் செய்வதற்கு இராணுவத்தினர் இங்கு உள்ளார்கள்.

வன்னியில் தொல்பொருள் திணைக்களத்தினர் பொதுமக்களின் காணிகளை கைப்பற்றுவது தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது. நீங்கள் கேட்டவுடன் நேரடியாக பதில் கொடுக்க நான் கடவுள் இல்லை எனவும் தெரிவித்தார். (ம-9)


உங்கள் மக்களுக்கு சேவையாற்ற ஒரு அரிய வாய்ப்பினை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உங்களுக்கு வழங்குகிறது.



எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பிரதேச வட்டாரங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளர்களை (ஆண்/பெண்) அழைக்கிறோம்.

பலம் பொருந்திய தேசியக்கட்சியில் உங்களுக்கு ஓர் ஆசனம்

அழையுங்கள் :
0774425320, 0778928094
முகவரி:
இல.36, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

"மறுக்கமுடியாத மாற்றத்தில் புரட்சி படைப்போம்" தமிழா!

த.ரஜீவ்
அமைப்பாளர்
யாழ்.தேர்தல் தொகுதி

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி
ශ්‍රී ලංකා පොදුජන පෙරමුණ
(1365)

SPOKEN ENGLISH
ஆரம்பம் : 18.11.2017
(சனி 3 - 5 pm)
பிரிவு II
NAC மானிப்பாய் 0776947162
(1357)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
• அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
• மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
• விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
• எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு நங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு
(C-364)
UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

தேவை
நெல் நாற்று
விலைக்கு கொள்வனவு செய்யப்படும்
தொடர்பு: 0770366257

தேவை
புத்தகம் கட்டுநர்
அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும்.
தீபம் பிறிண்டேர்ஸ்
இல.717, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0772506234
(1364)

அமெரிக்க நிறுவன சவூதி கிளைக்கு சிகரம் மூலம் விண்ணப்பித்தவர்களில் ஒரு தொகுதியினர்
மாதம் 50,000/- உடன் வேலைவாய்ப்பு பெற்றனர் (விபரங்களை எமது அலுவலகத்தில் நேரில் பார்வையிடலாம்)
DUBAI
ஹொட்டேல் சுத்தீகரிப்பாளர்
சம்பளம் 40,000/-
இலவச உணவு, தங்குமிடம் + Tips + OT
(வயதெல்லை 19 - 35)
Qatar டக்சி ஓட்டுநர், Kuwait சமையலாளர், A/C Technician, Dubai அச்சக வேலையாள் (பெண்கள்), Mechanical Technician வெற்றிடங்களும் உண்டு
(C-389)
மேலதிக விபரங்களுக்கு 0777 324 004
TGL SINCE 1990
Trans Gulf (Pvt) Ltd.,
90, First Floor, Chatham Street, Colombo 1
T.P.: 0114 426 222
www.tgl.lk
SIKARAM ACADEMY
Business - Hospitality - Media
FAST TRACK to CAREERS
175. 1ம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி). யாழ்ப்பாணம்
தொ.பே: 021 - 222 00 11
www.sikaram.lk

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
அமெரிக்க லொத்தர் விசா (Green Card) முடிவடைய இன்னும் சில நாட்களே உள்ளன. உடனடியாக எம்மிடம் பதிவுகளை மேற்கொண்டு இவ் வாய்ப்பினை பெற்றிடுங்கள்
அண்ணா பொதிகள் சேவை
976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | மீசாலை | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா
(C-371)

ஒத்துமாறல்
வவுனியா பாடசாலையில் 3-ம் வகுப்பின் தரம் 1 (அ) ஆம் தரத்தில் உள்ள குடியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் யாழ்ப்பாணத்துக்கு ஒத்துமாற விரும்புகிறார்.
தொடர்பு: 0765790936

O/L MATHS SEMINAR
Mr. C.K.B. தயாளன்
(யாழ்- கொழும்பு முன்னணி ஆசிரியர்)
18/11 (சனி), 19/11 (ஞாயிறு) - 8 - 2 pm
தரம் 10, 11 இற்குரிய அனைத்து தேர்ச்சிகளும் மீட்டல் செய்யப்படும்.
கணித பாடத்தில் சித்தி தேவையான அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம் (Day Class, A/L)
O/L Business Studies & Accounting
Mr.BALAKAJEN
26/11 (ஞாயிறு) - 8 - 2 pm
இடம் : NEC யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவில் அருகில்)
0777492794, 0774696695
(1343)

அமெரிக்க லொத்தர் விசா
நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்
இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
இன்னும் 2 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன.
0768226243
பெரும்பாலும் அடுத்த வருடம் இந்த இலவச வீசா வாய்ப்புக்கள் இருக்காது. ஆகவே இப்போதே முந்துங்கள்.
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

வெளிநாடு செல்வது எனது இலட்சியம் எனது குடும்ப பொருளாதார வசதியை பொருத்தளவில் அது கனவு எனது இலட்சியத்தினையும் கனவினையும் ஒரு கணத்தில் நிறைவேற்றிய V2 TRAVELS க்கு எனது இதயபூர்வமான நன்றிகள்.
2016 ல் எமக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்
குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்



ஜேசுதாசன்-குகப்பிரியா
அமெரிக்கா விசா வெற்றியாளர்
(C-364)
இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்
V2 TRAVELS

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | A9 வீதி, பசுமை ஆலையடிக்கு அருகே | 10, பேருந்து நிலையம் | மூடக்காட்டு சந்தி | 324, யாழ பிரதான வீதி | யாழ் வீதி, வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699892 | 0768226230 | 0776697960 |


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.